மலாயாவின் மாட்சியும்
காஷ்மீர் அமர்நாத் காட்சியும்.



கோலாலம்பூர் கந்தசாமி கோயிலில்

ஆசிரியர்: **கிருபானந்தவாரி.**

உ

முருகா

மலாயாவின் மாட்சியும் - காஷ்மீர் அமர்நாத் காட்சியும்

★

ஆசிரியர் :

திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்

★

திருப்புகழமிர்தம்,
144, சாமிநாயக்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2.

1956.

முதற் பதிப்பு :— நவம்பர்—1956. 3000 பிரதிகள்.

திருப்புகழமிர்தம் அச்சகம்,
144, சாமிநாயக்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை. சென்னை-2.

உ

முருகா

முன்னுரை

> அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
> என்னுடைய ரேனும் இலர்.

என்கின்றார் திருவள்ளுவதேவர். அறிவு என்றும் நமக்கு உறுதுணையாக இருந்து துணைபுரிவது. பொருள் முதலிய யாவும் மாண்டால் உடன் வரமாட்டா. அறிவு பிறவிகள் தோறும் தொடர்ந்து வரக் கூடியது.

அறிவை வளர்ப்பதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று நல்ல நூல்களைப் படிக்கவேண்டும்; மற்றொன்று பலப்பல தேயங்களைச் சுற்றி ஆங்காங்குள்ள தக்கார்களுடன் பழகவேண்டும். முன்னையது நூலறிவு; பின்னையது அநுபவ அறிவு.

முருகன் அருளால் இந்த வாய்ப்பு எளிதாக எளியேனுக்குக் கிடைக்கின்றது; சதா நூல்களோடு பழகுவதும், இடையறாது சுற்றுப் பிரயாணம் செய்வதும், அவன் புகழை ஆங்காங்கு ஓதுவதும், ஆங்காங்குள்ள தக்கார்களுடன் பழகுவதும் ஆகிய நலன்கள் தாமே எனக்கு இறையருளால் அமைந்தன.

பலமுறை பலர் அடியேனை மலாயாவுக்கு அழைத்திருந்தார்கள். வடலூர் சத்தியஞான சபைத் திருப்பணியில் முழுப்பொறுப்புடன் ஈடுபட்டிருந்தபடியால் அப்போது அந்த அழைப்புக்களுக்கு இணங்க இயலவில்லை.

சென்ற ஜய ஆண்டில் வடநாட்டு யாத்திரை செய்துகொண்டிருந்தபோது மலாயாவின் ஒரு நகரமாகிய சிரம்பானிலிருந்து, திரு. அ.பழ.பழநியப்பசெட்டியார் அவர்களும், திரு.N.தம்பித்துரையவர்களும் அடியேனை மலாயர்வுக்கு வருமாறு அழைத்தார்கள். அவர்களுடைய அன்பு நிறைந்த அழைப்புக்கிணங்கி இப்போது மலாயாவில் சுற்றி சைவப் பயிர் புரிய நேர்ந்தது. தமிழ் என்னும் மழை பொழிந்து, சைவம் என்னும் பயிர் புரிந்து, காமாதி குற்றங்களாகிய களை களைந்து நான்கு மாதங்கள் மலாயா முழுவதும் ஒரு அளவுக்குத் தொண்டு புரிந்தேன். பல அன்பர்களுடைய பண்புகளைக் கண்டு மகிழ்ந்தேன். பல அன்பர்களுடைய நட்பு என்ற சங்கிலியால் கட்டுண்டேன். பலருடைய துன்பக் கண்ணீரில் நனைந்தேன். எத்தனை எத்தனையோவித அன்புகளையும் பண்புகளையும் பார்த்து உவந்தேன்.

எனது வாழ்நாளில் தாய்நாடாகிய இந்தியாவை விடுத்து நான்கு மாதம் பிரிந்திருந்தது இதுதான் முதல் தடவை. அடிக்கடி ஈழநாடு சென்று யாழ்ப்பாணம் முதலிய பகுதிகளிலும், கொழும்பிலும் பன்முறை சைவ நெறியைப் பரப்பியுளேன். ஆனல் தொடர்ந்து நான்குமாதம் மலாயாவில் தங்கியபோது அடிக்கடி பழநியப்பனையும், தில்லை அருட் கூத்தனையும், மதுரை அங்கயற் கண்ணம்மையையும் நினைவு கூர்ந்தேன்.

ஆனல் எனக்கு ஒரு திருப்தி. தாயகமாகிய தமிழ்நாட்டை விடுத்துக் கடல் கடந்து பல காலமாக மலாயாவில் வசிக்கும் இலங்கை இந்தியத் தமிழன்பர்கட்குத் தமிழ் விருந்து புரிந்து அவர்களை மகிழ்விக்கும் வாய்ப்பு இந்தப் பயணத்தில் அமைந்தது. நெடுங்காலமாக சமய நுட்பங்களையுந் திட்பங்களையுஞ் சிந்தியாது சாமானியமான பொருளீட்டத்திலேயே அழுந்தி வாழ்ந்த பலர் செஞ்சொல் விரிவுரைகளைச் செவிமடுத்து வாழ்வில் ஒரு மறு மலர்ச்சியுற்றார்கள்,

மலாயா தீபகற்பத்தின் தெற்கு வடக்கு மேற்கு கிழக்கு என்ற நான்கு திசைகளின் கடல்களையுங் கண்டு களித்தேன். மலாயாவின்

பலப்பல செய்திகளையும் அறிந்தேன். இவற்றை ஒரு நூலாக எழுதி உதவுதல்வேண்டும் என்று எனது நண்பரும் காந்தியடிகளின் தூய அன்பரும் ஆகிய வேலூர் உயர்திரு மு. பெருமாள் அவர்கள் மூன்று நான்கு கடிதங்கள் எழுதினர். அவருடைய வேண்டுகோளை நிறைவேற்று முகத்தால் இந்நூலை எழுதி வெளியிடலானேன்.

மலாயாவுக்கு வரும் வாய்ப்பு இல்லாத இலங்கை இந்தியத் தமிழ் அன்பர்கட்கும், வந்தவர்கட்கும், இனி மலாயாவிலேயே வாழுகின்றவர்கட்கும் இந்நூல் சில தெளிவுகளைத் தரும்.

இந்த மலாயா பிரயாணத்திற்கு மூலகாரணமாக நின்ற சிரம்பான் உயர்திரு அ. பழ. பழனியப்ப செட்டியார், உயர்திரு. N. தம்பித்துரை என்ற அன்பர்கட்கும், என்பால் அன்புகொண்டு உபசரித்த ஏனைய அன்பர்கட்கும் எனது மனப்பூர்வமான நன்றி. பன்னிருகைப் பரமனது பரிபூரண கருணை எங்கும் நின்று எல்லா நலன்களையும் பாலிப்பதாக.

அன்பன்

கிருபானந்தவாரி

படங்கள்

அமர்நாத் படங்கள் எடுத்தது : திரு. அ. கு. பாண்டுரங்கம்.


MALAYA
மலாயா
ரோடு வழி
இரயில்வே
மகாண எல்லை
THAILAND
தாய்லாந்து
பெர்லிஸ்
PERLIS
அலோர்ஸ்டார்
கெடா
KEDAH
சுங்கைபடாணி
வெல்லஸ்லி
WELLESLEY
பட்டாவொர்த்
குலிம
பினாங்கு
தீவு
கிரிக்
பேரா
PERAK
தைப்பிங
கோல கங்சார்
ஈ.போ
கோபெங்
பத்துகாஜா
கம்பார்
சித்தியவான்
KLANTAN
கிளண்டரன்
கோடாபாரு
கோலா திரெங்கானு
திரெங்கானு
TRENGANNU
பஹாங்
PAHANG
கோலாலிபிஸ்
n
w
s


கடல்
மலாக்கா ஜலசந்தி
பிடோர்
தெலுக் ஆன்சன்
ஊதான்மெலிந்தாங்
பர்ணம் நதி
பிரேசாஹில்
ரவுப்
குவாண்டான்
சிலாங்கூர்
SELANGOR
மெண்டகாப்
டெமர் லோ
கோலா பகாங்
கோலாசிலாங்கூர்
ரவாங்
போர்ட் சுவெட்டன்ஹாம்
கோலாலம்பூர்
கிள்ளான்
காஜாங்
நெகிரி செம்பிலான்
NEGRI SEMBILAN
சிரம்பான்
போர்ட்டிக்சன்
மலாக்கா
MALACCA
மெர்சிங்
JOHORE
ஜோகூர்
மூவார்
குளுவாங்
சுமத்ரா தீவு
SUMATRA
ஜோகூர் பாரு
SINGAPORE
சிங்கப்பூர்

உ
முருகா

மலாயாவின் மாட்சி

எல்லாம் வல்ல இளம்பூரணன் எந்தை கந்தவேள் கருணையைத் துணையாகக்கொண்டு மன்மத-பங்குனி 14-ம் நாள் 27—3—56 மலாயாவுக்குப் புறப்படுவதென்று திட்ட மிட்டேன். இடையருது இந்தியாவில் 30 நாட்களில் 35 ஊர்கட்குச் சென்று சைவமும் தமிழும் பரவுமாறு விரி வுரைத்தொண்டு நிகழ்த்திவரும் அடியேனுக்கு, இந்தியாவை விட்டு அயல் தேசம் போகின்றதென்ருல் மிகுந்த சிரமமாகவே யிருந்தது. பலப்பல அழைப்புகளை மறுத்து விட்டுத்தான் புறப்பட நேர்ந்தது.

எனது நண்பரும் சைவ பரிபாலகரும் தருமகுண சீலரு மாகிய சென்னை சிந்தாதிரிப்பேட்டை உயர்திரு கு. ஐயா, சுப்ரமண்ய முதலியார் அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு, திருஞான சம்பந்தர் எலும்பைப் பெண்ணுக்கிய திருத்தலமாகிய திருமயிலாப்பூர் சென்ருர். அங்கு கபா லீச்சுரப் பெருமானுக்கும் கற்பகவல்லியம்மைக்கும் மயிலை மேவிய மயிலப்பனுக்கும் அர்ச்சனைபுரிந்து திருவெண்ணீறு பெற்று திருவருட்பேற்றுடன் திரும்பினேன்.

அடியேனை வழியனுப்புவதற்கு சென்னையிலிருந்தும் அயலூர்களிலிருந்தும் பல அன்பர்கள் குழுமினுர்கள். மதுரை ஜெ. மு. குருநமசிவாயம்; அவருடைய இளவல் பாலசுப்ரமண்யம்; வேலூர் மு. பெருமாள்; சென்னை சுந்த ரம் பிள்ளை; ஏகாம்பர முதலியார்; கே. எம். ராஜரத்ன முதலி

யார்; சோக்கம்மாள்; சுப்பராவ் முதலிய அன்பர்கள் விமான நிலையம் வரை வந்து இறைவனை வாழ்த்தி விடை தந்து உபசரித்து அனுப்பினார்கள். எண்ணில்லாத மாலைகள் சூட்டித் தங்கள் அன்பை வெளிப்படுத்தினார்கள்.

ஒரு மனிதன் நிம்மதியாகவும் ஆறுதலாகவும் இருக்க வேண்டுமானால் தேவைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும். தேவை அதிகம் ஆக ஆகக் கவலை அதிகப்படும். இதனை ஒவ்வொருவரும் மறவாமல் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். என் மனதிலே எப்போதும் கவலையே கிடையாது. எம்பெருமானுக்குத் தெரியும் இந்த உண்மை. சிலர் தீநெறிப்பட்டு உழல்கின்றனரே என்று கவலைப்படுவதுண்டு. சிறியேன்பொருட்டு ஒன்றுமே கவலையில்லை; காரணம் ஒன்றும் தேவையில்லையென்ற முடிவுக்கு வந்ததுவே யாகும்.

அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம்அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். —**தமிழ்மறை.**

துன்பத்திற்கு மூலகாரணம் அவாவாகும். கூடுமானவரை அவாவின் வலிமையைக் குறைக்கவேண்டும். ஆகவே,

'யாதனில் யாதனில் நீங்கியான் நோதல்
அதனில் அதனில் இலன்'

என்ற பொய்யா மொழியாலும் உணர்க.

ஆனபடியால் அடியேன் முருகன் அருளால் வேண்டாமையை அடைய முயல்பவன். திருவருளால் அது அமைவதாயிற்று. எனவே மூன்று மாதங்கள் மலாயாவில் சுற்றுப் பிரயாணம் புரியத் தொடங்கிய யான் இன்றியமையாத பொருள் சிலவே எடுத்துக்கொண்டேன்.

பூஜைப் பெட்டி; கமண்டலம்; உடைகள் 3; துண்டுகள் 3; ஆகிய இவைகள்தான் என்னுடன் ஆயத்தமாக எடுத்துக்கொண்டவை. எனது தம்பி **சச்சிதானந்தன்** உடன் புறப்பட்டனர். உணவு அமைக்க ஒரு ருக்மணி குக்கரும் எடுத்துக் கொள்ளப்பெற்றது.

மன்மத, பங்குனி-14 தேதி (27—3—56) இரவு 10½ மணிக்கு சென்னையில் மீனம்பாக்கத்தில் விமானத்தில் தம்பி

யும் அடியேனும் விமானத்தில் ஏறி வானவழியே புறப்பட்டோம்.

சென்னைக்கும் சிங்கப்பூருக்கும் 1821 மைல்
விமானடிக்கட் போகவர ரூபாய் 1273—0—0

28—3—56 காலை 7-30 மணிக்குச் சிங்கப்பூர் சேர்ந்தோம். இந்தியாவுக்கும் மலாயாவுக்கும் சூரிய உதயம் 1-30 மணி வேற்றுமை. மலாயா அரசாங்கத்தார் 30 நிமிஷம் முன் கூட்டி அமைத்துள்ளனர். அதனால் 2-மணி நேரம் வேற்றுமையுண்டு. சிங்கப்பூரில் காலை 6-மணி என்றால் சென்னையில் விடியற்காலை 4-மணிதான் ஆகும்.

விமான நிலையத்திற்கு வந்திருந்த பேரன்பும் பெருந்தகவும் உடையவர்கள்:

உயர்திரு. P. கோவிந்தசாமி பிள்ளை J. P.
,, சாரங்கபாணி, தமிழ்முரசு ஆசிரியர்
,, அ. பழ. பழநியப்ப செட்டியார், சிரம்பான்
,, முத்துக்கிருஷ்ணன்
,, சின்னையா பிள்ளை
,, S. ரங்கசாமி பிள்ளை
,, தாமோதரம் பிள்ளை
,, நரசிம்ம ஐயங்கார்
,, வயி. ஷண்முகஞ் செட்டியார் J. P.
,, மாணிக்கம் செட்டியார்
,, S. தங்கவேல் பிள்ளை
,, N. கருப்பையா பிள்ளை

எல்லோரும் வரிசையாக மலர் மாலை சூட்டி வரவேற்றார்கள். மலாயாவில் ஒரு சிறு பூமாலை 12 அல்லது 15 ரூபாயாகும். வாசனை அணுவளவும் அம்மலர் மாலையில் காண முடியாது. அன்புடன் இனிய முகமும் அகமும் மலர்ந்து நல்லுரை கூறினார்கள். எல்லோருடனும் காரில் ஊர்ந்து, நகரத்தார்களுடைய தண்டாயுதபாணி கோயில் நூல் நிலையத்தின் மேல்மாடியில் தங்கினேன். அந்த இடம்

மிகவும் வசதியாக இருந்தது. நீராடி நித்தியவழிபாட்டைச் செவ்வையாகச் செய்து முடித்தேன். தம்பி சச்சிதானந்தம் ருக்மணி குக்கரில் உணவு அமைக்க, அதனை இறைவனுக்கு நிவேதனம் புரிந்து உண்டு இளைப்பாறினேன்.

அன்று மாலை தண்டாயுதபாணி கோயிலில் சென்று வழிபாடு செய்தேன். கோயில் மிகவுந் தூய்மையாகவும் அழகாகவும் அமைந்திருந்தது. மூர்த்தியைக்காண ஆயிரங் கண்கள் வேண்டும். காரியஸ்தர் திரு. மாணிக்கம் செட்டியார் மிக்க அன்புடன், "என்ன வேண்டும்? என்ன வேண்டும்" என்று பன்முறை கேட்டு உபசரித்தனர். அவருடைய அன்பு பாராட்டுதற்குரியது.

சிங்கப்பூரிலே உள்ள தமிழ் மக்களில் தலை சிறந்தவர் உயர்திரு **P. கோவிந்தசாமி பிள்ளையவர்கள்.** சிறந்த தருமகுண சீலர். இனிய குணம் படைத்தவர். நல்ல சுறுசுறுப்புள்ளவர். அவரைக்கண்டால் பழைய காலத்தில் இருந்த பாரி, காரி முதலிய வள்ளல்கள் நினைவு வரும். அயலறியாமல் அறஞ்செய்யும் அன்பர். சிறந்த வியாபாரி. அவருடைய அன்புக்கடலில் முழுகிவிட்டேன். அக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தேன். ஆண்டவன் அருளால் அச்சமயம் அவர் கொணர்ந்து குவித்த பழமலை ஒன்று கிடைத்தது. அப்பழமலைமீது ஏறி ஒருவாறு சமாளித்தேன்.

29—3—56 மாலை: தண்டாயுதபாணி கோயிலுக்கு எதிரில் அழகிய பூமலை ஒன்றுளது. அதனைச் சிறிது பார்த்தேன். இறைவனுடைய சிருஷ்டியின் விசித்திரத்தையும், பலவகையான மலர்க்கோடிகளையும், மலர்ச்செடிகளையும் மீன்களின் காட்சிசாலையையுங் கண்டு களித்தேன். அவைகளைக் கண்டபோது "இறைவனே! மீளவும் எமக்கு இந்த வகையான பிறவிகள் வராமல் இருக்கவேண்டும்" என்று நினைத்துக்கொண்டேன்.

சிங்கப்பூர்

30—3—56. சிங்கப்பூர் ஒரு பெரிய நகரம். ரோடுகள் கண்ணாடிபோல் வழுவழு என்று இருக்கின்றன. கார்கள் எறும்புகள் ஊர்வதுபோல் சாரை சாரையாகக் காற்று வேகத்தில் ஓடியவண்ணமாகவே இருக்கின்றன. மலாயாவில் உள்ள

பெரிய நகரங்களில் வழிகள் பிரிகின்ற இடங்களில் கைகாட்டி கார்களை ஒழுங்குசெய்து விடுகின்ற அலுவலர் கிடையாது. சிவப்பு விளக்கு, ஆரஞ்சு விளக்கு, பச்சை விளக்கு என்ற மூன்று விளக்குகள் ஒவ்வொரு சந்தியிலும் அமைந்திருக்கின்றன. அவைகள் சில நிமிஷங்களுக்கு ஒருமுறை தானே இயங்கி சிவப்பு விளக்கைக் காட்டுகின்றன. காட்டியவுடனே கார்கள் அப்படி அப்படியே நின்றுவிடும். ஆரஞ்சு காட்டியவுடனே வண்டிகள் புறப்பட ஆயத்தமாகும்; பச்சை விளக்கு தெரிந்தவுடன், மாமியார் வீட்டுக்குப் போகத் துடிக்கும் தலை தீபாவளி மாப்பிள்ளைகளைப்போல் கார்கள் கடும் வேகத்தில் ஓடத் தொடங்கும்.

பொதுவாக மலாயாவில் வாழும் மக்களுக்கும், சிறப்பாக சிங்கப்பூரில் வாழும் ஜனங்களுக்கும் சமயவாழ்வை அதிகம் நினைக்க நேரமில்லை. நேரமிருப்பினும் அவற்றை உணர்த்துவாருமில்லை. ஜனங்கள் அதிகம் களியாட்டங்களிலும் வேடிக்கை விளையாட்டுக்களிலுமே பொழுதைப் போக்குகின்றார்கள். பூலோக சுவர்க்கம்போல் காட்சி தருகின்றது சிங்கப்பூர். இரவிலே ஆயிரம் கண்கள் கொண்டு பார்க்கவேண்டும். எங்கு பார்த்தாலும் விநோதமான—பலநிறங்களுடையதான எலக்ட்ரிக் விளக்குகள் விளம்பரத்தினிமித்தம் பல நட்சத்திரக் கூட்டங்களைப் போல மின்னிக்கொண்டிருக்கின்றன. பலநூறு கப்பல்கள் வந்து தங்கக்கூடிய வசதி சிங்கப்பூர் துறைமுகத்தில் இயற்கையாக அமைந்திருக்கின்றது. அயல் தேசங்கள் ஏராளமான சரக்குகளைக் கொணர்ந்து இறக்கியவண்ணமாக இருக்கின்றன. **சிங்கப்பூரிலும் பினாங்கிலும் அயல் நாட்டு சரக்குகள் சுங்கம் (வரி) இன்றி** இறக்குமதியாகின்றன. அதனால் அயல்நாட்டு கடிகாரங்கள், வாசனைப் பண்டங்கள், வெல்வெட்டுகள் முதலியவை மலிவான விலைக்குக் கிடைக்கின்றன. பொதுவாக மலாயாவில் வாழ்க்கைச் செலவுகள் கூடியிருக்கின்றன. சிறப்பாகச் சிங்கப்பூரில் மேலும் கூடியிருக்கின்றன.

சீனர்களும் மலாய்க்காரர்களும் இரவு முழுவதும் கடை வீதிகளில் உண்பதும் உலாவுவதுமாகவே இருக்கின்றார்

கள். விடியற்காலை 3-மணிக்குக் கொஞ்சம் ஊரடங்கும். மீளவும் 5-மணிக்கே வண்டிகளின் ஆரவாரம் தொடங்கி விடுகின்றது.

சிங்கப்பூரின் சிறப்புக்கள்

சிங்கப்பூர் ஒருதீபம்; பூமத்திய ரேகையிலிருந்து வடக்கே 80; மைல் சுற்றிக்கடல்; மலாயா தீவிற்கு தென்திசையில் சிங்கப்பூரும் வடதிசையில் பினங்கும் இருக்கின்றன; பினங்கும் ஒரு தீபம்; கடலுக்கு நடுவே பினங்கு மிக அழகாக இருக்கின்றது; இடையில் மலாயா தீபகற்பம்.

சிங்கப்பூர் என்பது சிங்கபுரம் என்பதன் மரூஉ. மிகவும் அழகான நகரம்; பெரிய வியாபாரஸ்தலம். அன்பர் திரு. கோவிந்தசாமி பிள்ளையவர்கள் காரில் 2 நாள் நகரைச் சுற்றிப் பார்த்தோம்

சிங்கப்பூர் தீவு கிழக்குமேற்கு 27 மைல் நீளம். தெற்கு வடக்கு 14 மைல் அகலம். 224½ மைல் சுற்றளவு. இத்தீவில் 581 அடி உயரமுள்ள புக்கிட்டிம்மா (**Bukit Timah**) என்ற ஒருகுன்றும் மற்றும் பல குன்றுகளும் இருக்கின்றன. சிறுநதிகள் பல ஓடுகின்றன. அவற்றுள் பெரிய நதி **''சுங்கை காலாம்''** என்பது.

சிங்கப்பூர் தீவு பூமத்திய ரேகைக்குச் சமீபத்தில் இருக்கின்றது. அதனால் சிங்கப்பூர் அதிக உஷ்ணமுள்ளது. நான்கு பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருப்பதாலும் அடிக்கடி மழை பொழிவதாலும் வசிப்பதற்கு ஏற்றதாக வெப்பங் குறைந்துளது. சராசரி 90 அங்குலம் மழை பொழிகின்றது. சிங்கப்பூரை ''ஆசியாவின் லண்டன்'' என்று கூறுவர். நகர முழுவதும் டிராம் பஸ் வாடகை கார்கள் ஏராளமாக ஓடிய வண்ணம் இருக்கின்றன. குறைந்த செலவில் ஊரைச் சுற்றிப் பார்க்கலாம்.

சிங்கப்பூரில் 42,922 கார்கள் இருக்கின்றனவாம்.

தலைவலிபாம் என்ற மருந்து தயாரிக்கும் ஹாபூன்ஹா என்ற சீன முதலாளி ஒரு பெரிய காட்சிசாலை அமைத்துள்ளார். அதில் பல பதுமைகள், சித்திரங்கள், நரகவேதனைக் காட்சிகள் முதலியன அமைந்துள்ளன.

சிங்கப்பூரில் சராசரி அதிக உஷ்ணம் 87 டிகிரி. சராசரி குளிர்ச்சி 74 டிகிரி. சராசரி ஆண்டுக்கு 95 அங்குல மழை.

31—3—56. இன்று மாலை சிங்கப்பூரில் உள்ள மாரியம்மை கோயிலில் முதல் விரிவுரையாக **"சக்தியின் பெருமை"** என்ற விரிவுரை செய்தேன். இன்னிசைக் கருவிகளையும் ஏற்பாடு செய்திருந்தார்கள். மக்கள் நிரம்பவும் ஆர்வமாக வந்திருந்தார்கள்.

"வெப்பம் தட்பம் என்ற இரண்டும் விரவியே இந்த உலகமும் உடம்பும் நிலைபெறுகின்றன; ஒரு மலர் இந்த இரண்டும் உதவப்பெற்று மலராக மணக்கின்றது. வெப்பம் குறைந்து தட்பம் கூடுமானால் மலர் அழுகிவிடும்; தட்பம் குறைந்து வெப்பம் கூடுமானால் மலர் வாடிவிடும். அது போல் இந்த உடம்பிலும் ஒன்று கூடி ஒன்று குறைந்தால் உடல்நலங் குன்றும்; சில சமயம் உடம்பில் உள்ள சூடு குறைந்துகொண்டே வரும்; அப்போது உறவினர் சுற்றியமர்ந்திருப்பார்கள்: மருத்துவர் வந்து பார்த்துவிட்டு "அவர் விரும்பியவெல்லாங் கொடுங்கள்" என்பார். உடம்பு வாழைத்தண்டுபோல் குளிர்ந்துகொண்டு வரும். உயிர் வாழ்க்கை முடிந்துவிடும். ஆகவே சூடும் குளிர்ச்சியும் சமமாக இருக்கவேண்டும். அப்படி சமமாக இருக்கின்ற நாடு நமது தென்னாடு. சூடு குறைந்த நாடு லண்டன் முதலியவை; குளிர்ச்சி குறைந்த நாடு ஆப்ரிகா முதலியவை.

தட்பத்தின்மூலம் சக்தி; வெப்பத்தின்மூலம் சிவம். சூடு அதிகப்பட்டால் கண் சிவக்கும். நெருப்பு சிவப்பு நிறம். குளிர்ச்சி பச்சை நிறம். எனவே சிவம் செந்நிறம்; சக்தி பச்சை நிறம். சிவமும் சக்தியும் ஒன்றையொன்று பிரியாதுறையும். "அர்த்தநாரி" எனப்படும். அம்மையப்பனாக இறைவனை நமது முன்னோர்கள் வழிபட்டார்கள். "அம்மையே அப்பா" என்பது திருவாசகம். அப்பாவினும் அம்மா அதிகம் கருணையுடையவள். ஆகவே சிவத்தை மாசி மாதத்தில் ஒரு இரவு மட்டும் வழிபடுவார்கள். அது **சிவராத்திரி**. அம்மையைப் புரட்டாசியில் ஒன்பது இரவு வழிபடுவார்கள்; அது **நவராத்திரி**. சன்யாசம் பெற்ற பிறகும்

வணங்கத்தக்கவள் தாய். அன்னை பிராசக்தியின் துணை கொண்டுதான் சிவத்தையடைய வேண்டும். "தாயுடன் சென்று தாதையைக் கூடிப்பின் தாயை மறந்து ஏயுமதே நிட்டையென்றான் எழிலார் கச்சி ஏகம்பனே" என்பார் பட்டினத்து சுவாமிகள், ஆகவே அம்பிகையின் அருளால் தான் சிவபோகம் கிடைக்கும்; என்பனவாதி பல கருத்துக் களை எடுத்து அன்று விரிவுரை செய்தேன். மக்கள் கேட்டு மகிழ்ச்சியுற்றார்கள்.

1—4—56. சிங்கப்பூரிலே திரு. S. ரங்கசாமிப் பிள்ளை என்பவர் மிக்க அன்பாகப் பழகினர். அன்று மாலை நகரத் தாருடைய தண்டபாணி திருக்கோயிலிலே மாலை 6-மணிக்கு **"முருகன் பெருமை"** என்பது பற்றி விரிவுரை நிகழ்த்தி னேன். சிங்கப்பூரிலேயுள்ள பிரபல பத்திரிகாசிரியர்-தமிழ்ப் பற்றுள்ள **திரு. சாரங்கபாணி** என்பவர் அன்புடன் பழகி னர். **தமிழ் முரசு** என்ற தமது பத்திரிகையில் பேசிய பேச் சின் சாரத்தை வெளியிட்டு மக்களுக்கு உபகரித்தார். அவர் ஒவ்வொரு மூச்சும் தமிழுக்கென்றே செலவிடுகின்றார். தமி ழும் தமிழ் மக்களும் அவரால் உயர்வு பெறுவது போற்றுதற் குரியது.

2—4—56. எமது வரவேற்புக்குழுத் தலைவர் நகர தன வணிகர் **திரு. அ. பழநியப்ப செட்டியார்** அவர்கள் எம்மை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். எமது மத்திய வர வேற்புக்குழு சிரம்பானில் அமைக்கப்பட்டது; ஆகவே **சிரம்பான்** போவதற்காகப் புறப்பட்டோம்; காலை 8-மணிக் குச் சிங்கப்பூரிலே ரயில் ஏறினோம். மலாயாவில் ஒரு பெட்டியில் ஏறினல் எல்லாப் பெட்டிகளுக்கும் போய்வர லாம். இந்தியா மாதிரி வழிகளில் தூய்மையான சைவ உணவு ஒன்றும் சாப்பிடமுடியாது. அதனல் நாங்கள் வழிக்குச் சிறிது தயிரன்னம் எடுத்துக்கொண்டோம்.

ஒரு விஷயம் அன்பர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். காலை 8-மணிக்குப் புறப்பட்டு மாலை 4-மணிக்கு **சிரம்பான்** சேர்ந்தோம். 210 மைல் தூரம் ரயிலில் பிரயாணம் புரிந்தோம். இதற்குத் தயிரன்னம் எடுத்துக்கொண்டோம். வழியில் உண்டு சிரமம் இன்றிப் பிரயாணம் புரிந்தோம்.

இனி இந்த உடம்பை விட்டு உயிர் இறுதியில் பிரயாணம் புரியப் போகின்றதே; அப்போது ஏதாவது கட்டமுது கொண்டுபோக வேண்டாமா? அதில் ஒருவருக்குமே கவனம் இல்லை. முருகவேளைக் குறித்து நினைப்பற நினைத்துத் தவம் சிறிது நேரமாகிலும் புரியவேண்டும். அத்தவம் நமது மரண யாத்திரையின்போது அத்தொலையாத வழிக்குக் கட்டமுதாக வந்து உதவும். இதனை யாவரும் மறந்துவிடக் கூடாது. அருணகிரிநாதர் கூறுகின்றார்.

மலையாறு கூறெழ வேல்வாங்கினானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமினோ நும்மை நேடிவரும்
தொலையா வழிக்குப் பொதிசோறும் உற்ற துணையுங்கண்டீர்
இலையாயினும் வெந்த தேதாயினும் பகிர்ந் தேற்றவர்க்கே.

சிரம்பான்: சிங்கப்பூருக்கும் சிரம்பானுக்கும் 210 மைல்.

மாலை 4 மணிக்குச் சிரம்பான் வந்து சேர்ந்தோம். மத்திய வரவேற்புக்குழுச் செயலாளர் உயர்திரு **N.** தம்பித்துரையவர்கள் புகைவண்டி நிலையம் வந்து பூமாலை சூட்டி மிக்க அன்புடன் வரவேற்றனர். புகைவண்டி நிலையத்திற்கு அண்மையில் முருகப்பெருமான் திருக்கோயிலில் தங்கினோம்.

அ. பழ. பழநியப்ப செட்டியார்

அடியேனை மலாயாவுக்கு வரவழைக்கும் பொருட்டு நன்கு முயன்று எனக்கும் தம்பிக்கும் விமான டிக்கட்டு போகவர எடுத்து அனுப்பி மலாயாவில் தமிழும் சைவமும் பரவவேண்டும் என்ற பெருநோக்கத்துடன் முன்னின்று, மத்திய வரவேற்புக்குழு அமைத்து அதன் தலைவராக விளங்கியவர் உயர்திரு **அ. பழ. பழநியப்ப செட்டியார்** அவர்கள். இவர்கட்குச் சொந்த ஊர் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஆவணிப்பட்டி. தனவணிகர். நன்மனம் படைத்தவர். தங்கள் சொந்த ஊரில் ஒரு சிறந்த கல்விக்கூடம் அமைத்து நடாத்தி வருகின்றார். அதன் ஆண்டு விழாவுக்குத் தமிழகத்திலும் ஈழத்திலும் தலைசிறந்து விளங்கும் ஆன்றோர்களை அழைத்து சிறப்பித்தவர். ஈழம் விபுலானந்த அடிகள், கல்கி கிருஷ்ணமூர்த்தி, ராஜா

சர் அண்ணுமலை செட்டியார், சித்பவானந்த அடிகள் முத லியவர்கள் அதில் கலந்துகொண்டவர்கள்.

அன்பர் பழநியப்ப செட்டியார் அவர்கள் சுமுகமானவர். பால் போன்ற உள்ளம் படைத்தவர். பழகுவதற்கு ஏற்ற வர். நல்ல உத்தம உள்ளம் உடையவர். எனது மலாயா சுற்றுப் பிரயாணத்தில் கூடவேயிருந்து உதவி செய்த னர்.

N. தம்பித்துரை

மத்ய வரவேற்புக் குழுச் செயலாளர் சிரம்பான் **P. W. D.** இலாகா உயர்திரு **N. தம்பித்துரை** அவர்கள். இவர் மிகவும் பெருந்தன்மை படைத்தவர். நற்குணசீலர். ஆழமான அன் புடையவர். சொல்லாமல் உதவி புரிபவர். பூவாமல் காய்க்கும் பலாவைச் சேர்ந்தவர். நல்ல தமிழ்ப் பற்றுடையவர்; எனது மலாயா பிரயாணத்தை வெற்றிகரமாக நடாத்திவைத்த பெருமை இவருக்கு உண்டு. அடியேன்பால் அளவற்ற அன்புபூண்டு அரியபெரிய பணி புரிந்தார். இவருடைய உத்தமகுணத்தை ஒரு போதும் மறக்க முடியாது. இவர் ஊர் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த உரும்பராய்.

திருக்கோயில் அர்ச்சகரும் பேரன்பரும் ஆகிய உயர் திரு **A. வீரமணி குருக்கள்** தாயினும் சாலப் பரிவுடையவ ராக உபசரித்தார். காலமறிந்து உண்டி முதலியன தந்து மலாயா அயல் தேசம் என்பதனை மறக்குமாறு செய்து விட்டார். பல அன்பர்கள் வந்து வந்து சந்தித்து மகிழ்ந் தார்கள்.

3—4—56 மாலை சிரம்பான் முருகர் திருக்கோயிலில் **"முருகன் பெருமை"** என்பது பற்றி விரிவுரை புரிந்தேன். கோலாலம்பூரிலிருந்தும் வேறு பல ஊர்களிலிருந்தும் பல அன்பர்கள் வந்து கேட்டு இன்புற்றுர்கள்.

4—4—56 மாலை சிரம்பான் முருகர் திருக்கோயிலில் "காரைக்காலம்மையார்" வரலாற்றை எடுத்து விரிவுரை செய்தேன். இரண்டு நாட்களிலும் அன்பர்கள் திரண்டுவந்து செவிமடுத்துச் சிந்தை மகிழ்ந்தார்கள்.

5—4—56. ஒரு மெய்யன்பர் அவர்கள் தமது காரில் எங்களை ஏற்றிக்கொண்டு சிரம்பான் நகரையும், அருகில் உள்ள ரப்பர் தோட்டங்களையும், ரப்பர் தொழிற்சாலைகளையும், முக்கியமான கட்டிடங்களையும், ஒட்டுமரப்பலகை செய்யும் பெரிய தொழிற்சாலையையும், பால் பண்ணை, ஈயச்சுரங்கம் முதலியவற்றையுங் காட்டினார்.

மலாயாவில் முக்கியமான தொழிகள் இரண்டு. ரப்பர் பால் எடுத்தல், ஈயம் எடுத்தல், என்பவை. இதில் ரப்பர் பால் எடுப்பதுதான் அதிக வருவாய் உள்ள தொழில். அதற்கு அடுத்தது ஈயம் எடுக்கும் தொழிலாகும். இதனால் மலாயா நாட்டுக்கு ஏராளமாக பொருள் கிடைக்கின்றது.

6—4—56. மாலை சிரம்பானிலிருந்து 27 மைலில் கடற்கரைஓரத்தில் உள்ள **"போர்ட்டிக்ஸன்"** (Port Dickson) என்ற ஊரில் அம்பிகை கோவிலில் "குழவியும் கிழவியும்', என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு செய்தேன். அந்த ஊரில் உள்ள மக்கள் சன்மார்க்க விரிவுரையை அன்றுதான் முதல் தடவையாகக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

7—4—56. இன்று சிரம்பானில் ஓய்வாக இருந்தேன்.

8—4—56. மாலை காரில் கோலாலம்பூர் வந்தோம். சிரம்பானுக்கும் கோலாலம்பூருக்கும் 43 மைல். கண்ணாடி போன்ற தார் ரோடு. காற்று வேகத்தில் கார்கள் ஓடுகின்றன.

கோலாலம்பூர் (Kuala Lumpur)

கோலாலம்பூர் மலாயா பெடரேஷனுக்குத் தலைநகரம். சிங்கப்பூருக்கு அடுத்து இதுதான் பெரிய நகரம். கார்கள் கணக்கற்று உலாவுகின்றன. பெரிய பெரிய கட்டிடங்கள்.

இங்கு ஐக்கிய சபை, மாகாண சபை, அரசினர் அலுவலகங்கள், பொருட்காட்சிசாலை, வர்த்தகசாலைகள், பள்ளிவாசல், புதிய புகைவண்டி நிலையம், பந்தடித் திடல், பூமலை முதலியன பார்க்கத்தக்கவை.

கோலாலம்பூரில் தமிழ் மக்கள் நிரம்ப வாழ்கின்றார்கள். இந்தியர்களும் யாழ்ப்பாணிகளும் இருந்து சைவத்தை

யும் தமிழையும் பேணி வளர்த்து வருகின்றனர்கள். கோலாலம்பூரை **"குட்டி யாழ்ப்பாணம்"** என்றுங் கூறுவர். என்னுடைய மலாயா சுற்றுப் பிரயாணத்தில் ஏராளமான மக்கள் திரண்டு வந்து சொற்பொழிவைக் கேட்டதும், நன்கு ரசித்ததும், பயன்பட்டதும் கோலாலம் பூரில்தான். மற்ற ஊர்கள் இதனை அடுத்திருந்தன.

"விவேகானந்த ஆஸ்ரமத்தில்" தங்குமாறு செய்தார்கள். அது மிகவும் வசதியாக இருந்தது. ஆஸ்ரம அன்பர்கள் அளவற்ற அன்புடன் உபசரித்தார்கள். நீராடவும் வழிபாடு செய்யவும் மிக்க ஏற்ற இடமாக அமைந்திருந்தது.

அன்று மாலை 6-மணிக்கு யாழ்ப்பாண அன்பர்கட்கு உரிமையான ஸ்காட் ரோடு கந்தசுவாமி கோவிலில் "வேலும் மயிலும்" என்பதைப் பற்றி ஒரு விரிவுரை புரிந்தேன். இன்னிசைக் கருவிகள் நன்கு அமைத்திருந்தார்கள். அன்பர்கள் எல்லையற்ற பக்தி சிரத்தையுடன் கேட்டு இன்புற்றனர்கள். நல்ல சைவ மணங் கமழ்ந்தது. கோவில் புனிதமாகவும் அழகாகவும் இருந்தது. உத்சவமூர்த்தி பளபள என்று பொற்சிலைபோல் காட்சியளித்தது. கோயிலுக்குப் பின்புறத்தில் சரவணப்பொய்கை கண்களைக் கவர்ந்து கொண்டிருந்தது. அப்பொய்கையிடையே ஒரு முருகன் சிலை அழகாக விளங்குகின்றது. அவற்றை எல்லாம் கண்டு என் மனம் இன்பக் கடலில் முழுகியது. உயர்திரு **சேவ்வந்தி நாதன்** என்பவர் விரிவுரையின்போது முன்னுரை கூறினர். இனிய குணம்படைத்த அவரது பண்பு பாராட்டுதற்கு உரியது.

8—4—56 மாலை கோலாலம்பூர் மாரியம்மை திருக்கோயிலில் **பராசக்தியின் பெருமை** என்பது பற்றி விரிவுரை செய்தேன். இங்கும் அன்பர்கள் நெருக்கமாக இருந்தும் நின்றும் கேட்டுப் பரவசமடைந்தார்கள். அருள்நெறித் திருக்கூட்டச் செயலாளர் **P. பழநிவேல் பிள்ளை**யவர்கள் வரவேற்புரை கூறி மலர் மாலை சூட்டி அன்பு செய்தார்.

பழநிவேல் பிள்ளை

கோலாலம்பூரில் மட்டுமல்ல! மலாயாவிலேயே பழநிவேல் பிள்ளையை அறியாதார் இருக்கமாட்டார்கள். சுபாஷ் சந்திரபோஸுக்கு வலக்கரமாக இருந்து பலப்பல திருத்

தொண்டுகள் புரிந்தவர். வாழ்நாளில் அதிக நேரம் பொதுத் தொண்டுகளில் ஈடுபடுபவர். எப்போதும் சிரித்த வண்ண மாகவும் திருநீறும் சந்தனபோட்டும் விளங்கும் முக மண்ட லத்துடனும் குளிர்ந்த உள்ளத்துடனும் திகழ்பவர். பழகு வதற்குப் பால் போன்றவர். சமய பிரசார சபை வைத்து வாரந்தோறும் சமய பாடங்களேயும் வேறு பல நற்கருமங் களையும் நடாத்திவருகின்றார். உத்தமமான இவருடைய நட்பு எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது.

9—4—56 கோலாலம்பூருக்கு 49 மைல் தொலேவில் உள்ள **கோலாசிலாங்கூர் (Kuala Selangor)** என்னும் ஊரில் முருகன் கோயிலில் மாலை "முத்தைத்தரு" என்ற திருப் புகழுக்கு விரிவுரை செய்தேன். இங்கே சிறுமிகள் வர வேற்புப்பாடல்பாடி மலர் தூவி உபசரித்தார்கள். அன்றியும் இங்குள்ள அன்பர்கள் அன்பாக நடந்துகொண்டார்கள்.

10—4—56 கோலாலம்பூரில் பரஞ்சோதி விநாயகர் கோயிலின் சார்பில் நகரத்தார்—தண்டபாணி கோயிலில் "மணி வாசகர்" என்பது பற்றி விரிவுரை புரிந்தேன்.

12—4—56. இந்தியாவில் 50, 60 மைல் காரில் போவ தென்றால் இடுப்புவலியேற்படும். ரோடுகள் மிக மோசம். அதனால் கார் குலுங்கும். அயர்ச்சியுண்டாகும். மலாயா இதற்கு நேர்மாறு. கண்ணாடிபோல் ரோடுகள்; கார்கள் போவதே தெரியாது. பல மைல்கள் சென்றாலும் அலுப்பு தெரியாது. அன்றியும் கார்கள் அநேகமாகப் பலர் வைத் திருக்கிறார்கள். இந்தியாவில் காரை வெளியே எடுப்ப தென்றால் பிரமாஸ்திரம் எடுப்பது போல் அரிதாக இருக் கும். மலாயாவில் கார் வைத்திருப்பவர்கள் நினைத்த போதெல்லாம் மூக்குத் தூள் உபயோகப்படுத்துவது போல் அநாயாசமாக எடுத்து தாராளமாக உபயோகப் படுத்துகின்றார்கள்.

இன்றைய தினம் ஆண்டு முடிகின்றது. மன்மத பங்குனி 31ம் தேதி காலை கோலாலம்பூரில் வழிபாடுகளை முடித்துக் கொண்டேன். காலை 9 மணிக்கு ஒரு காரில் புறப்பட்டேன். 10-25க்கு 43 மைல் கடந்து சிரம்பான் சேர்ந்தேன். அங்கு முருகர் கோயிலில் சிறிது தங்கினேன்.

திருவெண்காடு நாதஸ்வர வித்துவான் திரு. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் அங்கு வந்திருந்தார். அவரைச் சந்தித்து மகிழ்ந்தேன். அவ்விடம் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மீளவும் 1 மணிக்குக் காரில் புறப்பட்டு 53 மைல் கடந்து மலாகா **(Malacca)** என்ற ஊரை அடைந்தோம். அது கடற்கரையில் உள்ள ஒரு பழைய நகரம்.

இன்று மாலை இங்கே மாரியம்மை கோயிலில் "மணி வாசகர்" என்னும் பொருள் பற்றிப் பேசினேன். நகரத்தார்களும் ஏனைய அன்பர்களும் வந்து கேட்டு இன் புற்றார்கள். அன்று அந்த ஊர் சிவாலயத்தில் தங்கினோம்.

13—4—56. இன்று துன்முகி ஆண்டு சித்திரை 1ம்தேதி புதிய வருஷப் பிறப்பு. சிவாலயத்திலே இனிது வழிபாடு புரிந்தேன். ஜோகூரிலிருந்து சிறந்த பேரன்பர் திரு. சின்னையா பிள்ளை ஜே.பி. அவர்கள் கார் அனுப்பியிருந்தார். அந்தக் காரில் புறப்பட்டோம். என்னுடன் தம்பியும், பழனியப்பச் செட்டியாரும் வந்தனர். 138 மைல் பிரயா ணம் புரிந்து ஜோகூர் **(Johore)** என்ற நகரை அடைந் தோம். அங்கு வருஷப் பிறப்பு விழா மாரியம்மை கோயிலில் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

இரவு 7-30 மணி தொடங்கி 11-30 மணி முடிய சீதா கல்யாணம் என்ற விரிவுரையை இன்னிசைக் கருவிகளுடன் சாங்கோபாங்கமாக நிகழ்த்தினேன். ஆயிரக் கணக்கான மக்கள் வந்து செவிமடுத்துச் சிந்தை மகிழ்ந்தார்கள். அன்றிரவே சிங்கப்பூர் சேர்ந்தோம். ஜோகூருக்கும் சிங்கப்பூருக்கும் 17 மைல்.

மீண்டும் சிங்கப்பூர்

14—4—56. பராசக்தி கோயிலில் **தங்கவேல்** என்பவரின் நன்முயற்சியால் மாலை **இந்து தர்மம்** என்பதைப் பற்றி இன்னிசைக் கருவிகளுடன் சொல்மழை பொழிந்தேன். 'நமது சைவ சமயம் அநாதியானது. மற்ற சமயங்களை அந்த அந்த குருமார்கள் தோற்றி வைத்தார் கள். அதனால் அந்த குருமார்களின் பேராலேயே அச் சமயங்களின் பேர்கள் அமைந்துள்ளன. நமது சைவசமயம் சிவ சம்பந்தம். உடையது. தோன்

மையும், நன்மையும் உடையது. சிவம் அன்புருவம். அன்புவடிவாய சமயம் சைவசமயம். எல்லா உயிர்களிலும் இறைவனைக் கண்டு மன்னுயிர் அனைத்தும் தன்னுயிராகக் கண்டு எனது, யான் என்னும் இரண்டும் நீங்க எவரும், யாதும் யாஞகி பரந்த உள்ளத்துடன் நிற்பவன் சைவ சமயி. எல்லாச் சமயங்களையும், தனக்கு அங்கமாகக் கொண்டு சமயம் கடந்த சமரச மெய்ஞ்ஞான பீடத்தமர்ந்து மௌன மகுடம் புரிந்து விளங்கும் ராஜாங்க சமயம் சைவ சமயம்.

சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டும் இந்தக் கருத்தை விட்டுப்
பொய் வந்துழலும் சமயநெறி புகுத வேண்டாம் முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே

—தாயுமானுர்.

ஆகவே சைவசமயத்தின் மேற் சமயம் இல்லை. அச் சமயத்தின் பல கிளைகள். சேர்ந்தவையே இந்துசமயம்' என்று, அதன் பல உண்மைப் பொருள்களை அன்று ஒரு அளவுக்கு விளக்கினேன்.

15—4—56. சிங்கப்பூர். முன்னே தெரிவித்த தனமும், மனமும்படைத்த தரும குணசீலர் திரு. **P. கோவிந்தசாமிப் பிள்ளை**யவர்கள் ராமகிருஷ்ண மடத்தில் ஒரு பெரிய அழகிய மண்டபம் ஒருலட்சத்து முப்பதினுயிரம்வெள்ளியில் (வெள்ளி யென்பது இந்திய ரூபாய் 1—9—0) புதுக்கியுள்ளார். மேல்மாடியில் சலவைக் கல்லில் ராமகிருஷ்ணருடைய திருவுருவம் அமைந்துள்ளது. சாந்தமான உருவம்.

இந்த மண்டபத்தில், "குழவியும் கிழவியும்" என்ற சொற்பொழிவு நிகழ்த்தினேன். கோவிந்தசாமிப் பிள்ளை யவர்கள் அதனை நடத்துவித்தார். அடியேன் எழுதிய "குழவியும் கிழவியும்" என்ற சிறு நூற்பிரதிகளை வாங்கி, ஆசிரமத்து மாணவர்களுக்கு **ராஜதினகரன்** என்பவர் வழங்கினர்.

மீளவும் கோலாலம்பூர் 16—4—56. ஒய்வாக சிங்கப்பூரில் இருந்தோம். நகரையும் சுற்றிப் பார்த்தோம்.

17—4—56 இரவு 8 மணி ரயிலில் ஏறி 18—4—56 காலை 7-30 மணிக்கு கோலாலம்பூர் சேர்ந்தோம். சிங்கப்பூருக்கும் கோலாலம்பூருக்கும் 215 மைல்.

18-4-56 மாலை நகரத்தார்களுடைய தண்டாயுதபாணிக் கோவிலில் திருநாளைப்போவார் சரிதை விரிவுரை நிகழ்த்தினேன். கிள்ளான். திருமதி. ஞானம்பிகை பொன்னையா என்பவர் சுகமாக பிடில் வாசித்தார்கள். இனிய கானம்; நல்ல அடக்கமுள்ள அம்மையார். கோலாலம்பூரிலும், சுற்று வட்டாரங்களில் உள்ள ஊர்களிலும் வந்து பிடில் இசைத்து விரிவுரையைச் சிறப்பித்தனர். கைம்மாறு ஒரு சிறிதும் கருதாமல் தொண்டு புரிந்தனர். அவருடைய கணவனுர் திரு. பொன்னையா அவர்கள் இனிய குணம் படைத்தவர். நட்புக்கு ஏற்றவர். நல்ல உழைப்பாளி.

நகரத்தார்களுடைய கோயிலில் தண்டாயுதபாணி நேரே பேசுகின்ற மாதிரி அத்துணை அழகாக அலங்காரத்துடன் காட்சி தந்தனர். அப்போது சந்நிதியில் நின்ற வண்ணம் சிறியேன் பாடிய பாடல்.

கட்டளைக் கலித்துறை.

தண்ணூர் பொழில் திகழ் கோலாலம் பூரில் தழைத்தநுதற்
கண்ணன் அருளிய தண்டாயுதன் தனைக் கண்டவர்க்கு
நண்ணு ஒருகுறையுண்டது யாதென நாட்டுவன்யான்
எண்ணுயிரங் கண்கள் இல்லாமையே எழில் ஏற்பதற்கே.

விவேகானந்தா ஆசிரமம்

19—4—56. கோலாலம்பூர் விவேகானந்தா ஆசிரமத்தில்தான் நாங்கள் சுகமாகத் தங்கியிருந்தோம். அதன் வளர்ச்சிக்குப் பொறுப்புடைய அன்பர் **சிவப்ரகாசம் கந்தையா** என்பவர்கள் காலையும், மாலையும் வந்து வேண்டுவன யாவும் அமைத்து உபசரித்து வந்தார்கள்.

இன்று காலை யாழ்ப்பாணத்தன்பர்கள் ஆசிரமத்திற்கு அருகில் அமைத்துள்ள பள்ளிக்கூடத்தைக் கண்ணுற்றேன். அழகான பள்ளிக்கூடம். இதில் படிக்கின்ற மாணவ, மாணவிகள் அனைவரும் நெற்றிக்குத் திருநீறும், பொட்டும்

வைத்திருந்தார்கள். ஆசிரியர்களும் ஆசிரியைகளும் நன்கு பயிற்றிவைக்கின்றார்கள். இப் பள்ளியும், விவேகானந்தா ஆசிரமும் பாராட்டுதற் குரியன.

சதானந்தர்

நான் கோலாலம்பூரில் இருந்த இந்த சமயம் ரிஷி கேசம் தெய்வநெறிக் கழகத் தலைவர் சுவாமி சிவானந்தருடைய சீடர், சுவாமி சதாநந்தர் அவர்கள் என்னுடன் தங்கியிருந்தார்கள். இனிய குணம் படைத்த அவருடன் உரையாடி உவகை யுற்றேன். தூயமனம் படைத்தவர் அவர். குழந்தை போல் பழகினர். எனது விரிவுரைகளைக்கேட்டு மகிழ்ந்தனர் பின்னர் அவர் பிரியாவிடை பெற்று ரிஷிகேசம் சென்றனர்.

மாலை இப்பள்ளியில் திருநீலகண்ட நாயனர் வரலாறு கூறினேன். சுவாமி சதானந்தர் தலைமை தாங்கினர். திருமதி. **மகேஸ்வரியம்மை** மிக்க இனிமையாகப் பிடில் வாசித்தனர். அவர்கள் திரு. மருங்காபுரி கோபால கிருஷ்ணய்யரிடம் பயின்றவர்கள். அவர்கள் வாத்தியம் அழகாக அமைந்திருந்தது. திரு. **தங்கவேல்** என்பவர் மிருதங்கம் வாசித்தனர். அவரும் தேர்ச்சி பெற்றவர்.

கோலாலம்பூரில் தொடர் விரிவுரைகள்

திரு. அன்பர் பழனிவேல் பிள்ளையவர்கள் வேண்ட கோலாலம்பூர் மாரியம்மை கோயிலில் 20—4—56 முதல் 27—4—56 முடிய தொடர்ந்து சொற் பொழிவு செய்தேன். ஒரு நாள் **பரதன் பரிவும்** பின்னர் 7 நாட்கள் **கந்த புராணமும்** கூறினேன். நாளுக்கு நாள் அன்பர்கள் திரள் திரளாக வந்து குவிந்தார்கள். நன்கு ரசித்துக் கேட்டு இன்புற்றார்கள். சமய மறுமலர்ச்சி பெற்றனர். திரு. **கா. ராமநாதன் செட்டியார்** மாலை சூட்டி முன்னுரை பகர்ந்தார். தமிழ் நேசன் தனது பத்திரிகையில் அன்றாடம் பேச்சுகளை வெளியிட்டு வந்து கேட்கும் வாய்ப் பில்லாத மக்களுக்கு உபகரித்தது. திரு. **அன்பு நடனத்தின்** அன்பு மறக்க முடியாதது.

28—4—56 மாலை கோலாலம்பூரிலிருந்து 28 மைலுக்கு அப்பாலுள்ள **கிள்ளான் (Klang)** என்ற ஊரில் மாரியம்மை கோயிலில் "கந்தரநுபூதி" என்பது பற்றி விரிவுரை செய்

தேன். திரு. **சைவ கந்தையா** என்பவர் முன்னுரை கூறி மலர்மாலை சூட்டினுர். இங்கும் நிரம்ப அன்பர்கள் வந்து இன்னுரை கேட்டு இன்புற்ருர்கள்.

29—4—56. மாலை கோலாலம்பூர் சமீபமுள்ள **கேரடான் பூமலையில் அர்ச்சுனன் தவநிலை** என்பது பற்றிப் பேசினேன். அன்பர்கள் வந்து கேட்டு நலம் பெற்றனர்.

30—4—56. மாலை கோலாலம்பூருக்கு 51மைலிலுள்ள **பெடாலிங் (Petaling)** என்ற ஊரில் மாரியம்மை கோயிலில் **குசேலர்** என்ற விரிவுரை புரிந்தேன்.

1—5—56. கோலாலம்பூரில் விவேகானந்த ஆசிரமப் பள்ளிக் கூடத்தில் மாலை **முருகனும் முட்டையும்** என்பது பற்றி ஆராய்ச்சியான ஒரு விரிவுரை புரிந்தேன். அப்போது திருமதி. மகேஸ்வரியம்மை பிடில் வாசித்து எல்லோரையும் மகிழ்வித்தனர்.

2—5—56. கோலாலம்பூருக்கு 4 மைல் தொலைவில் உள்ள **கம்பம் பாண்டான்** (Kampong Pandan) என்ற ஊரில் மாலை விநாயகர் கோயிலில் **விநாயகர் பெருமை** என்பது பற்றி விரிவுரை புரிந்தேன். இங்கே திரு. ஆஸாத் என்ற முஸ்லிம் அன்பர் நல்ல தொண்டு புரிகின்ருர். அவருடைய அன்பு அளவில்லாதது. இந்த ஊரவர் மிக்க பக்தியுடன் வரவேற்று உபசரித்தார்கள். சொற்பொழிவுக்கு முன் திருமதி **சொர்ணம்பிகை** அம்மையார் நல்ல இனிய சாரீரத்துடன் இன்னிசையரங்கு நிகழ்த்தினுர்.

3—4—56. **கிள்ளான்** என்ற ஊரில் மாரியம்மை கோயிலில் **பட்டினத்து சுவாமிகள்** என்பது பற்றி விரிவுரை செய்தேன். அன்பர் உயர்திரு. தேனப்ப செட்டியார் முதலிய அன்பர்கள் இனிது வரவேற்று உபசரித்தார்கள்.

4—5—56. காலை கோலாலம்பூரிலிருந்து காரில் புறப்பட்டு 157 மைல் பிரயாணம் புரிந்து **பத்துபகாட்** என்ற ஊர் சென்று மாலை 6-30 மணிக்கு நகரத்தார் திருக்கோயிலில் "கைத்தல நிறைகனி" என்ற ஒரு அடிக்கு விரிவுரை புரிந்தேன். விநாயகர் பெருமையும், முருகன் பெருமையும் இன்னும் பல உண்மைகளும் அப்போது விளக்கப் பட்டன.

அன்றிரவே புறப்பட்டு, 33 மைல் மீளவும் வந்த வழியே திரும்பி மூவார் (Muar) என்ற ஊருக்கு வந்து தங்கினோம்.

மூவாரில் நகரத்தார்கள் தண்டாயுதபாணி திருக்கோயில் மிக அழகாக அமைந்துள்ளது. ஆண்டவனை அலங்கரித்திருந்த காட்சி என்றும் மனத்தை விட்டு அகலாது; அற்புதமான அலங்காரம். பொதுவாக, நகர தன வணிகர்கள் எங்குச் சென்றாலும் ஆங்காங்கு முருகன் திருக்கோயிலை அமைத்து மூலதனம் வைத்து தைப்பூச விழா, பங்குனி உத்திர விழாக் கொண்டாடி பக்தி சிரத்தையுடன் நடாத்தி வருகிறார்கள்.

மலாயாவில் யாழ்ப்பாணத்து அன்பர்களும் அதேபோல் ஆங்காங்கே கோயில் அமைத்து சைவ சமய நெறியைக் கடைப்பிடித்து வருகின்றார்கள். யாழ்ப்பாணத்துஅன்பர்கள் யான் சென்ற சென்ற இடங்களிலெல்லாம் தாயினும் சாலப் பரிவுடன் வரவேற்று உபசரித்தார்கள். இன்னும் பல விரிவுரைகள் அமைத்து சைவசமயம் பரவுவதற்குத்துணை புரிந்தார்கள். வழிபாட்டில் கலந்து கொண்டார்கள்.

எல்லையில்லாத அன்பு காட்டினார்கள். அவற்றை எல்லாம் எழுத்தால் எழுத முடியாது. என்னுடைய சுற்றுப் பிரயாணத்தில் எத்தனையோ விதமான பண்புடையவர்களையும், மனம் படைத்தவர்களையும், குணம் படைத்தவர்களையும் பார்த்தேன்; பழகினேன்.

5—5—56. மூவாரில் தண்டபாணி கோயிலில் இரவு 8 மணிக்கு **குழவியும் கிழவியும்** என்னும் பொருள் பற்றி விரிவுரை செய்தேன். நகரத்தன்பர்களும், மற்றவர்களும் வந்து கேட்டு மகிழ்ந்தார்கள்.

6—5—56. காலையில் வழிபாடும் உணவும் முடித்துக் கொண்டு புறப்பட்டோம். காரில் 66 மைல் பிரயாணம் பிரிந்து **குளுவான்** (Kluang) என்ற ஊரை அடைந்தோம். அங்கு திரு. முத்தையா பிள்ளை என்பவர் மிக்க அன்புடன் உபசரித்தனர். அன்று மாலை மாரியம்மை கோயிலில் 'சக்தியின் பெருமை'' என்ற பொருள் பற்றிப் பேசினேன். அன்றிரவே ரயிலில் ஏறி விடியற்காலை **சிரம்பான்** வந்து சேர்ந்தேன்.

7—5—56. சிரம்பானில் ஓய்வு பேற்றிருந்தேன்.

8—5—56. சிரம்பானுக்கு 26 மைலில் உள்ள **கோல பில்லா (Kuala Pilab)** என்ற ஊர் சென்றோம். மலைமீது ஏறி வளைந்து வளைந்து கார் சென்றது. அந்த ஊரில் வேலாயுதம் பிள்ளை என்ற அன்பர் வரவேற்று உபசாரவுரை கூறினர். "வள்ளியம்மை திருமணம்" என்ற விரிவுரை புரிந்தேன். டேப் ரிகார்ட் செய்தார்கள். அன்றிரவு மீளவும் சிரம்பான் வந்தோம். திருமதி. ஞானாம்பிகையம்மை பிடில் வாசித்தனர். இவருடைய வாசிப்பு நல்ல திறமையுள்ளது.

9—5—56. சிரம்பான் முருகர் கோயிலில் மாலை உயர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் விரிவுரை புரிந்தனர். அது சமயம் தலைமை தாங்கி தலைமையுரை கூறினேன்.

10—5—56. மாலை கோலாலம்பூர் வந்து சுங்கைபசின் ரோட்டில் சிறுத்தோண்டர் வரலாறு கூறினேன்.

11—5—56. சேண்டுல் பரவினன் கோட்டை சங்கத்தில் சிறுத்தோண்டர் குருபூஜை மடத்தில் "சிறுத்தோண்டர் பெருமை" என்பது பற்றி விரிவுரை புரிந்தேன்.

12—5—56. காலை 8 மணிக்கு கோலாலம்பூரை விட்டு வடக்கேநோக்கிப் புறப்பட்டோம். இனி வட மலாயாவில் பிரயாணம் தொடங்குகின்றது.

ஈப்போ (IPOH)

ஈப்போவில் திரு. C. **முத்தையா** அவர்களும் அவர்கள் மனைவியார் செல்வி **செல்லம்மாளும்** நன்முயற்சி செய்து எங்களை அழைத்தனர். கோலாலம்பூர் ரேயில்வே நிலையம் மிக அழகானது. திரு. M. கந்தையா, படம் - பழநி, மிருதங்கம் - தங்கவேல் என்பவர்களும் உடன் வந்தார்கள். காலை 8 மணிக்கு ரயில் ஏறினோம். திரு. மாப்பிள்ளை A நாகலிங்கம் என்பவர் ரயில்வே நிலையம் வந்து வழிவிட்டனர்.

பகல் 1 மணிக்கு ஈப்போ சேர்ந்தோம். அங்கே திரு C. முத்தையா, M. S. கந்தையா, N. ஐயாத்துரை முதலிய அன்பர்கள் வந்து மாலை சூட்டி அன்பாக வரவேற்றார்கள். கோபிங்கு ரோட்டில் 47ம் நெம்பர் உள்ள 'தங்கவில்லா' என்ற மாளிகையில் தங்கினோம்.

மாலை மாரியம்மை கோயிலில் தருமகுணசீலர் டாக்டர் S. கணபதியா பிள்ளையவர்கள் தலைமை தாங்க "முருகன் பெருமை" என்பது பற்றி விரிவுரை செய்தேன். கோலாலம் பூருக்கு அடுத்தபடியாக தமிழ் அன்பர்கள் திரளாக வந்து கேட்டு மிகவும் ரசித்து இன்புற்றனர்கள்.

திரு ம. கந்தையாவுடைய புதல்வி செல்வி 'இசைக் கலாமணி' **விஜயலட்சுமியம்மை** பிடில் மிகவும் இனிமையாக வாசித்தனர். நல்ல சாதனை செய்துள்ளனர். இந்தியாவில் பேருங்களூர் கோபாலகிருஷ்ணய்யரிடம் பயிற்சி பெற்றவர். தூய உள்ளமும் கனிந்த 'பக்தியும் அடக்கமும் படைத்த உத்தமி. அழகாக சஞ்சாரங்களை பிடிலில் அமைத்து எனது விரிவுரைக்கு மிக்க ஒத்தாசையாக உதவினர்.

ஈப்போ கோலாலம்பூருக்கு அடுத்தபடியாக பெரிய நகரம். தமிழ் மக்கள் நிரம்ப வாழ்கின்றனர்கள். எல்லோரும் அன்பாகப் பழகினர்கள். அளவற்ற அன்பு செய்தனர்.

நகர தனவணிகர்களில் திரு. சி. ராம. இராமசாமிச் செட்டியார் நல்ல அறிஞர். உள்ளம் கலந்து பழகினர். அவருடைய பண்பு இனிமையாக இருந்தது. திரு. N. ஐயாதுரை அவர்களும் அவர் வாழ்க்கைத் துணைவியார் தங்கம்மாளும் காமதேனு கற்பக விருட்சம் போல் உபசரித்தார்கள். அவருடைய புதல்வர்களும் அங்ஙனமே ஆர்வத்துடன் இருந்தார்கள். சொந்த வீடுபோல் இருந்தது.

இராமரிடம் குகப் பெருமான் எத்துணை அன்பாகப் பழகினரோ அதுபோல் தமிழாசிரியர் திரு **A. S. நாகலிங்கம்** ஆழ்ந்த அன்பு காட்டிப் பழகினர். எனது நூல்களிலே இவருக்குப் பெருங்காதல். முரட்டுப் பக்தியுடையவர். உள்ளம் வெண்ணெய் போன்றது.

13-5-56. மாரியம்மை கோயிலில் அருணகிரியார் சரித்திரம் கூறினேன்.

14-5-56. தைப்பிங்கில் P. W. D. இலாகாவைச் சேர்ந்தவரும் பேரன்பரும் சைவ அபிமானியு
தைப்பிங்
மாகிய உயர்திரு **செல்லையா** அவர்கள் வந்து

(Taiping) அழைத்துக்கொண்டு சென்றனர். தைப்பிங் இந்து வாலிபர் சங்கத்திடலில் திருப்புகழமிர்தம் என்னும் பொருள்பற்றி விரிவுரை செய்தேன். அம்மை விஜயலட்சுமி பிடில் வாசித்தனர்.

15-5-56. மாலை "திருவாசகமும் மணிவாசகரும்" என்பது பற்றி விரிவுரை செய்தேன். இன்றும் விஜயலட்சுமி யம்மை பிடில் வாசித்தனர் தைப்பிங் என்ற ஊர் மிகவும் குளிர்ச்சியான ஊர். மலைவளம் பொருந்தியது. நினைத்த வுடன் திடீர் திடீர் என்று மழை பெய்கின்றது. தைப்பிங் என்றால் சீனமொழியில் சாந்தம் என்று பொருள். வசிப்ப தற்கு ஏற்ற ஊர். திரு. செல்லையா அவர்கள் அளவற்ற அன்பு செய்தனர். தைப்பிங்கில் உள்ள அன்பர்கள் நிரம்ப வந்து விரிவுரை கேட்டு இன்புற்றனர்கள்.

இங்கே திரு. சைவ **ஆறுமுகம்** என்பவர் கனிந்த அன்புள்ளவர். அடிக்கடி வந்து கண்டு உபசரித்தனர்.

திரு. டாக்டர் **சோமசுந்தரம்** என்பவரும், அன்பர் திரு. **ஷண்முகவேல்** என்பவரும் இரு நாள்களிலும் தலைமையுரை நிகழ்த்தினர்கள். பலவூர்களிலிருந்து அன்பர்கள் வந்து கலந்துகொண்டார்கள்.

16-5-56. பகல் 1 மணிக்குப் புறப்பட்டு ரயில் ஏறினோம். மாலை 5 மணிக்கு பிறை (Pirai) என்ற பினாங்கு இடத்தையடைந்தோம். அங்கு **பினாங்கு** அன்பர் (Penang) கள் வந்து வரவேற்றனர்கள். கப்பலில் ஏறி கடலைக் கடந்து பினாங்கு என்ற தீவை யடைந் தோம். அங்கே வரவேற்புக் குழுவின் தலைவர் ஜோதி கம்பெனியதிபர் உயர்திரு. S. **லட்சுமணசாமி**, உயர்திரு வாளர்கள் M. **துரைசாமித் தேவர்** J. P., K. K. **மாணிக்க முதலியார்** (தமிழாசிரியர்) தொண்டர் **பிச்சைமுத்து** இன்னும் பல தக்கார்கள் வந்து கழுத்து நெறிகின்ற வண்ணம் பல மலர்மாலைகள் சூட்டி அன்பினால் என்னைத் தண்டித்தார்கள்.

காரில் சென்று **இந்து சபாவில்** தங்கினோம். தமிழர் களுக்கு என்று இந்த ஒரு இடந்தான் பொதுவாக உளது. தங்குவதற்கு வசதியான இடம். அன்பர்கள் ராஜோபசாரம்

புரிந்தார்கள். அன்பர் D. பாபு ஒரு உயர்ந்த பண்புடைய வர். அவருடைய அன்பு என்னும் வெள்ளத்தில் என்னை முழுகவைத்துவிட்டார். கரை காணாது அலைந்து மெல்லக் கரையைக் கண்டுபிடித்தேன்.

S. லட்சுமணசாமி

அன்பர் ஜோதிக் கம்பெனியதிபர் திரு. S. லட்சுமண சாமி என்பவர் பினாங்கு நகரைச்சுற்றிக் காட்டினார். பினாங்கு வளமையின் சிகரம். குட்டிக் காஷ்மீர் என்று நேருஜி பாராட்டினாராம். பூமலை, தண்ணீர் மலை, சீனர் கோயில்கள், பாம்புக்கோயில் முதலியவற்றைக் காட்டினார். லட்சுமணசாமி இனிய குணம் படைத்தவர். தேன் போன்ற சுவைக்கத்தக்க நண்பர். மிக்க அன்பு காட்டினார்.

பாம்புக் கோயிலில் ஒரு வகைப் பாம்புகள் ஏராளமாக இருக்கின்றன. அவைகள் முட்டையிட்டுக் குட்டி போடு கின்றன. ஜனங்கள் போய்ப் பார்த்துக் கும்பிட்டு வரு கிறார்கள். ஆனால் ஜனங்களைக் கடிப்பதில்லை. தம்பாட்டுக்கு இருக்கின்றன.

தண்ணீர் மலை முருகன் கோயிலும் அழகாக இருக்கின் றது. அதற்கு அருகில் நகரத்தார்களுடைய தண்டபாணி கோயில் கண்ணையும், கருத்தையும் கவர்கின்றது.

17-5-56, 18-5-56, 19-5-56 என்ற மூன்று நாட்களி லும் ராமகிருஷ்ண ஆசிரமம், நகரசபை, சிவாலயம் என்ற மூன்று இடங்களிலும் முறையே "அருணகிரியார், வள்ளலார், மீனாட்சியம்மை திருமணம் என்ற பொருள் களைப் பற்றி விரிவுரை செய்தேன். பினாங்கிலும், மற்ற பக்கங்களிலும் உள்ளவர்கள் நிரம்ப வந்து கேட்டுப் பெரு மகிழ்ச்சியுற்றார்கள்.

K. K. மாணிக்க முதலியார்

தமிழாசிரியர் திரு. K. K. மாணிக்க முதலியார் அடிக் கடி வந்து அளவளாவிப் பேசி மகிழ் வித்தனர். இனிமையும், நேர்மையும் படைத்தவர். போலீஸ் இலாகாவில் அலுவல் பார்க்கும் திரு. பொன்னையா, ராமதாஸர், ராமசாமி முதலிய பல அன்பர்கள் வந்து, வந்து

நட்புக்கொண்டார்கள். நகர தனவணிகர்களும் அன்பாக வந்து உபசரித்தார்கள்.

20-5-56, 21-5-56 என்ற இரு நாட்களிலும் பினங்குக்கு 58 மைல் தொலைவில் உள்ள அலோர்ஸ்டார் (Alorstar) என்ற ஊரில் அருணகிரியார், அர்ச்சுனன் தவநிலை என்ற இரு தலைப்பில் பேசினேன். டாக்டர் சின்னதுரை, குப்பாஞ் செட்டியார் முதலியவர்கள் நன்கு உபசரித்தார்கள். மலாயாத்தீவுக்கு வட கோடியில் உள்ளது கிட்டா மாகாணம் (Kedah). அதில் ஒரு நகரம் அலோர்ஸ்டார். அங்கிருந்து சிறிது தொலைவில் சென்றால் சயாம் என்ற தேயத்தை அடையலாம்.

பினங்கில் கொடிமலை என்று ஒன்று உள்ளது. அதன் மீது செங்குத்தாக சிறிய ரயில் ஒன்று ஓடுகின்றது. அதில் சென்று மலை மீதுள்ள இயற்கைக் காட்சிகளையும், அங்குள்ள மாளிகைகளையும் கண்டு களித்தோம். அங்குள்ள தமிழ் மக்களும் என்னை வரவேற்று உபசரித்தார்கள். அங்கு ஒரு வேர் வைத்து வழிபடுகிறார்கள். பினங்குத்தீவு 160 மைல் சுற்றளவு.

பினங்கு என்றால் மலாயா மொழியில் பாக்குமரம். பாக்கு மிகுதி பற்றி வந்த பேர்.

22—5—56 பினங்கிலிருந்து புறப்பட்டு கடலைக்கடந்து (சுமார் 5 மைல் அகலமுள்ள கடல்) இக்கரை வந்து சுங்குருபவை என்ற ஊரில் முருகன் கோயிலில் மணிவாசகரைப்பற்றிச் சொற்பொழிவு செய்தேன். அங்கே நா. த. சி ஆறுமுகம் என்பவர் நன்கு உபசரித்தார். இரவு மீளவும் பினங்கு சென்றோம்.

23—5—56 அக்கரையில் உள்ள பிறை என்ற ஊரில் 'கந்தர் அநுபூதி'யைப்பற்றி விரிவுரை செய்தேன். கணக்கற்ற மக்கள் திரண்டு வந்து மிக்க ஆர்வத்துடன் கேட்டு இன்புற்றார்கள்.

24-5-56 பினங்குக்கு அண்மையில் உள்ள பெரிய தோட்டம் என்ற ஊரில் "முருகன் பெருமை" என்ற செஞ்சொல் விரிவுரை செய்தேன்.

25-5-56. காலை பிறங்கு தண்ணீர் மலை தண்டபாணி கோயிலில் ஒரு மண்டபம் எடுக்க கால்கோள் விழாவில் கடைக்கால் கல் நாட்டிவைத்தேன். அத்திருப்பணியை சுங்குருபை நா. த. சி. ஆறுமுகம் என்பவர் மேற்கொண்டுள்ளனர்.

25,26-5-56 இருநாள்களிலும் நகரத்தார் தண்ணீர் மலை தண்டபாணி கோயிலில் "ஸ்ரீராமர் அவதாரம், சீதா கல்யாணம்" என்ற இரு விரிவுரைகள் செய்தேன். ஆக மொத்தம் 10 நாட்கள் பினங்கு வாசம்.

மலாயா. மலாயாவின் தென்கோடியில் ஒரு சிறு தீவு சிங்கப்பூர். வடகோடியில் ஒரு புறத்தில் ஒரு சிறு தீவு பினங்கு. இடையில் ஒன்பது சமஸ்தானங்களைக் கொண்டது பெடரேஷன் என்ற சமஷ்டி.

பேரா, சிலாங்கூர், நெகிரி செம்பிலான், பஹாங், ஜொஹுர், கடா, கிளாந்தான், திரெங்கானு, பேர்லிஸ் என்ற ஒன்பது மாகாணங்களைக் கொண்டது பெடரேஷன் என்பது. ஒன்பது மாகாணங்களுக்கும் ஒன்பது அரசர்கள் உளர். அவர்கட்கு சுல்தான்என்று பேர். மலாயர் மக்கள் முஸ்லீம் மதத்தைத் தழுவியவர்கள். ஆனால் பழைய இந்துக்களுடைய பழக்கவழக்கங்களை உடையவர்கள். நிறைகுடம் வைத்தல், அட்சதைதெளித்தல் முதலியவைகள். அவர்களிடம் இன்றும் காணப்படுகின்றன.

மலாயாவில் மொத்த ஜனத்தொகை	...	58,88,578
இதில் ஆண்	...	30,57,788
ஜனத்தொகை பெண்	...	28,30,790

மலாய்க்காரர்	...	24,27,834
சீனர்	...	18,84,534
இந்தியர் பாகிஸ்தான்காரர்		5,30,638
பிறர்	...	65,080

மலாயாவின் சுற்றளவு 50,632 மைல். மலாயாவில் மலையும், காடும் அதிகம். வளமையாக இருக்கின்றது. மலைநாடு என்பது மலாயாநாடு என வந்துவிட்டது போலும். மலாயா முழுவதும் சுற்றிப் பார்த்ததில் மண் தரையே நாங்கள் பார்க்கவில்லை. எங்கும் ஓரே புல் தரை. மரகதக் கம்பளம் விரித்தது போல் பசுமையாகக் காட்சி தருகின்றது. கண்கொள்ளாத காட்சியாக ரப்பர் மரங்கள் லட்சக்கால் மண்டபம் போல் தோற்றமளிக்கின்றன.

மலாயாவில் இல்லாத பொருள் ஒன்று உண்டு. அது எது என்ருல் ரோடுகளில் புழுதி ஒன்றுதான். நாங்கள் நான்கு மாதங்கள் தங்கினேம். வேட்டிகளில் அழுக்கு ஏறவே இல்லை.

சீனர்கள் ஒப்பற்ற உழைப்பாளிகள் நிரம்பிய மக்கட் பேறு உடையவர்கள். ஒரு வீட்டில் பதினறுபேர் இருந் தால் அத்தனைப் பேரும் உழைத்துச் சம்பாதிப்பார்கள். எறும்பு போல் சலியாது உழைக்கின்றவர்கள் **சீனர்கள்** பெரிய தனவந்தர்கட்கு **தவுக்கே** என்று பேர். நேற்று கோடீஸ்வரன் இன்று கோவணண்டி யாஞல் அவன் உடனே எந்தத் தொழிலையும் புரிந்து பொருளீட்டுவானும். எந்தத் தொழிலேயும் புரிவானும். இரவு முழுவதும் ஊர் சுற்றுவதும் ஒரு மணிக்கு ஒரு முறை கடைவீதிகளில் உண்பதுமாக இருப்பார்கள்.

மலாயாவிலுள்ள வீடுகளில் 90 மடங்கு மரப் பலகை யால் அமைந்தவைதான். பூமிக்கு 5 அடி 6 அடி உயரத் தில் வீடுகள் அமைத்துள்ளார்கள். பரணில் குடியிருப்பது போல் இருக்கும். லாலாபுல் மிகுதியாக எங்கும் வளர்ந் திருக்கும். அவைகள் ஒன்றுக்கும் உதவாதவை. அன்றி யும் அவை பச்சையாகவே தீ வைத்தால் எரிகின்றன. அதனைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கின்றது.

மலாயாவில் அநேக தொழிற்சாலைகளும், வியாபாரக் கடைகளும் பல பள்ளிகளும் சீனர்கள் அமைத்திருக்கின்ருர் கள். அதிகச் செல்வம் படைத்தவர்களும் அவர்கள்தான் என்று அறிவிக்கப் பட்டேன். இனி சீனப் பெண்களும் நன்கு உழைக்கின்ருர்கள். நிரம்பப் பொருள் ஈட்டு

கின்றார்கள். சீனர்கள் புத்த சமயத்தை மேற்கொண்டவர்கள். பேய், பில்லி முதலியவைகளை நம்புகின்றார்கள். அவர்களில் பெருங் கொடையாளியாக வாழ்ந்தவர் சிலர் உண்டெனவறிந்தேன்.

நான் சிரம்பானில் இருந்தபோது ஒரு சீன அறிஞர் வந்து என்னுடம் சைவசமய நுட்பதிட்பங்களைக் கேட்டு அறிந்து இன்புற்றார்.

கோலாலம்பூரில் இருந்த ஒரு சீன இளைஞன் பன்முறை வந்து பல அற நெறிகளைக் கேட்டுக்கொண்டான். ஒரு பொம்மை கொணர்ந்து எனக்குப் பரிசாகத் தந்தான். நான் அவனைப் பார்த்து "நான் என்ன குழந்தையா? எனக்கு ஏன் இந்த பொம்மை?" என்று கேட்டேன். அதற்கு அவன் "ஆண்டவனுக்கு நீர் குழந்தைதானே" என்று யோசிக்காமல் உடனே பதில் கூறினான். நிரம்ப அடக்கமான பையன். சைவனாக இருக்கின்றானும்.

27—5—56 **பினாங்கிலிருந்து புறப்படுதல்.** பின்னர் பினாங்கு இந்து சபா அன்பர்கள் எங்களுக்கும் ஏனைய அன்பர்கட்கும் சிறப்பாக ஒரு விருந்து வைத்தார்கள். பிரியா விடை தந்து வழியனுப்பினார்கள். காலை 10மணிக்குக் காரில் புறப்பட்டோம். 112 மைல்கடந்து மீளவும் இரண்டாம் முறையாகப் பகல் 2 மணிக்கு ஈப்போ வந்தோம்.

28-5-56 ஈப்போவில் சிறந்த செல்வாக்குள்ள டாக்டர் S. கணபதி பிள்ளையவர்களது புதல்வியின் திருமணத்தில் **வள்ளியம்மை திருமண** விரிவுரை செய்தேன். **மீளவும்** மிருதங்கத்திற்குத் தங்கவேலும், பிடிலுக்கு **ஈப்போ** விஜயலட்சுமியம்மையும் வந்து உதவினார்கள்.

ஈப்போ நகரத்தார்களுடைய தண்டபாணிக் கோயிலில் மாலை **"திருநாளைப் போவார்"** என்பதைப் பற்றி விரிவுரை புரிந்தேன்.

29—5—56 மாலை பத்துகாஜா (**Batu Gajah**) என்ற ஊரில் முருகன் கோயிலில் **கடவுள் பக்தி** என்பது பற்றி விரிவுரை புரிந்தேன்.

30—5—56 ஈப்போவுக்கு 12 மைலில் உள்ள **கோப்பிங் (Gopeng)** என்ற ஊரில் மாலை அருணகிரியார் பற்றி விரிவுரை புரிந்தேன். டாக்டர் உயர்திரு கனகசபாபதி அன்பு பாராட்டினார்.

31—5—56 பகல் 12 மணிக்குப் புறப்பட்டு காரில் ஈப்போவுக்கு 131மைல் தொலைவில் உள்ள **சுங்கை படாணி (Sungei Patani)** என்றவூருக்கு அழைத்துப் போனார்கள். மாலை முருகன் கோயிலில் **முருகன் பக்தி** என்னும் பொருள் பற்றிப் பேசினேன். நிரம்பிய அன்பர்கள் வந்து கேட்டு மகிழ்ச்சியுற்றார்கள்.

1—6—56 பகல் 11 மணிக்கு மீளவும் எங்களைக் காரில் அழைத்துக்கொண்டு 30 மைலில் உள்ள **கூலிம் (Kulim)** என்ற ஊரவர் அழைத்துக்கொண்டு சென்றனர். அங்கே முருகன் கோவிலில் மாலை 4 மணிக்கு ''நந்தனார்'' என்னும் வரலாற்றைக் கூறினேன். தோட்டத் தொழிலாளிகள் பலர் வந்து ஈடுபட்டார்கள்.

மீளவும் தைப்பிங்

2—6—56 கூலிம் என்ற ஊரிலிருந்து காரில் 54 மைல் கடந்து டாக்டர் திரு. மார்க்கண்டு அவர்களின் அழைப்புக்கு இணங்கி அவர்களது காரில் மாலை 3 மணிக்கு தைப்பிங்குக்கு வந்தோம். அன்று மாலை 6 மணிக்கு மாதர்கள் சங்கச்சார்பில் ''சீதா கல்யாணம்'' என்பதைப்பற்றி விரிவுரை செய்தேன். செல்வி விஜயலட்சுமியம்மை பிடில் வாசித்தனர்.

3--6--56 கோலக்கன்ஸார் (Kuala Kangsar)

மாலை 3 மணிக்கு 23 மைலில் உள்ள **கோலக்கன்ஸார்** என்ற ஊரையடைந்தோம். அங்கு இலங்கை வல்வெட்டித்துறை யன்பர் ஸ்டேஷன் மாஸ்டர் ஷண்முகம் அவர்கள் மனையில் தங்கினோம். அவர் மட்டுமே இருந்தபடியால் பூஜை முதலியவைகட்கு மிக்க அனுகூலமாக இருந்தது. ஷண்முகம் பெரிய பக்தர். நல்ல சைவப்பற்றுள்ளவர். மாலை 6 மணிக்கு விநாயகர் ஆலயத்தில் சைவப் பிரசார மண்டபத்தைத் திறந்து வைத்தேன். பின்னர் ''கைத்தல நிறைகனி'' என்ற ஒரு சொற்றொடருக்கு விரிவான உரை

நிகழ்த்தினேன். அம்மை விஜயலட்சுமி பிடில் வாசித்தனர். அவர்கள் பிடில் எப்போதும் போலவே மிகவும் சுகமாக இருந்தது. மக்கள் மிகுதியாகத் திரண்டு வந்திருந்தார்கள்.

4—6—56 காலை பேராமாகாண மன்னருடைய அரண்மனையை அனுமதி பெற்றுச் சென்று பார்த்தோம். அம்மாளிகையின் உச்சியிலிருந்து பார்த்தபோது எங்கு பார்த்தாலும் மலைகளும், வானளாவிய மரங்களும் இருண்ட சோலைகளுமாக கண் கொள்ளாக்காட்சி யளித்தன. மாலை விநாயகர் கோயிலில் "காரைக்காலம்மையார்" சரித்திர விரிவுரை செய்தேன். இன்றும் விஜயலட்சுமியம்மை பிடில் வாசித்து அவையினரை இசையமுது பருக வைத்தனர். அன்பர் **சேனுதிராஜா** என்பவர் இனிது பாடல் பாடினார்.

5—6—56 கோலக்கன்சாரிலிருந்து 58 மைல் கடற்கரை ஓரமாகவுள்ள **லுமுட்** (Lumut) என்ற இடத்தையடைந்தோம். அங்கு டாக்டர் நாராயணமேனன் அவர்கள் திருமாளிகையில் தங்கினோம்; அவரும் அவர் வாழ்க்கைத் துணைவியாரும் இனிது உபசரித்தார்கள். மாலை அடுத்துள்ள சித்தியவான் என்ற ஊரில் இந்து சபாக் கட்டிடத்தில் டாக்டர் N. மேனன் தலைமையில் "முருகன் பெருமை" என்ற தலைப்பில் பேசினேன். டாக்டர் சிறந்த தருமகுண சீலர். அங்கு என்னுடைய பழைய நண்பர் காரைநகர் சுப்ரமண்யம் என்பவரையும், மதுரை மாரியப்ப சுவாமிகளின் நண்பர் அழகிரிசாமிப் பிள்ளை அவர்களையும் சந்தித்து மகிழ்ந்தேன்.

6—6—56 பகல் 2 மணிக்குக் காரில் புறப்பட்டு மாலை நான்கு மணிக்கு 60 மைல் பிரயாணம் புரிந்து ஈப்போவுக்குச் சேன்றோம். அங்குள்ள அன்பர்கள் அழைத்துச் சிறப்பித்தனர். அன்று மாலை நகரத்தார்

மறுபடியும் ஈப்போ

தண்டபாணி கோயிலில் "பரதன் பரிவு" என்னும் பொருளைப் பற்றி விரிவுரை செய்தேன். செல்வி விஜயலட்சுமியம்மை பிடில் வாசித்து உபகரித்தனர். ஜனங்கள் நிரம்ப வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

7—6—56 ஈப்போவில் தண்டபாணிக் கோயிலில் ஆயிரம் வைசியர் ஆதரவில் 'காரைக்காலம்மையார்' சரித்திரத்தைக் கூறினேன். பக்தி நிறைந்த செல்வி விஜயலட்சுமியம்மை பிடில் வாசித்தனர். ஈப்போ வாசிகள் அளவற்ற அன்பு காட்டினார்கள். அதனை என்றென்றும் மறக்க முடியாது.

8—6—56 ஈப்போவிலிருந்து பகல் 2 மணிக்குக் காரில் புறப்பட்டு 57 மைலில் உள்ள **தெலுக்கான்சன் (Teluk Anson)** என்ற ஊரில் அன்பர் திரு. கண்ணப்ப செட்டியார் முன்னுரை கூற முருகர் கோயிலில் வேலும் மயிலும் என்பது பற்றி உபன்யசித்தேன். அந்தக் கோயில் மிக்க அழகாக இருந்தது. முருகனுடைய அழகும் சொல்ல முடியாது. இங்கும் அம்மை விஜயலட்சுமி பிடில் வாசித்தனர்.

9-6-56. காலை 10 மணிக்குக் காரில் புறப்பட்டோம். 184 மைல் கடந்து கோலாலம்பூர் வழியே மாலை 5 மணிக்கு சிரம்பான் வந்து சேர்ந்தோம். அங்கு குழந்தைகள் பால் நிதிக்காக சிறுமிகள் ஒரு நாடகம் நடித்தார்கள். அதனை எழுதியவர் மத்ய வரவேற்புக்குழு அமைச்சர் திரு. N. தம்பித்துரை. 'குப்பன்' என்ற அந்த நாடகத்திற்குத் தலைமைதாங்கி நாடக முடிவில் அறநெறி விரிவுரை ஒன்று புரிந்தேன். நாடகத்தின் கதை நல்ல அமைப்பு. பல அறங்களை அது மக்களுக்குப் புகட்டுகின்றது. அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்துத்தான் காந்தியடிகள் சத்தியத்தை மேற்கொண்டனர். ஆதலால் நல்ல நாடகத்தினால் நன்மை பரவும்.

குப்பன்

10-6-56 முதல் 14-6-56 முடிய ஐந்து நாட்கள் கோலாலம்பூர் ஸ்கார்ட் ரோட், கந்தசாமி கோயிலில் மிக்க திறமையான ஏற்பாட்டுடன் அருணகிரியாருடையசரிதையை பலப்பல நியாய உதாரணங்களுடனும் திருப்புகழ் வியாக்யானத்துடனும் இனிது விவுரை புரிந்தேன். கிள்ளான் திருமதி ஞானம்பிகை பொன்னையா அவர்கள் அழகாகப் பிடில் வாசித்தனர். இவருடைய ஞானம் பாராட்டுதற் குரியது. தங்க

மீளவும் கோலாலம்பூரில் தொடர் விரிவுரை

வேல் என்பவர் திறமையாக மிருதங்கம் வாசித்தனர். நாளுக்கு நாள் ஜனங்கள் அன்பாக, மிகுதியாக வந்து பக்தி சிரத்தையுடன் கேட்டு இன்புற்றார்கள். திரு. **சேவ்வந்தி நாதன்** என்பவர் நல்ல முறையில் நாடோறும் நடாத்தி நன்றி உரை நவின்றார்.

கோலாலம்பூரில் தங்கியிருந்த போது அதற்கு 7 மைலில் உள்ள பத்து மலை என்ற முருகன் மலைக்குச் சென்றேன். அடியேன் வடநாடு முழுவதும் சுற்றியுள்ளேன். ஆனால், இந்த பத்து மலை எங்குமில்லாத இயற்கை எழிலுடன் விளங்குகின்றது. சிறுமலை; படியேறினோம். ஒரு பெரிய குகையில் முருகன் வேல் உள்ளது. **பத்து மலை** சுமார் 4000 பேர் தங்கக்கூடிய குகை. நல்ல காற்றும், ஒளியும் வருகின்றன. குளுகுளு என்றிருக்கின்றது. பூச்சரம்போல் பல கல்கூர்கள் தொங்குகின்றன. இயற்கை அன்னையின் விசித்திரத்தை இங்கு கண்டு நாங்கள் திகைத்துப் போனோம். என்ன அருமையான காட்சி! எழுத்துக்கு அடங்காத வர்ணனையுடையது. அங்கு தைப்பூசத்தின்போது பல்லாயிரம் மக்கள் வந்து வழிபடுகின்றார்களாம். சென்ற தைப்பூசத்தின் போது உண்டியில் மட்டும் முப்பதாயிரம் வெள்ளி சேர்ந்ததென்று கூறினார்கள். பல மதத்தினர் வழிபடுகின்றார்கள்.

15—6—56. கிள்ளான் என்ற ஊரவர் 3வது முறையாக அழைத்து முருகன் கோயிலில் **"இறையியல்பு"** என்பதைப் பற்றிப் பேச வைத்தார்கள்.

இறை என்ற சொல் **இறு** என்ற பகுதியடியாகப் பிறக்கின்றது. இறைவன் எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் தங்கியிருக்கின்றான். அதனால் அவன் அணுவுக்கும் அணுவாக இருக்கின்றான், எல்லாப் பொருள்களும் அவனிடத்தில் தங்க இருக்கின்றான். அதனால் பெரிய பொருளுக்குப் பெரிய பொருளாகின்றான். 'அணோரணீயான் மஹதோ மஹீயாநாத்மா' என்பது சுருதி. ஆகவே எல்லாவற்றிலும் தங்கியும் எல்லாம் அவனிடத்தில் தங்கவும் இருக்கின்றபடியால் **இறை** எனப் பெற்றனன். இதைத் தான் பழநிக்கதை விளக்குகின்றது. ஒரு பழம் காரணமாக

விநாயகர் சிவபெருமானை வலம் வந்தார். முருகவேள் அகில உலகங்களையும் வலம் வந்தார்.

அதன் உட்பொருள் யாது? சிந்தியுங்கள். சிவத்துக்குள் எல்லாம் அடங்கியிருக்கின்றன என்ற உண்மையை முருகன் அறிய மாட்டாரா? இனி சர்வ வல்லமையுடைய வல்லபை கணபதிக்கு உலகங்களை ஒரு நொடியில் வலம் வரக்கூடிய ஆற்றல் இல்லையா? உண்டு. சிவம் என்ற ஒன்றுக்குள்ளே எல்லாவற்றையும் கண்டார் விநாயகர். எல்லாவற்றுக்குள்ளும் சிவத்தைக் கண்டார் முருகர். இதுதான் அதனுடைய தத்துவம். இதனைக் கருத்தில் இருத்துங்கள். யாவையுமாய் அல்லையுமாய் ஒன்றாய் பலவாய் என்ற திருவாக்குகளை உன்னுக.

ஆக இறைவன் எங்கும் உளன். எல்லா உயிர்களிலும் உளன் என்ற எண்ணம் உள்ளபடியே ஒருவனுக்கு உறுதியாக உதிக்குமாயின் அவன் எவ்வுயிருக்கும் இடர் புரியான். இதமே புரிவன் என்பனவாதி பலபொருள்களை அன்று என்னைப் பேசுமாறு திருவருள் தூண்டியது. திருமதி ஞானம்பிகையம்மை இனிது பிடில் வாசித்தனர்

16—6—56 கோலாலம்பூருக்கு 28 மைலில் உள்ள கோலகிள்ளான் என்ற ஊரில் மாலை 6-30 மணிக்கு மாரியம்மை கோயிலில் '**வள்ளலார்**' என்ற விரிவுரை செய்தேன். கோலக்கிள்ளான் ஒரு துறைமுகம். பலர் இங்கு அலுவல் செய்கின்றார்கள். அம்மை ஞானம்பிகை பிடில் வாசித்தனர்.

உலுபர்ணம் (Ulu Bernam) என்ற ஒரு ஊரை மூன்று புறங்களிலும் நதிகள் சூழ்ந்திருக்கின்றன. இங்கு போவது கடினம். மலாயாவில் பல ஆண்டுகளாக வாழ்கின்றவர்களே இந்த ஊருக்குப் போனதில்லை. இதைப் பற்றிப் பலருக்குத் தெரியாமலும் இருக்கின்றதாம். ஒரு பெரிய ஆங்கிலேயருடைய கம்பெனி இங்குளது. அன்பர் S. M. V. ராமனாதன் செட்டியார் அவர்கள் வற்புறுத்தி அழைத்தபடியால் இங்கு போக இசைந்தேன்.

உலுபர்ணம்

17—6—56. தம்பியுடனும், வரவேற்புக் குழுத்தலைவர் பழநியப்பச் செட்டியாருடனும் புறப்பட்டுக் கோலாலம்பூரில் காலை 8-40 மணிக்கு ரயில் ஏறினோம். 11-40 மணிக்கு பீடோர் (Bidor) என்ற புகைவண்டி நிலயத்தில் இறங்கினோம். அங்கு காத்திருந்த காரில் ஊர்ந்து 12-15 மணிக்கு தேலுக்கான்சன் சென்றோம். அங்கு கோயிலில் உணவு முடித்துக்கொண்டு ஒரு மணிக்குக் காரில் புறப்பட்டு 12 மைல் சென்று ஊத்தான் மெலிந்தான் (**Hutan Melintang**) என்ற இடத்தை அடைந்து அங்கு இயந்திரப் படகில் ஏறினோம். படகு பகல் 2 மணிக்கு புறப்பட்டது. பர்ணம் (Bernam) என்ற நதி பெரிய நதி; இருமருங்கிலும் பல ஊர்கள். ஜனங்கள் ஏறுவதும், இறங்குவதுமாக இருந்தார்கள். மாலை 6-45 மணிக்கு உலுபர்ணம் சேர்ந்தோம். அங்கு மாரியம்மை கோயிலில் ஒரு நாளும் சன்மார்க்க விரிவுரை கேட்டறியாத மக்கள் ஆயிரம் பேர் கூடியிருந்தார்கள். அந்த மக்களுக்கு முன் **"இராமலிங்கர்"** சரிதையை அவர்கட்கு விளங்குகின்ற முறையில் எடுத்துக் கூறினேன். அவர்கள் அளவற்ற அன்புடன் கேட்டு ஆனந்த மடைந்தார்கள்.

18--6--56. **வைகறையில்** வழிபாடு முடித்துக் கொண்டு மீளவும் காலை 6-45 மணிக்கு இயந்திரப் படகில் ஏறினோம். ஒரே பனி. இருமருங்கிலும் உள்ள மரங்களே தெரியவில்லை பகல் 12-15 மணிக்கு ஊத்தான் மெலிந்தான் போய், காரில் தேலுக்கான்சன் சென்று, கோயிலில் சாப்பாட்டை முடித்துக்கொண்டு மாலை 4 மணிக்கு **கம்பார்** (Kampar) என்ற ஊர் சேன்றோம்.

இராமையா பிள்ளையவர்கள் தேலுக்கான்சன் வந்து காரில் எங்களை யழைத்துக்கொண்டு சென்றார். அங்கு ஈப்போவிலிருந்து பல அன்பர்கள் வந்திருந்தார்கள். மாலை சீனருடைய அழகிய மண்டபத்தில் செல்வி விஜயலட்சுமி யம்மையின் பிடில் சகிதம் 'அர்ச்சுனன் தவநிலை' என்னும் செம்பொருளை விரிவுரை செய்தேன். அவ்வூர் போஸ்டு மாஸ்டர் அன்பாக உபசரித்தார்.

19—6—53. காலை எட்டு மணிக்குக் காரில் புறப்பட்டு பகல் 1 மணிக்குக் கோலாலம்பூர் வந்து சேர்ந்தோம். அன்று சிறிது ஓய்வாக இருந்தேன்.

20—6—56 கோலாலம்பூர் மாலை கந்தசுவாமி கோயிலில், இரண்டாவது அருணகிரிநாதர் என்று சிறப்பித்துப் பேசுகின்ற சுத்தாத்துவித ஞானபானு அத்யாச்சிரமி ஸ்ரீமத் **பாம்பன் சுவாமிகள்** சரிதையைக் கூறினேன். சுவாமிகள் பெருமையைப் பலரும் அறிந்து பரவசமடைந்தார்கள்.

21—6—56, கோலாலம்பூர் கந்தசாமி கோயிலில் மாலை "வள்ளலார் மாண்பு" என்பது பற்றிப் பேசினேன்.

22—6—56, இன்று **அருணகிரியார் ஜயந்தி**. அடியேன் வழக்கம் போல் தண்ணீரும் பருகாமல் பூரண உபவாசம் இருந்தேன். வழிபாடுகள் புரிந்தேன். மாலை கிள்ளானில் திரு. **குணரத்னம்** அவர்கள் ஆதரவில் **திருஞானசம்பந்தர் புராணம்** கூறினேன். அனைவரும் செவி மடுத்துச் சிந்தை மகிழ்ந்தார்கள். திருமதி. ஞானம்பிகையம்மை பிடில் **வாசித்தனர்.**

23—6—56. கேரடான் பூமலையில் இரண்டாவது முறையாக மீளவும் அழைத்து "**பாதுகா பட்டாபிஷேகம்**" என்பது பற்றிப் பேசுமாறு செய்தார்கள்.

24—6—56. கோலாலம்பூருக்கு **15** மைல் தொலைவில் உள்ள **காஜாங் (Kajang)** என்ற ஊரில் முருகர் கோயிலில் திருமதி. ஞானம்பிகையம்மை பிடில் சகிதம், காலை **10** மணி முதல் "வேலும் மயிலும்" என்று பேசினேன். மக்கள் அன்பாக வந்து கேட்டார்கள்.

கோலாலம்பூருக்கு **55** மைல் அப்பாலுள்ள **புக்கிட் ரோத்தான் (Bukit Rotan)** என்ற ஊரில் மாலை **6-30** மணிக்குக் "காரைக்காலம்மையார்" சரித்திர விரிவுரை செய்தேன். ஏராளமான ஜனங்கள் கூடி உணர்ச்சியுடன் கேட்டு உவந்தார்கள். திருமதி. ஞானம்பிகையம்மை பிடில் வாசித்து மகிழ்வித்தார்கள்.

25—6—56. கோலாலம்பூரின் ஒரு பகுதியாகிய செண்டூல் (Sentul) என்ற இடத்தில் நகரத்தார் தண்டபாணிக் கோயிலில் **"கபீர்தாசர்"** என்னும் பொருள்பற்றிப் பேசினேன்.

கோலாலம்பூரில் உள்ள ஜனங்கள் விரிவுரைகளை ஆர்வமாகவும் தெளிவுடனும் கேட்டு சுவைபட ரசிப்பது வழக்கம். எனது கிள்ளான் அன்பர் திருவாளர் பொன்னையா ஏன்பவர் நாள்தோறும் வந்து பெரிய அன்புடன் பலப் பல உதவி செய்தனர். நல்ல பண்புடைய அவர் நட்பு என்றும் இதயத்தில் நிலைபெற்றுவிட்டது.

விவேகானந்தர் பள்ளியின் ஆ சி ரி ய ர் திருவாளர் **நாகலிங்கம்** என்பவரும் சதா வந்து பல உதவி புரிந்தனர். ஆழ்ந்த அன்புள்ளவர்

26—6—56. காலை 10 மணிக்குக் காரில் புறப்பட்டு 172 மைல் சென்று பஹாங், (Pahang) மாகாணத்தில் மலாயாவின் கிழக்குக் கடற்கரையில் உள்ள **குவாந்தான்** (Kuantan) என்ற நகரை மாலை 4மணியளவில் சேர்ந்தோம்.

குவாந்தான்.

அங்கு அன்பர் திரு. **V. P. L. சாமிநாதன் செட்டியாரும்** திரு. வ. சோமசுந்தரம் பிள்ளையவர்களும் அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். பஹாங் மாகாணத்தின் தலைநகரம். குவாந்தானில் விமான நிலையம் உண்டு.

26—6—56 முதல் 29—6—56 முடிய நான்கு நாட்களிலும் முறையே :— 1. விநாயகர் பெருமை 2. காரைக்காலம்மை 3. நந்தனர். 4. வள்ளியம்மைத் திருமணம் என்னும் பொருள்களைப் பற்றிப் பேசினேன். இந்தக் குவாந்தானுக்குப் பலர் போவதில்லையாம்; ஏன்? வளைந்து வளைந்து பாம்பு போல் செல்லுகின்ற ரோடு. எனக்கு அது அதிக வளைவாகத் தோன்றவில்லை. காரணம் மனிதனுடைய மனத்தைவிடவா அது கோணலாக இருக்கின்றது? பல மனிதர்களுடைய மனம் அந்தோ எத்தனைக் கோணல்! காடு நிறைந்த பகுதி பஹாங் மாகாணம். அடர்ந்த காடு. வழி நெடுகக் காடுதான். யானை முதலிய பல விலங்குகள் வாழ்கின்றனவாம். குவாந்தானில் நல் மனம்

யுடைத்த தருமகுணசீலர் திரு. வ. சோமசுந்தரம் பிள்ளை யவர்கள் எம்மை மிகவும்பக்தியுடன்உபசரித்தனர். குழைந்து குழைந்து உருகி கண்ணீர் மல்கி கரை கடந்த காதலுடன் பழகினர். கடைசி நாள் விரிவுரையை அவர் தனது சொந்தச் செலவில் அமைத்து நடத்தினர்.

கிள்ளான் தேனப்பச் செட்டியார் முதலிய பலரும் உடன் வந்திருந்தார்கள். தேனப்பர் தேனுகவே பழகினர்.

30—6—56 பகல் புறப்பட்டு மாலை 163 மைல் அடைந்தோம். அதுவும் அதே கோணல் வழிதான். இடையில் மரத்தாண்டவர் கோயிலைத் தரிசித்தோம். அது ஒரு அடர்ந்த காட்டுக்குஇடையில் பெரியமரத்தடி

கோலலிபிஸ் (Kuala Lipis)

யில் மகிமையுடன் விளங்குகின்றது. சோமசுந்தரம் பிள்ளை பல ஆயிரம் வெள்ளி செலவழித்து ஆண்டுதோறும் விழாக் கொண்டாடுகின்ருர் என அறிந்து மகிழ்ந்தோம்.

கோல லிபிஸ் என்ற ஊரில் அன்று இரவு தங்கினேம். அது மலைகளுக்கு இடையே நல்ல வளமையுடன் விளங்குகின்றது. கோணல் வழியில் காரில் சென்றது சற்று களைப்பாக இருந்தது.

அன்று விரிவுரை இல்லாமல் இருந்தது ஆறுதலாக இருந்தது. கோலலிபிசில் உள்ள பக்தர்கள் சிறந்த உபசரிப்பு செய்தார்கள். பனி அதிகமாக இருந்தது. பள்ளமும் மேடுமாக மலைக்கு நடுவே நடுவே வீடுகள்.

1-7-56 காலை 10 மணிக்குக் கோலலிபிஸ் முருகன் கோயிலில் "அவதார புருஷர்" என்னும் பொருள் பற்றி விரிவுரை செய்தேன். டாக்டர் **ராமச்சந்திர ஐயர்** முன்னுரை கூறி மாலையிட்டனர். மக்கள் சிலரேயாயினும் நல்ல உணர்ச்சியுடன் கேட்டு உவந்தனர்.

மாலை 5 மணிக்கு ரவுப் சென்ரேம். கோலிலிபிசுக்கும் ரவுப்(Raub)புக்கும் 38 மைல், அங்கே டாக்டர் உயர்திரு **வைத்தியநாதன்** அவர்கள் மனையில் தங்கினேம். மாலை 6 மணிக்கு முருகன் கோயிலில் "முருகனும் முட்டையும்"

என்னும் பேருள்பற்றிப் பேசினேன். மக்கள் நிரம்ப வந்து கேட்டு மகிழ்ந்தார்கள்.

2-7-56 காலை வழிபாடு செய்துவிட்டு பகல் 1 மணிக்குப் புறப்பட்டு 71 மைல் தொலைவில் உள்ள **மேந்தகாப் (Mentakab)** என்ற ஊரவர் கொணர்ந்த காரில் ஏறி அங்கு சென்றோம். மாலை 6-30 மணிக்கு ஒரு சினிமா மண்டபத்தில் "முத்தைத்தரு" என்ற திருப்புகழுக்கு உரை கூறினேன். சாதாரண மக்களும் கேட்டு நலம் பெற்றனர்.

3-7-56 காலை 8 மணிக்கு ஒரு காரில் புறப்பட்டுக் காடு மலை, கோணல் வழி இவைகளைக் கடந்து 73 மைல் தாண்டி பகல் 11 மணிக்குக் கோலாலம்பூர் வந்து உணவு செய்து கொண்டு, பகல் 1-20மணிக்கு மீளவும் வேறு கார் எடுத்துக் கொண்டு 145 மைல் கடந்து மீளவும் ஈப்போ போய், மாலை 6-30 மணிக்கு மாரியம்மை கோயிலில் "சகுந்தலை" வரலாறு கூறினேன். அத்துடன் மகாபாரதத்தின் பெருமையையும் கூறினேன். டாக்டர் S. **கணபதி பிள்ளை** தலைமை வகித்தார். வழக்கம் போல் செல்வி விஜயலட்சுமியம்மை பிடில் வாசித்தனர்.

4-7-56. ஈப்போவில் தண்டபாணி கோயிலில் "விடுமர் விரதமும் பாண்டவர் பிறப்பும்" கூறினேன்.

5-7-56 ஈப்போவில் தண்டபாணி கோயிலில் "பாண்டவர் குருபக்தி" என்பதைக் கூறினேன்.

6-7-56 மாலை கோலக்கன்சார் சென்று மாலை 'தாயுமானர்' என்பதுபற்றிப் பேசினேன்.

7-7-56 கோலக்கன்சாரிலிருந்து காரில் 69மைல் கடந்து மாலை கிரீக் (Grik) என்ற ஊர் சென்றேன். அது வளைந்து வளைந்து செல்லும் வழியில் சிரமப்பட்டுப் போகவேண்டிய ஊர். மலாயாவில் உள்ளவர்களில் பலர் அந்த ஊருக்குப் போகவில்லையாம். நாங்கள் அங்கு சென்று மாலை முருகன் கோயிலுக்கு அருகிலுள்ள மண்டபத்தில் 'நளன்' என்னும் பெருள்பற்றிப் பேசினேன். அன்பர் செல்லத்துரையும், சுப்பையா J. P. அவர்களும் இனிது உபசரித்தார்கள்.

8-7-56 கிரீக்கிலிருந்து காரில் புறப்பட்டு 92 மைல் கடந்து பகல் 2 மணிக்கு தைப்பிங்கு சேர்ந்தோம். மாலை 4 மணிக்கு **அவுலோங்** என்ற சிறு புது ஊரில் 1 மணி நேரம் 'சிவராத்திரி' என்பது பற்றி விரிவுரை செய்தேன்.

9-7-56 தைப்பிங்கு மாரியம்மன் கோயிலில் காலை 9-30 மணிக்கு ஒரு பள்ளிக்கூடம் கட்டுதற்குக் கடைகால் போட்டு, கல்வியைப் பற்றிப் பேசினேன்.

மாலை இந்து இளம் வாலிபர் சங்கத்திடலில் "கல்விக் கரசி கலைவாணி" என்னும் பொருள்பற்றிப் பேசினேன். தைப்பிங்கில் இரண்டு நாட்கள் ஈப்போவிலிருந்து வந்த, செல்வி விஜயலட்சுமியம்மை அழகாகப் பிடில் வாசித்தனர். இரவே 54 மைல் பிரயாணம் புரிந்து ஈப்போ வந்தோம்.

10-7-56 ஈப்போவில் வழிபாட்டில் பலர் வந்து ஈடுபட்டார்கள். மாலை தண்டபாணி கோயிலில் "திரௌபதி திருமணம்" கூறினேன். நிறைந்த கூட்டம். ஈப்போவில் நான்கு நாட்களிலும் சௌபாக்யவதி விஜய லட்சுமியம்மை தனது கலா ஞானத்தைக் காட்டி பிடில் வாசித்தனர். அவர்களுடைய அன்பும் பண்பும் பாராட்டு தற்கு உரியன.

11-7-56 காலை வழிபாட்டில் நிரம்பிய அன்பர்கள் வந்து திருவருட் பேற்றைப் பெற்றனர். நண்பர் திரு **M.S. கந்தையா** தனது காருடன் வந்து கோலாலம்பூருக்குப் பிரயாணம் புரிந்துவைத்தார். ஒரு மனிதன் இந்த உலகத்தை விட்டே போகும் போது அவன் உறவினர் எப்படி அழுது நிற்பரோ அதுபோல் ஈப்போவில் உள்ள சகோதரிகளும் சகோதரர்களும் ஒவ்வொருவரும் அரைக் காற்படி கண்ணீரைச் சிந்தி கதியும் மதியும் கலங்கி வழிவிடுத் தார்கள். அவர்களுடைய அன்பு அளவிட முடியாதது.

> **"அன்புக்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
> **புன்கணீர் பூசல் தரும்"**

என்ற வள்ளுவர் வாக்கு நினைவுக்கு வந்தது. அவர் களிடம் பிரியா விடை பெற்றுப் பகல் 12-30 மணிக்குக்

காரில் புறப்பட்டு 143 மைல் கடந்து மாலை 3-30 மணிக்குக் கோலாலம்பூர் வந்து சேர்ந்தோம். இந்த 8 நாட்களிலும் கிள்ளான் திரு. **சோமசுந்தர சர்மா** உடன் வந்து மிகுந்த உதவி புரிந்தனர். இவர் குழந்தையுள்ளம் படைத்தவர். யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்தவர்.

கோலாலம்பூர்

இன்று மாணிக்கவாசகர் குருபூஜை. அதன் பொருட்டே கோலக்கன்சாரிலும், தைப்பிங்கிலும் மீளவும் சொற்பொழிவுகளுக்கு இருக்கவேண்டும் என்று வற்புறுத்தியும் நிற்காமல் கோலாலம்பூர் வந்து கந்தசாமி கோயிலில் மாலை மாணிக்கவாசகர் சரிதையைக் கூறினேன். வழக்கம் போல் வளமையாக திருமதி. ஞானம்பிகையம்மை பிடில் வாசித்தனர். ஆண்டுதோறும் திரு சுப்பிரமணியம் மணிவாசகர் குருபூஜையைச் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அவருடைய அன்பு சிறந்தது

கோலாலம்பூரிலிருந்து **பூச்சோங்** 14 மைல். அங்கு (12-7-56) மாலை தோட்டத்துத் தொழிலாளர்கள் சேர்ந்து விரிவுரைக்கு ஏற்பாடு செய்தார்கள். "துளசிதாசர்" என்பது பற்றிப் பேசினேன். திருமதி ஞானம்பிகையம்மை பிடிலும், திரு. தங்கவேல் மிருதங்கமும் ஏற்பாடாகியிருந்தன. சாதாரணமான ஜனங்கள் மிகுதியாக வந்திருந்து கேட்டு இன்புற்றார்கள்.

பொன் முடி புனைதல்

13-7-56. இன்று ஆனித் திருமஞ்சனம். வைகறை 3-30 மணிக்கு எழுந்து 5-45 மணிக்குள் வழிபாட்டை முடித்துக் கொண்டேன். 5-55மணிக்கு யாழ்ப்பாணத்து அன்பர்களுக்குச் சொந்தமான கந்தசாமி கோயிலை யடைந்தேன். அந்த நேரத்தில் ஆயிரம் பேர்கள் ஆண்களும், பெண்களும் நீராடி கோயிலில் நின்று வழிபாட்டில் கலந்து கொண்டிருந்தார்கள். இந்தக் காட்சி மறக்க முடியாதது.

ஷண்முகருக்குச் சிறப்பான அபிஷேக ஆராதனை ஆறுமுக அர்ச்சனை முதலியன நடைபெற்றன, ஷண்முகப் பெருமானுக்குப் புதியதாக இரத்தினங்கள் பதித்த

தங்க முடியை மேளதாளத்துடன் சிறியேன் கையில் கொடுத்து வலம் வந்து பெருமானுக்குச் சாத்தினார்கள்.

பின்னர் அன்பர் திரு செவ்வந்திநாதர் கூட்டுவழிபாடு நடத்தினர். காலை 10 மணிக்குச் சுமார் 500 அன்பர்கட்குப் பெருமானுடைய பிரசாதம் வழங்கப் பெற்றது. 10-30 மணி முதல் 12 மணி வரை அடியேன் "நடராஜ தத்துவம்" என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினேன். பக்தி ப்ரவசத்துடன் அன்பர்கள் கேட்டு மகிழ்ந்தார்கள்.

மாலை 6 மணிக்கு ஆதீச்சுரன் கோயிலில் "மார்க் கண்டேயர்" வரலாறு கூறினேன். திருமதி ஞானம்பிகை யம்மையார் பிடில் வாசித்து உபகரித்தனர்.

14-7-56. இன்று முருகன் கருணையால் எனக்கு ஓய்வு கிடைத்தது. தோண்டைக்கு மட்டுந்தான் ஓய்வு. மற்ற படி எழுத்து வேலையும், வந்த அன்பர்களுடன் உரை யாடும் அலுவலும் அதிகம் இருந்தன.

கோலாலம்பூர் பூமலையில் 13, 14, 15 தேதிகளில் ஒரு கலைவிழா (பேஸ்டா) அரசாங்கத்தினரால் நடந்தது. கடல் போன்ற கூட்டம். எறும்புச் சாரைகள் போன்று கார்கள் ஓடின. மாலையில்பூமலைசென்று அவ்விழாவைப்பார்த்தோம். அதில் கோலாலம்பூர் சங்கீதஅபிவிருத்தி சபாவினர்காட்டிய இந்திய நடன அரங்கு ஒன்று பாராட்டக்கூடியதாக இருந்தது.

15-7-56. கம்போங் பாண்டான் என்ற இடத்தில் சித்தி விநாயகர் ஆலயத்தில் மாலை 6 மணிக்கு "நளாயனி" வர லாறு கூறினேன். மக்கள் அன்பாக வந்து கேட்டு இன் புற்றார்கள்.

16-7-56. கம்போங் பாண்டான் சித்தி விநாயகர் ஆல யத்தில் மாலை 6 மணிக்கு "மீனாட்சியம்மை திருமணம்" விரிவுரை செய்தேன். இரண்டு நாட்களிலும் திருமதி. ஞானம்பிகையம்மை மிகவும் அழகாகப் பிடில் வாசித்தனர்.

கம்போங் என்றால் மலாயா மொழியில் **கிராமம்** என்று பொருள். கோலாலம்பூருக்கு அருகில் உள்ள ஊர். இங்

குள்ள மக்கள் மிக்க பக்தியுள்ளவர்கள். தக்கவர்களை மதித்து ஆதரிக்கும் தகுதி உள்ளவர்கள். இங்கு திரு. ஆஸாத் எனும் ஒரு முஸ்லிம் அன்பர் இடைவிடாது எனது விரிவுரையைக் கேட்டு இன்புற்றார். இவருடைய அன்பு மறக்க முடியாதது.

சித்தி விநாயகர் கோயிலில் ஒரு மண்டபம் புதுக்குதற்கு உயர்திரு. லிங்கத்தேவர் என்னும் தருமகுணசீலர் இசைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

17-7-56. கோலாலம்பூரிலிருந்து 45 மைல் தொலைவில் உள்ள பந்திங் (Banting) என்ற ஊரில் மாலை 6 மணிக்கு தாயுமானார் என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு செய்தேன். அன்பர்கள் நிரம்ப வந்து செவிமடுத்துச் சிந்தை மகிழ்ந்தார்கள். திருமதி ஞானம்பிகையம்மை பிடில் வாசித்தனர். கோலாலம்பூரிலிருந்து காரில் போய் வந்தோம். மலாயாவில் 40, 50 மைல் காரில் போவது என்றால் 1 மணி நேரந்தானே. 4, 5 மைல் பிரயாணம் செய்வது போல் இருக்கும்.

18-7-56. கோலாலம்பூரிலிருந்து கோலகுபு 40 மைல். மாலை அங்கு சென்று திருநீலகண்டர் சரித்திர விரிவுரை செய்தேன். திருமதி. ஞானம்பிகையம்மை வந்து பிடில் வாசித்தனர். அன்றிரவு அங்கு தங்கினேம்.

19—7—56. அதிகாலை காரில் புறப்பட்டு 40 மைல் கடந்து ரவுப் என்ற ஊர் சென்றோம். அங்கு திரு. டாக்டர் வைத்தியநாதன் அவர்கள் வீட்டில் நீராடி வழிபாடு செய்தோம். கோயில் அர்ச்சகர் ஸ்ரீ ரத்னசுவாமி ஐயர் அவர்கள் தனது சொந்தச் செலவில் கந்தசுவாமி கோயிலில் மாலை வள்ளியம்மை திருமணம் என்ற விரிவுரையை நடத்துவித்தார். மக்களுக்குப் பிரசாதம் வழங்கினர். ஏராளமான அன்பர்கள் வந்து கேட்டார்கள்.

ரவுப் என்ற ஊர் பல மலைகள் செறிந்த இடத்தில் பள்ளமும் மேடுமான இடத்தில் நல்லவளமையுடன் முகில்கள் தவழ மிகச் செழிப்பாகவுள்ளது. இந்த ஊரில் திரு. அம்பலவாணர் என்றவர் நல்ல தரும சிந்தையுடையவர்.

20—7—56. காலையில் வழிபாடு முடித்துவிட்டுக் காரில் புறப்பட்டோம். ப்ரேசர்ஹில் (Fraser Hill) என்ற மலைமீது காரிலேயே சென்று பார்த்தோம். அது நீலகிரி போல் குளிர்ந்த இடம். சுகவாசத்திற்காக ஆங்கிலேயரும் ஏனைய தனவந்தர்களும் அங்கு பூங்காவுடன் கூடிய பங்களாக்கள் வைத்திருக்கின்றார்கள். நன் மணமுள்ள மலர்களும், அழகு மட்டும் இருந்து மணமில்லாத மலர்களும் அங்கு நிரம்ப இருந்தன. அவைகளைக் கண்டபோது சிலர் அழகும் அன்பும் உடையவர்களாக இருக்கின்றார்கள். சிலர் அன்பில்லாத வெறும் அழகுடன் மட்டும் இருக்கின்றார்கள். இதனை நினைவு கூர்ந்தேன்.

அங்கே பால் பண்ணையும் இருந்தது. 200 தமிழ் மக்களும் அங்கு இருக்கிறார்கள். பலர் பக்தியுடன் திருநீறு வாங்கியணிந்து கொண்டார்கள்.

பூமியினின்றும் வளைந்து வளைந்து மலையின்மீது 5 மைல் காரில் சென்று அம்மலை உச்சியை அடைந்து அங்கு சுற்றிப் பார்த்துவிட்டு மீளவும் காரில் இறங்கினோம். 80 மைல்கள் கடந்து மாலை 3-மணிக்குக் கோலாலம்பூர் சேர்ந்தோம்.

மாலை மாரியம்மை கோயிலில் "**வ்ாலிமோட்சம்**" என்பது பற்றி விரிவுரை செய்தேன். மக்கள் திரண்டு வந்து நெருங்கி இருந்து கேட்டுப் பெருமகிழ்ச்சியடைந்தார்கள்.

21—7—56. மாலை கோலாலம்பூரிலிருந்து 28 மைலில் உள்ள கோலக் கிள்ளான் (இது ஒரு துறைமுகம்) சென்று இரண்டாம் முறையாக வியாபாரிகள் ஆதரவில், மாரியம்மை கோயிலில் 'திருவள்ளுவரும் திருக்குறளும்' என்பது பற்றி விரிவுரை செய்தேன். இங்கே பெரும்பாலும் கப்பலில் வேலை செய்யும் அலுவலர்கள் அதிகம். அவர்கள் அன்பாகக் கேட்டுத் தமிழின் பெருமையை அறிந்தார்கள். திருமதி ஞானம்பிகையம்மை பிடில் வாசித்து உபகரித்தனர்.

22—7—56. காலை வழிபாட்டில் பலர் வந்து கலந்து கொண்டார்கள். காலை 10-மணிக்கு விவேகானந்த ஆசிர

மத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடந்தது. அதில் பிரம்மஞான சபையினராகிய சென்னை சுப்ரமண்யம் என்பவர் உபன்யசித்தார். அதற்குப் பிறகு, 'ஞானம்' என்னும் பொருள் பற்றி ஒரு மணி நேரம் அடியேன் உபன்யசித்தேன்.

மாலை 4-மணிக்கு கோலாலம்பூர் வாசிகள் பிரிவு உபசார விழா நடத்தினார்கள். தேநீர் விருந்து வைத்தனர். பலர் பாராட்டிப் பேசினார்கள். உபசாரப் பத்திரம் வாசித்து அளித்தனர். பலர் கண்ணீர் மல்கி நின்றார்கள்.

மாலை 6-மணிக்கு விவேகானந்தா கல்விக் கூடத்தில் எனது திருப்புகழ் மாணவிகள் சேர்ந்து அழகான ஏற்பாடு செய்ய அவர்களது நன்முயற்சியால் **"இசையும் இறையும்"** என்ற ஒரு விரிவுரை புரிந்தேன். என்னிடம் பல மாணவிகள் திருப்புகழ் பயின்று கொண்டார்கள். அவர்கள் அன்று மிக்கத் திறமையாகப் பாடினார்கள். ஸ்வரங்கள் பாடி நிரவல் புரிந்தார்கள். திரண்ட கூட்டம். மாணவிகள் அருமையான பாடல் மூலம் **'உபசார மலர்'** அச்சிட்டு வழங்கினார்கள். மலாயாவில் பலர் திருப்புகழ் கற்றுக் கொண்டதில் எனக்குப் பெரிய திருப்தி.

23—7—56 காலை வழிபாட்டில் பலர் வந்து கலந்து கொண்டார்கள். மாலை மாரியம்மை கோயிலில் கடைசி விரிவுரையாக **ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம்** நடந்தது. திரு. **பழநிவேல் பிள்ளை** உபசாரப் பத்திரம் படித்துத் தந்தனர். இன்று எண்ணில்லாத ஜனங்கள் மிக்க ஆர்வத்துடன் கேட்டு அன்புக் கண்ணீர் சொரிந்தார்கள். முடிவில் பிரசாதம் வழங்கப் பெற்றது. மக்கள் காட்டிய அன்புக்கு அளவு ஏது?

அன்று பேசியதின் சுருக்கம் பின்வருமாறு:

ராமாயணத்தின் உண்மைப் பொருள்

ஸ்ரீ ராமாயணம் நமக்குப் பல உண்மைப் பொருள்களை உணர்த்துகிறது.

மோட்சமாகிய அயோத்தியில் மூலப் பிரகிருதியாகிய தசரதனிடத்தில் சுத்தமாயை அசுத்தமாயை மிச்ரமாயை

என்ற மூன்று மனைவிகளில் சுத்தமாயையில் சுத்தாத்மா என்ற ராமன் தோன்றினர். சிரவணமாகிய வசிட்டரிடத்தில் தேகேந்திரியங்களுக்குக் கோன் 'நான்' என்று உணர்ந்து, விஞ்ஞானமாகிய விஸ்வாமித்திரருடன் சென்று, மகமாயையாகிய தாடகையைச் சங்கரித்து, ஞானமாகிய வேள்விக் காவலை நடாத்தி, காமமாகிய மாரீசனை வேன்று, குரோதமாகிய சுபாகுவைக் கோன்றார்.

அறியாமையாகிய கல்லைப் பெண்ணுக்கி, மமகாரமாகிய வில்லை ஒடித்து, ஆனந்தமாகிய சீதையை மணந்து, அகங்காரமாகிய பரசுராமனை வாட்டி, தீர்க்ககோபமாகிய கூனியின் சொற்கேட்ட தன்னலமாகிய கைகேசி வேண்ட, தவமாகிய கானகஞ்சென்று, நிஷ்காம்யமாகிய குகனை நட்புகோண்டு, ஆசையாகிய கங்கா வெள்ளத்தைத் தாண்டி, உறுதியாகிய சித்ரகூட மலையில் தங்கினர்.

பக்தியாகிய பரதனுக்குப் பரஞானம் அபரஞானமாகிய பாதுகைகளை வழங்கி, விரோதமாகிய விரோதனைவென்று சமம், தமம், உபரதி, திதிக்ஷை முதலிய முனிவர்களுக்கு அருள் புரிந்து, பட்சமாகிய ஜடாயுவை நேசித்து, மோகமாகிய சூர்ப்பணகையை விரட்டினர்.

இராஜச குணமாகிய இராவணன் ஆனந்தத்தை அபகரிக்க, அதனைத் தேடிச் சென்று, அவித்தையாகிய அயோமுகியை நீக்கி, கவலையாகிய கவந்தனையகற்றி, நிர்விகல்பமாகிய சபரிக்கு முத்தி நல்கி, மெய்ஞ்ஞானமாகிய அநுமனைக் கோண்டு, அடங்காமையாகிய வாலியை வதைத்து, பரிசுத்தமாகிய சுக்ரீவனுக்குப் பட்டங்கட்டி, மெய்ஞ்ஞானமாகிய அநுமனுல்ஆனந்தமாகிய சீதையின் இருப்பிடத்தையறிந்து, பிறவியாகிய பெருங்கடலை அணைகட்டி, துர்க்குணங்களாகிய அசுரர்களைக் கோன்று, தாமத குணமாகிய கும்பகர்ணனையும், தசேந்திரியங்களாகிய பத்துத் தலைகளையுடைய ராசத குணமாகிய இராவணனையும் வதைத்து, சத்துவ குணமாகிய விபீஷணருக்குப் பட்டங்கட்டி, ஆனந்தமாகிய சீதையைச் சிறைமீட்டு, மோட்சமாகிய அயோத்தியையடைந்து, சுத்தாத்மாவாகிய இராமர் அரசாளுகின்றார். இத்தகைய உட்போருள்களைத் தன்னகத்தே கோண்டு உணர்த்துவது ஸ்ரீ ராமாயணம்.

அமுதக் கவி :

இதனைத் தமிழிலே நமக்குப் பாடிக் கொடுத்தவர் கம்பநாடர். அவர் கவிச்சக்ரவர்த்தி. தமிழிலே அவர் செய்த இராமாயணம், பெரிய அமுதக் கருவூலம். அதில் ஒரு பாடலை இங்கு நினைவு செய்வோம்.

கார்காலம் போனவுடன் வருகிறேன் என்று சென்ற சுக்ரீவன், வந்தானில்லை. ரிச்யமூக பர்வதத்தில் தங்கியிருந்த இராமர் தன் தம்பியை நோக்கி, 'தம்பீ! சுக்ரீவன் சொன்ன சொல்லை நிறைவேற்றத் தயங்குகின்ருன் போலும். அவன் மனதையறிந்துவா!' என்று கட்டளையிடுகின்ருர். அங்கே ஒரு பாடல் :

நஞ்சமன் னவரை நலிந்தா லது
வஞ்ச மன்று, மனுவழக் காதலால்
அஞ்சிலம் பதில் ஒன்றறி யாதவன்
நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய்'' —கம்பர்.

முதல் வரிக்கு இரண்டு பொருள்கள் :—

நஞ்சம் அன்னவரை :—விஷம் போன்ற கொடியவர்களை நாம் கொன்ருல், அது குற்றமன்று; அரச கர்மமேயாகும். பயிரைக் கெடுக்கின்ற புல்லைப் பிடுங்கி எறிய வேண்டும். களையெடுக்காதொழியின் பயிர் அழியும்.

மற்ருென்று :—

நைஞ்ச மன்னவரை - தருமத்தைவிட்டு நலிந்த சிற்றரசரை அடக்குவது பேரரசருக்கு உரிய கடமைதான்; அது மனு வழக்கு.

மூன்ருவது வரிக்கு :

(1) அஞ்சிலம் பதில் - ஒன்று அறியாதவன் :—அஞ்சில் அம் பதில் ஒன்று அறியாதவன் : அஞ்சிலும் அறியான், ஐம்பதிலும் அறியாதவன்.

(2) அஞ்—சிலம்பு—அதில்—ஒன்று :—அழகிய மலையில் வாழும் விலங்குகளில் ஒன்று. குரங்குதானே என்று பொருள். சிலம்பு—மலை.

(3) அஞ்சு-இல்-அம்பு-அதில்-ஒன்று-அறியாதவன் : அஞ்சுதல் இல்லாத பல அம்புகள் உண்டு. வாலியைக் கொன்ற அம்புபோல் பலவுள. அவற்றில் ஒன்றையும் அறிந்தானில்லை.

(4) அஞ்சு—இல்—அம்பு அதில்—ஒன்று—அறியாதவன் : இல்—மனைவி. அம்பு—கண்ணீர்.

அஞ்சுகின்ற இல்லாளாகிய சீதை வடித்த கண்ணீர்த் துளிகளில் ஒன்றையேனும் அவன் அறிந்தானில்லை.

'விழியம்பு ஒழுக மேத்திய மாதரும் வீதி மட்டே' என்ற பட்டினத்தார் பாடலாலும் அறிக.

(5) அஞ்சிலம்-பதில்-ஒன்று அறியாதவன் :-வாலிக்கு நம்மைத் துணை பற்றியதுபோல், நம்மை வெல்ல ஒருவனைத் துணை பிடித்தாலும் பிடிப்பான். ஆகவே, அதற்கு நாம் அஞ்சிலம்-அஞ்சமாட்டோம். பதில் ஒன்று அறியாதவன்-செய்த உபகாரத்திற்குப் பதில் நன்றி செலுத்தத் தெரியாதவன்.

(6) அஞ்சு - இல் - அம்பது அதில் ஒன்று அறியாதவன் :- தமிழ்க் கணக்கில் ஐம்பது 'ரு ய'. அஞ்சு - 'ரு' இது இல்லையானால், 'ய'. இது பத்து. அஞ்சில்லாதது, பத்து. பத்தில் ஒன்று-தசாவதாரத்தில் ஒன்று என்பதையறியவில்லை. வேறும் மனிதனாக நினைக்கில் தசாவதாரத்தில் ஒன்று என்பதை உணர்த்துவாய்.

(7) அஞ்சு-இல்-அம்பது :-

அஞ்சு இல்லாத அம்பது-(45) நாற்பத்தஞ்சு. அது ஒரு மண்டலம். இந்த மண்டலத்தில் ஒன்றும் அறியாதவன் : அறியாதவனுக்கு அறிவிப்பது நமது கடமை.

(8) அஞ்சு-இல்-அம்பது : அஞ்சு ரு இல்லையானால், ய; ய என்பது ஆக்ஞாஸ்தானம்.

மூலாதாரத்தில்—	ஓம்
சுவாதிஷ்டானத்தில்—	ந
மணிபூரகத்தில்—	ம

அநாகதத்தில்— சி
விசுத்தியில்— வ
ஆக்ஞையில்— ய.

எனவே 'ய' என்ற எழுத்துள்ள ஆக்ஞை; புருவநடு. அறிவு உள்ள இடம். அந்த இடம் பழுதுபடுமானல், உணர்த்துதல் வேண்டும். ஆகவே அவனுக்கு நீ சென்று உணர்த்து.

(9) அஞ்சு-இல்-அம்பது :-

அஞ்சு 'ரு' அது இல்லையானல், ய.

ந—ஆணவ மலம்
ம—திரோத மலம்
சி—சிவம்
வ—அருள்
ய—ஆன்மா

ஆன்ம வர்க்கத்துள் ஒருவனுகிய அவனுக்குச் சென்று அறிவுறுத்து.

(10) அஞ்சில்-அம்பதில்-ஒன்று :-

அஞ்சும், அம்பதும், ஒன்றும் சேர்ந்தால் 56; பிரபவ முதல் ஆண்டுகளை எண்ணிஞல் 56-வது ஆண்டு துந்துபி. துந்துபி என்ற எலும்பை லட்சுமணு நீ காலால் எற்றி விண்ணளவு அகற்றியதையும் அறிந்தானில்லை. அதனை அவனுக்கு நினைவு செய்.

* * * * * * * * * * * * * * *

K. கந்தையா

கோலாலம்பூரில் நான் தங்கியிருந்த போது திரு. K. கந்தையா என்பவரும் அவர் வாழ்க்கைத் துணைவியாரும் ஒருநாள் கூட விடாமல் பூஜைக்குரியவைகளைக் கொணர்ந்தும் மற்றத் தேவைகளையுதவியும் அளவற்ற அன்புடன் உபசரித்து வந்தார்கள். மிக்க பக்தி சிரத்தையுடன் பழகினுர்கள். அவர்களது எல்லையில்லாத அன்பை எண்ணும் போதெல்லாம் உள்ளம் குழைந்து உருகுகின்றது.

நாகலிங்கம் மாஸ்டர்

அவர்கட்கு ஆண்டவன் அருள் துணை புரியும். விவேகானந்தா பள்ளி ஆசிரியர் திரு. நாகலிங்கம் என்பவர் அளவற்ற அன்புடன் பழகினர். இவருடைய பண்பும் நற்குணமும் என் இதயத்தை ஈர்த்து விட்டது. இவருடைய வாழ்க்கைத் துணைவியாரும் அப்படியே அன்பு நிறைந்தவர்கள்.

மாப்பிள்ளைகள்

எனக்குக் கோலாலம்பூரில் இரண்டு மாப்பிள்ளைகள் அமைந்துவிட்டார்கள். ஒருவர் **ராமச்சந்திரம்** செட்டியார். தங்கமான குணம். உயர்ந்த உள்ளம். அருமையான பண்பு. மற்றொருவர் **நாகலிங்கம்** என்பவர். நாள் தவருது பூஜைக்கு வந்து தொண்டு புரிவதும், 4, 5 முறை வந்து வேண்டியதைச் செய்வதுமாக இருந்தார். கடல் போன்ற ஆழ்ந்த அன்புள்ளவர். இவர்கள் இருவரும் எனக்கு இரு கண்கள் போல விளங்கினர்கள்.

S. கந்தையா

நெருப்பணைக்கும் இயந்திர அலுவல் தலைவர் S. கந்தையா என்பவர் மிகுந்த அன்புடன் பழகினர். உயர்ந்த உள்ளமும் வள்ளன்மையும் படைத்தவர். என்னைத் தந்தைபோல் பாவனை செய்து குழந்தைபோல் நடந்துகொண்டார். அவருடைய தருமபத்தினியாரும் அப்படியே நடந்தனர்

பிரியாவிடை

24—7—56. காலை 10 மணிக்கு வழிபாடு முடிந்தது. இராமரை வனத்துக்கு அனுப்பும் போது அயோத்தியில் உள்ள மக்கள் என்ன துயரம் அடைந்தார்களோ, அந்தத் துயரத்துடன் கோலாலம்பூர் மக்கள் 300, 400 பேர் கூடி தாரை தாரையாகக் கண்ணீர் வடித்துக்கொண்டு ''ஹர ஹர மஹாதேவ'' என்று முழக்கம் செய்து காரில் என்னையும் தம்பி சச்சிதானந்தத்தையும் வழியனுப்பிய காட்சி என்றும் மனதில் நின்று நிலவுகின்றது. ஒருவர் வாய் விட்டுத் தேம்பியழுதார். சிறு குழந்தைகள் கூட அழுது கொண்டே நின்றன, என்மனம் எப்போதும் இளகிய தன்மையுடையது. அந்தத் துயரமான சோகக் காட்சியைக் கண்டு என் மனம் மிகவும் உருகியது. என்னல் சமாளிக்க முடியாத அளவில்

மனம் வேதனைப்பட்டது. அத்துணை உருக்கமாக நின்று வழியனுப்பினார்கள். ஆண்களும், பெண்களும் சிந்திய கண்ணீரில் முழுகிவிட்டு நான் புறப்பட்டேன். 43 மைல்கள் கடந்து பகல் 1 மணிக்குச் சிரம்பான் வந்தோம்.

சிரம்பான் சிரம்பானில்தான் என்னை மலாயாவுக்கு அழைத்த மத்திய வரவேற்புக் குழு உளது. அதன் தலைவர் அன்புருவமாய திரு. அ. பழ. பழநியப்பச் செட்டியார். அமைச்சர், பெருந்தகவுடைய திரு. N. தம்பித்துரை அவர்கள்.

அன்று மாலை, விவேகானந்த மண்டபத்தில் "பரதன் பரிவு" என்ற விரிவுரை செய்தேன். மிருதங்கம் தங்கவேல் பிள்ளை அருமையாக வாசித்தார். அன்பு நிறைந்த திருமதி ஞானம்பிகையம்மை பிடில் வாசித்தனர்.

25—7—56. மாலை 'பாஞ்சாலி சபதம்' என்பது பற்றி விரிவுரை செய்தேன். பாரதத்தில் உள்ள பல நுணுக்கங்களை எடுத்து இன்று விளக்கினேன்.

26—7—56. மாலை 'அனசூயாதேவி' சரித்திர விரிவுரை செய்தேன். இன்று திருமதி. ஞானம்பிகையுடன் எனது புதல்வியைப் போலத் திகழும் செல்வி விஜயலட்சுமியம்மையும் ஈப்போவிலிருந்து வந்து பிடில் வாசித்தனர்.

27—7—56. சிரம்பானுக்கு 12 மைலில் உள்ள **ஜெமிமா** (Jemima) என்ற ரப்பர் தோட்டத்தில் திரு. **நடராஜ பிள்ளை**யவர்களின் முயற்சியால் மாலை **விநாயகர் முருகர் பெருமை**யைப் பற்றி உபந்யசித்தேன். திருமதி. ஞானம்பிகை பிடில் வாசித்தனர். திரு. **நடராஜ பிள்ளை** உத்தமமான உள்ளன்புடையவர். அன்பே ஒரு வடிவானவர். இவருடைய பக்தியும் பண்பும் பாராட்டுதற்கு உரியவை. சிரம்பானிலிருந்து பலர் வந்து கேட்டு இன்புற்றார்கள்.

28—7—56. மாலை சிரம்பானிலிருந்து 21 மைலில் உள்ள **போர்ட்டிக்ஸன்**(Port Dickson) என்ற இடத்திற்குச் சென்று கடலில் நெடுநேரம் ஆடினோம். கடலாட்டு மிக்க மகிழ்ச்சியைத் தந்தது. நேருஜி இங்கு வந்து 7 நாட்கள் தங்கி

யிருந்து மகிழ்ந்தாராம். 10 மைல் நீளத்திற்குக் கடற்கரையில் பல பங்களாக்கள் இருக்கின்றன. சுகவாசத்திற்குப் பலர் வந்து பங்களாக்களில் தங்குவார்களாம். கடலில் அலையில்லாமையால் தெப்பக்குளம் போல் குளிப்பதற்கு வெகு சுகமாக இருக்கின்றது.

பின்னர் மாலை 7 மணிக்கு ஜெமிமா தோட்டத்தில் "சீதா கல்யாணம்" என்ற தலைப்பில் விரிவுரை செய்தேன். திருமதி ஞானம்பிகையம்மையும், செல்வி விஜயலக்ஷ்மி அம்மையும் பிடில் வாசித்துச் சிறப்பித்தார்கள். கோயிலும் சிறப்பாக அமைந்திருந்தது. மக்கள் ஒற்றுமையாக இருந்து கேட்டு உவந்தார்கள்.

பிரியாவிடை விழா

29--7--56 இன்று இங்கு மத்திய வரவேற்புக் குழுவின் பிரியாவிடை விழா நிகழ்ந்தது. காலையில் வழிபாட்டில் பலபேர் வந்து கலந்து கொண்டார்கள். 10 மணிக்குத் திருவருள் தவநெறி மன்றம் ஒன்று தொடங்கப் பெற்றது.

● ● ● ● ●

31—7—56 தமிழ்நேசனில் வெளிவந்தது

29--7--56ந் தேதி காலையில் ஸ்ரீ பாலதண்டாயுதபாணி கோவிலில் பூஜைக்குப் பிறகு, பல அன்பர்கள் முன்னிலையில் ஸ்ரீ வாரியார், **திருவருள் தவநெறி மன்றத்தின்** மலாயாக் கிளையினை ஆரம்பித்து வைத்தார். மத்திய வரவேற்புக் குழுவின் செயலாளர் ஸ்ரீ ந. தம்பித்துரை ஸ்ரீ வாரியாருக்கு வரவேற்புரை கூறிய பின், திருவருள் தவநெறி மன்றம் நிறுவப் பெற்றது.

வாரியாரின் பேச்சு

'மனிதர்களாகிய நமக்கு இரு பிறவித் துன்பங்கள் உண்டு. ஒன்று உடல் துன்பம். மற்றொன்று உயிர்த் துன்பம். உடலுக்கு வரும் துன்பத்தினை, நாமே போக்கிக் கொள்ளலாம். ஆனால், உயிருக்கு வரும் துன்பத்தைப் போக்க முடியாது. பிறவாத ஒருவனால் தான் அப்பிறவித் துன்பத்தை-உயிர்த் துன்பத்தைப் போக்க முடியும். பிறவித் துன்பத்தில் மூழ்கி உள்ள நம்மால் உயிர்த் துன்

பந்தைப் போக்க முடியாது. நாம் பூர்வ ஜென்மத்தில் செய்த பெரும் புண்ணியத்தினுல், இப்போது மனிதப் பிறவியை எடுத்திருக்கிறேம். அதிலும் சைவர்களாய்ப் பிறந்திருக்கிறேம். சைவர்களாகப்பிறந்திருக்கும் வாய்ப்பே,நமது பெரும்பாக்கியமாகும். சைவர்களாய்ப் பிறந்ததன் பயனுகத் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற பக்திப் பனுவலுள்ள நூல்களேப் படித்து இன்புறும் வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கிறது. இந்தப் பக்தி நூல்களேப் படிப்பதே வாழ்க்கையில் இன்பம்.

''புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன்'' என்கிருர் மாணிக்கவாசகர்.

சைவ சமயம்

இப்போது நமது சைவ சமயத்தின் வளர்ச்சி வர வரத் தேய்ந்து கொண்டே வருகிறது. சைவ சமயத்தின் விரோதிகள், சமண சமயத்தவர்கள். பாண்டிய நாட்டில் 6ம் நூற்ருண்டில் 8000 சமணர்கள் சமண சமயத்தைப் பரப்பினுர்கள். சிலப்பதிகாரம் தீட்டிய இளங்கோ, சமண சமயத்தவர். சிலப்பதிகாரம் சமண சமய நூல். சமணர்கள், சைவர்கள் திருநீறு பூசுவதைக் கண்டு வெறுத்தனர். சமணர்கள் தங்கள் வீட்டுக் குழந்தைகளேப் 'பூச்சாண்டி' (திருநீறு பூசுவோர்) என்று சொல்லிப் பயமுறுத்தி வந்தனர். அதைக் கேட்டுச் சைவர்களும் பொருள் தெரியாமல் தங்கள் வீட்டுக் குழந்தைகளே பூச்சாண்டி என்று சொல்லிப் பயமுறுத்துகிருர்கள்.

எல்லாம் ஒன்றே

சிவன் வேறு முருகன் வேறு அல்ல; நடராஜா வேறு தட்சிணுமூர்த்தி வேறு அல்ல. சிவனேதான் விநாயகராக, முருகனுக வந்தார். சிவபெருமான் பிறப்பு இறப்பு இல்லாதவர். சிவாலயத்தில் வணங்கும்போது, நாம் எல்லாத் தெய்வங்களேயும் சிவனுக நினைத்து வணங்க வேண்டும். தெய்வங்களிடத்தில் நாம் பேதம் காணக் கூடாது.

சிவபெருமான் நெருப்பு. அந்த நெருப்பில் உள்ள சூடு பார்வதி (பராசக்தி). நெருப்பில் தோன்றும் சிவப்பு

(விநாயகர்); நேருப்பில் எழும் ஒலி முருகன். சிவபெருமானுடன் தொடர்பு கொண்டால் நமது இறப்பு—பிறப்புத் தொலையும். இருவினை நீங்கும். 'பிறவாதிருக்க வரந்தர வேண்டும்', என பட்டினத்தடிகள் வேண்டுகிறார். சிவனை வணங்கினால் நாம் மறுபடியும் பிறந்து வணங்க வேண்டிய அவசியமில்லை. பிறப்பு இறப்பு இல்லாதவனிடம் நாம் சரணடைய வேண்டும்.

அருள் நூல்கள்

வாரத்திற்கு ஒரு முறையாவது அவனை நினைந்து நினைந்து உருக வேண்டும். தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற ஆண்டவன் அருள் நூல்களைப் படிக்க வேண்டும். கூட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டும். இங்கே வாழ்கின்ற நீங்கள் இலங்கையர், இந்தியர் என்ற பேதம் நீங்கி, நாமெல்லோரும் தமிழர் - சைவர்கள் என்ற அடிப்படையில் ஒற்றுமையோடு வாழுங்கள்.

திருவருள் தவநெறி மன்றம்

சைவ சமயத்தை வளர்க்க வேண்டும். அதற்காக தாயகத்தில் மதுரை மாநகரில் திருவருள் தவநெறி மன்றம் என்ற கழகத்தை நிறுவி, ஆங்காங்கே கூட்டுப் பிரார்த்தனை நடத்தி வருகிறோம். அதன் கிளை ஒன்றை மலைநாட்டில், சிரம்பான் நகரிலே ஆரம்பித்து, இதன் மூலம் வாரம் ஒரு முறை கூட்டுப் பிரார்த்தனை நடத்தி, தேவார வகுப்புகள் நடத்துவதற்கு இங்குள்ள பெருமக்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது நல்ல முயற்சி. பாராட்டக் கூடியது. இந்த மன்றத்திற்கு ஆங்காங்கே பல கிளைகளை நிறுவி, நன்கு செயல்பட எல்லாம் வல்ல திருவருளை இறைஞ்சுகிறேன் என்று கூறி; "பிடியதன் உரு உமைகொள" என்ற தேவாரத்துடன் திருவருள் தவநெறி மன்றத்தினை ஆரம்பித்து வைத்தார்கள். அதைத் தொடர்ந்து கோலாலம்பூர் ஸ்ரீ ரேத்தினம் சில தேவாரப் பாடல்களைப் பாடினார்.

நண்பகல் 12-30 மணிக்கு கோயில் பூஜைக்குப் பின் பிற்பகல் 1 மணிக்கு அனைவருக்கும் பகல் உணவு அளிக்கப்பட்டது.

பிரியாவிடை உபசரிப்பு :

பின்னர் பிற்பகல் 3 மணிக்கு கிருபானந்தவாரியார் அவர்களுக்கு, ஸ்ரீ பாலதெண்டாயுதபாணி கோயில் மண்டபத்தில் மத்திய வரவேற்புக் குழுவின் தலைவர் ஸ்ரீ அ. பழ. பழநியப்ப செட்டியார் தலைமையில் ஒரு பிரியாவிடை உபசரிப்பு நடைபெற்றது. மத்திய வரவேற்புக் குழுவின் செயலாளர் ஸ்ரீ தம்பித்துரை வாரியாருக்கு மலர்மாலை சூட்டினர். கோலக்கங்சார் ஸ்ரீ சேனதிராஜா இறை வணக்கம் பாடினர்.

கோலாலம்பூர் சேவந்திநாதன், கிள்ளான் தேனப்பன், கோலக்கங்சார் சேனதிராஜா, கோலப்பிலா வேலாயுதம் பிள்ளை, சிரம்பான் விவேகானந்தன், அலோர்க்காஜா இராமன் முதலியவர்கள் வாரியாரின் சைவப் பணி, தமிழ்த் தொண்டு, மேதாவிலாசம் அனைத்தையும் விரிவாக எடுத்துரைத்து, நன்றி கூறினர்.

வாரியார் அவற்றிற்குப் பதிலளித்துப் பேசுகையில்; "முருகன் அருளால் நான் இங்கு அனுப்பப்பட்டவன். நீங்கள் எனக்குக் கொடுத்த அன்பெல்லாம் என்னை ஆட்கொண்ட முருகக் கடவுளுக்கே ஆகுக. நீங்கள் காட்டிய பரிவை என்றும் மறக்க மாட்டேன். நீங்கள் அனைவரும் நன்ருக வாழ வேண்டும். இதையே உங்கள் பொருட்டு நான் ஆண்டவனிடம் தினமும் முறையிடுவேன்" என்று உருக்கமாய்க் கூறினார்கள்.

பின்னர், ஸ்ரீ தம்பித்துரை நன்றி நவிலப் பாராட்டுக் கூட்டம் இனிது முடிவுற்றது. கூட்ட முடிவிற்குப் பின் புகைப்படம் எடுக்கப்பட்டது.

பின்னர், மாலை 6-30 மணிக்கு ஸ்ரீ அ. பழ. பழநியப்ப செட்டியாரின் தலைமையில் ஸ்ரீ விவேகானந்த மண்டபத்தில் "பக்த நந்தனர்" என்னும் திருநாளைப் போவாரின் சரிதத்தை மிக உருக்கமாக, பக்தி சுவை ததும்பக் கூறினர். ஸ்ரீ. தம்பித்துரையின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

* * * * * * * * *

மாலை நந்தனர் சரித்திர விரிவுரையின்போது திருமதி ஞானம்பிகையின் பிடிலும், செல்வி விஜயலட்சுமியின் பிடி

லும் வெகுதிறமையாக அமைந்திருந்தன. பலர் உருக்கமாக விரிவுரையைக் கேட்டுப் பெருமகிழ்ச்சியுற்றார்கள். மலாயாவில் அடியேன் நான்கு மாதங்கள் சுற்றுப்பிரயாணம் புரிந்தேன். இன்னும் இரண்டொரு மாதம் என்னைத் தங்கியிருக்க வேண்டும் என்று பலர் வேண்டினார்கள். தாய் நாட்டில் உள்ள தொண்டின் காரணமாகவும், அமர்நாத் யாத்திரையை மேற்கொள்ளும் பொருட்டும் யான் புறப்பட நேர்ந்தது.

மலாயாவில் சைவ மறுமலர்ச்சி

மலாயாவில் சொற்பொழிவு கேட்ட பலர் சைவமாயினார்கள். கோலக்கஞ்சார் சின்னையா என்பவர் வாரத்திற்கு 5 கோழிகளைக் கொல்வது வழக்கமாம். அவருக்கு 23 குழந்தைகள். குடும்பத்துடன் சைவமாகிவிட்டார். மாதத்திற்கு 20 கோழிகளுக்கும் பலமீன்களுக்கும் உயிர்ப்பிச்சை கொடுத்த புண்ணியம் ஏற்பட்டது. இன்னும் பலர் சைவ மணங் கமழப் பெற்றார்கள். பலர் திரு ஐந்தெழுத்து ஓதத் தலைப் பட்டார்கள். அநேகர் தெய்வம் உண்டு என்ற நம்பிக்கையை மேற்கொண்டு மனிதப் பண்பைப் பெற்றார்கள். திருந்திய மக்கள் பலர்.

திருமதி ஞானம்பிகை பொன்னையா

கிள்ளான் - திருமதி ஞானம்பிகை பொன்னையா என்பவர் கோலாலம்பூரிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் அடியேன் விரிவுரைகள் நிகழ்த்தியபோது ஏறக்குறைய 40, 50 விரிவுரைகட்கு ஒரு சிறிதும் பயன் கருதாது தன் கணவனுடன் அவர்களுடைய சொந்தக் காரில் தங்கள் செலவிலேயே வந்து மிகவும் இங்கிதமாகவும் திறமையாகவும் பிடில் வாசித்து எனது உடன் பிறந்த தங்கையைப் போல் பழகினார்கள். பண்பு மிகுந்த இவருடைய நற்குணங்கள் மிகவும் சிந்தனைக்குரியன. நெஞ்சார நினைந்து வாயார வாழ்த்துகின்றேன். முருகன் கருணை முன்னின்று என்றும் இவர்கட்குத் துணை புரிந்து எல்லா நலன்களையும் அருளுமாக.

30—7—56. அதி காலையில் வழிபாட்டை முடித்துக் கொண்டேன். காலை 7-மணிக்கு திரு. N. தம்பித்துரை

சிரம்பானிலிருந்து புறப்பாடு

யவர்கள் காரில் புறப்பட்டோம். தலைவர் திரு. அ. பழ. பழநியப்ப செட்டியாரும், அமைச்சர் திரு. N. தம்பித்துரையும் உடன் வந்தார்கள். புறப்படும் போது ஒரு அம்மை ஓ என்று வாய்விட்டு அழுதனர். எல்லோரும் வாழ்க வாழ்க என்று வாழ்த்தினர்கள். டாக்டர் திரு. முருகேசு அவர்கள் மாலை சூட்டினர். வணங்கி நின்று வழிவிட்டார்கள். இந்தப் பிரியாவிடையில் கோலாலம்பூர், ஈப்போ, கோலக்கன்சார், கிள்ளான், ரவுப் முதலிய பலவூர்களிலிருந்து அன்பர்கள் வந்து கலந்து கொண்டார்கள்.

சிரம்பானுக்கும், சிங்கப்பூருக்கும் 210 மைல். காரில் ஏறிப் பிரயாணம் புரிந்தோம். பகல் 12-மணிக்கு ஜோகூரில் திரு. சின்னையா பிள்ளையவர்கள் வரவேற்றார். திரு. டாக்டர் நளினாட்சகுமார சர்மா அவர்கள் வீட்டில் பகல் உணவு அருந்தினோம். மாலை 3-மணிக்கு சிங்கப்பூர் சேர்ந்தோம்.

தண்டாயுதபாணி கோயிலில் தங்கினோம்.

31—7—56 காலையில் சிங்கப்பூர் நகரதன வணிகர்களுடைய தண்டாயுதபாணி கோயிலில் வழிபாடு முதலியவைகளை முடித்துக்கொண்டனம்.

ஜோகூர் பாரு

மாலை ஜோகூர் பாரு (Johore Bahru) என்ற நகரில் ஸ்ரீ ராஜமாரியம்மை கோயிலில் **பக்த நந்தனார்** என்னும் இனிய வரலாற்றை இன்னிசைக் கருவிகளுடன் விரிவுரை நிகழ்த்தினேன். ஜோகூர் மாகாணத்திற்குத் தலைநகரம் பாரு என்ற அந்த நகரம். அங்கு அம் மாகாண மன்னர் இருக்கின்றார். சிங்கப்பூரிலிருந்து 17 மைல்.

ஜோகூர்பாரில் உயர்திரு. ராம. சித. வே. சின்னையா பிள்ளை, J.P. என்ற உத்தம அன்பர் மலர்மாலை சூட்டி வரவேற்புரை கூறினார். ஈப்போவிலிருந்து செல்வி விஜயலட்சுமியம்மை தன் தந்தை திரு. ம. கந்தையாவுடன் என்னை வழியனுப்பும் பொருட்டும், தனது அன்பின் சின்னமாகப் பிரியாவிடை தரும் பொருட்டும் வந்தனர். அவருக்கு என்று

அமைந்துள்ள தனித்த இனிய முறையில் தேனுறு போலப் பிடிலில் கான வெள்ளம் பெருகத் துணைபுரிந்தனர். மக்கள் ஏராளமாகக் கூடிக் கேட்டு இன்புற்றார்கள்.

சிங்கை 1—8—56. சிங்கப்பூரில் மாலை உயர்திரு கோவிந்த சாமி நாயுடு அவர்கள் திருமாளிகையில் ''பாதுகா பட்டாபிஷேகம்'' என்னும் பொருள் பற்றிப் பேசினேன். செல்வி விஜயலட்சுமியம்மை பிடில் வாசித்தனர்.

2—8—56. சிங்கப்பூரில் உள்ள முக்கியமான பகுதி களைச் சுற்றிப் பார்த்தோம். மாலை ரங்கோன் ரோடு தமிழர் சங்கத்தில் **''தமிழரும் சங்கமும்''** என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினேன். அன்பர்கள் திரண்டு வந்து கேட்டு மகிழ்ந்தார்கள். செல்வி விஜயலட்சுமியம்மை பிடில் வாசித்தனர். அப்போது உயர்திரு **பக்கிரிசாமிப் பிள்ளை** யவர்கள் தலைமை வகித்தார்கள்.

3—8—56. காலை அன்பர் கனகரத்னம் அவர்கள் திருமாளிகையில் வழிபாடு செய்தேன். தண்டாயுதபாணி கோயிலில் அன்புருவாய திரு. அ. பழ. பழநியப்ப செட்டி யார் ஷண்முக அர்ச்சனை புரிவித்து அடியார்கட்கு அன்ன தானம் புரிந்தார்கள்.

மாலை மாரியம்மை கோயிலில் **''காரைக்காலம்மை''** சரிதை கூறினேன். இங்குதான் மலேயாவில் முதல் விரிவுரை செய்தேன். ஆதி அந்தம் ஆகத் தொடங்கிய இடத்தில் இறுதி விரிவுரை புரிந்தேன். அன்பர்கள் நிரம்ப வந்து கேட்டு எல்லையில்லாத மகிழ்ச்சியுற்றார்கள்.

செல்வி விஜயலட்சுமியம்மை இங்கும் பிடில் வாசித் தனர். இவர் மிக்க அடக்கமுடையவர். அன்பின் சொரூபம். அமைதியின் கருவூலம். இந்தியாவிலே ஸ்ரீ ரங்கத்தில் வாழும் மருங்காபுரி பிரம்மஸ்ரீ கோபாலகிருஷ்ணையரிடம் பிடில் கற்றுக்கொண்டவர். நல்ல சங்கீத ஞானம் படைத்தவர். இறையன்பில் தலை சிறந்தவர். எனக்கு ஒரு புதல்வியிருந் திருக்குமாயின் அம் மகளிடத்தில்கூட

செல்வி விஜயலட்சுமி

இத்துணைப் பாசம் அமையாது. இவருடைய நற்குணங் களால் இவரை எனது புதல்வியைப் போல் பாவனை செய்து முருகனை நினைத்து இவருக்கு எல்லா நலன்களும் விளைய வேண்டும் என்று ஆசி கூறினேன்.

இவர் பிடில் வாசிக்கும்போது மிக்க சௌக்கியமாகவும் ராக பாவங்களை நல்ல களையுடனும், சுருதி சுத்தமாகவும், மயிர்க் கூச்சல் எடுக்கும் அளவில் அத்துணைச் சிறப்பாக வும் வாசிக்கும் வன்மை படைத்தவர். ஈசுர பக்தியில் அள வில்லாத ஈடுபாடுடையவர். அதனால் இவருடைய பண்பு பாராட்டுதற்குரியது.

இந்தியாவில் சங்கீத வித்வத் சபையில் மாகாண நீதிபதி ஸ்ரீ அனந்த நாராயண ஐயர் தலைமையில் அரியக் குடி ராமானுஜ ஐயங்கார் முதலிய சிறந்த இசைப் புலவர் கள் கூடியுள்ள அரங்கில், சங்கீத மன்னர் சித்தூர் திரு. சுப்ரமணிய பிள்ளையவர்கள் **வாத்ய வித்யா விசாரத சங்கீத வித்வ கலாபூஷணம்** என்னும் அரிய பட்டமும் பெற்றவர்.

வள்ளல் திரு. P. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் மாலை சூட்டி இன்னுரை பகர்ந்து இனிது உபசரித்தனர்.

4—8—56. அன்பர்கள் அனைவரும் அளவற்ற அன் புடன் மலர்மாலை சூட்டிப் பிரியாவிடை தந்து விமான நிலையத்தில் வழியனுப்பினார்கள்.

பகல் 12-மணிக்கு விமானம் புறப்பட்டது.

மாலை 5-5-மணிக்குச் சென்னை சேர்ந்தோம். சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் எம்மை வரவேற்க அன் பர்கள் திரண்டு குழுமியிருந்தார்கள். காஞ்சிபுரம், வேலூர், வளைகுளம், பெரும்பேறு முதலிய ஊர்களிலிருந்து சுமார் 300, 400 பேர்கள் வந்து இருந்து "ஹர ஹர மஹாதேவா" என்று கடல்போல் முழங்கினார்கள்.

சென்னை நிகழ்ச்சி

மதுரையிலிருந்து முருகன் அருள்பெற்ற முனிவர் தமிழிசைத் தவமணி **ஸ்ரீமத் மாரியப்ப சுவாமிகள்,** டாக்டர் திரு. **ராஜராஜன்,** தேவார இசைமணி **A. சம்பந்தமூர்த்தி ஆச்சாரியார்,** மயிலை திருக் கோயில் தரும பரிபாலகர் திரு. கு. ஐயா. சுப்ரமண்ய முதலி

யார், பாரத் ட்ராவல்ஸ் அதிபர்கள் திரு. **சுப்பராவ்,** திரு. சுப்ரமண்யம், திரு. கேசவன் அவர்கள், இன்னும் பல அன்பர்கள் மாலை சூட்டி வரவேற்று அன்பு செய்தார்கள்.

6-மணிக்குச் சிந்தாதிரிப்பேட்டை சென்று மாலைக்கடனை முடித்துக் கொண்டு மயிலை சென்று கபாலீச்சரப் பெருமானை வழிபட்டேன். அங்கு ஆனந்த விகடன் துணையாசிரியர் திரு. **தேவன்** அவர்கள் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நிகழ்ந்தது. தேவன் தலைமையுரை நிகழ்த்தி "மலாயாவுக்குப் போய் வந்தது மிக்க பயனுடையது" என்று பாராட்டிப் பேசினார். சென்னை நகர கார்ப்பரேஷன் அதிபர் திரு. D. பாலசுந்தரம் அவர்களும் மகிழ்ச்சியுரை கூறினார். பின்னர் சிறியேன் சைவசமய உண்மையில் சிலவற்றை விளக்கி விரிவுரை செய்தேன்.

இரவு 9-30 மணிக்குச் சென்னை வானொலியில் "திருக்குறள் இன்பம்" என்பது பற்றிப் பேசினேன்.

5—8—56. காலையில் அமர்நாத் யாத்திரைக்குரிய ஆயத்தங்கள் செய்தேன்.

மாலை பூக்கடை மல்லீச்சுரன் கோயிலில் தருமையாதீனத்தின் சென்னைக் கிளை அதிபர் ஸ்ரீலஸ்ரீ **சோமசுந்தரத் தம்பிரான்** சுவாமிகள் தலைமையில், அருணகிரி நாத பக்த ஜன சபையார் ஒரு பாராட்டு விழா நிகழ்த்தினர்கள். உயர் திரு. சித்தாந்தப் பேராசிரியர் இளவழகனார் முதலானோர் பாராட்டுரை பகர்ந்தார்கள். பல உபசாரப் பத்திரங்கள் படித்து நல்கினர்கள். பின்னர் அடியேன் 'மலாயாவும் முருகன் கருணையும்' என்பது பற்றிப் பேசினேன்

அன்றிரவு 9-40 மணி ரயில் வண்டியில் புறப்பட்டுக் காலை திருச்சி சேர்ந்தேன்.

திருச்சியில் பாராட்டு

மரவாணிபம் தருமகுணசீலர் திரு. **ஆ. பொன்னுசாமி பிள்ளை,** திரு. **சுப்பையா பிள்ளை,** திரு. **சோமசுந்தரம் செட்டியார்,** திரு. **நாகைய செட்டியார்,** திரு. **பாலசுப்ரமண்யம்,** திரு. **ராஜகோபால் செட்டியார்,** முதலியோர் புகைவண்டி நிலை

யத்தில் மலர் மாலை சூட்டி வரவேற்று மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

அன்று காவேரியில் நீராடினேன். ஆடி அமாவாசை புண்ணியதினம். ஆதலின் காவேரிஸ்நானம் மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

மாலையில் சின்னக்கடை வீதியிலிருந்து, திருச்சி மலைக் கோயில் தருமபரிபாலகர் உயர் திரு. **T. M. கலியபெருமாள் பிள்ளை** அவர்கள் என் உயரத்தில் ஒரு பெரிய மலர் மாலை சூட்டி மேளதாளங்களுடன் வரவேற்று மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

மாலை 6-30 மணிக்கு நூற்றுக்கால் மண்டபத்தில் திருப்புகழ்த்தத்துவார்த்தப் பிரசங்க சபையார் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தினார்கள். உயர்திரு. ரா. ப. சாமிக் கண்ணு பிள்ளை முதலியோர் பாராட்டிப் பேசினார்கள். 'மலாயாவும் மக்களும்' என்பது பற்றிச் சிறியேன் விரிவுரை செய்தேன்.

மதுரை நிகழ்ச்சி

7—8—56 காலை 7-மணிக்கு மதுரை சேர்ந்தேன். மதுரை மக்கள் 3000, 4000 பேர் புகைவண்டி நிலையத்தில் குழுமியிருந்தார்கள். அடியேனைக் கண்டவுடன் மதுரை மாநகரவாசிகள் எல்லையில்லாத அன்புடன் ஆரவாரம் புரிந்தார்கள். மதுரை ஆதீனத்தின் சார்பில் மலர் மாலை சூட்டப் பெற்றனன். நகராண்மைக் கழகத் தலைவர் உயர் திரு. **ராணி சுப்புராமையர்** மலர்மாலை சூட்டினார். பின்னர் 300, 400 மாலைகள் பலரும் சூட்டினார்கள். பூக்கடை காலியாகிவிட்டது என நினைத்தேன்.

புஷ்பரதத்தில் அடியேனை யேற்றி நாதஸ்வரம், பேண்டு வாத்தியங்களை முழக்கி எண்ணில்லாத அன்பர்கள் புடை சூழ நேரே மீனாட்சியம்மைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். அன்பர்கள் சிறியேனுக்குச் செய்த சிறப்புகளைக் கண்டு மனம் கவன்றது. தடுக்கமுடியாது தவித்தேன். அவர்கள் செய்த சிறப்புக்கள் யாவும் என் உளமேவிய வள்ளி மணவாளனுக்கே உரியது என்று அமைதியுற்றேன்.

ஆலவாயண்ணலையும் அங்கயற்கண்ணம்மையையும் உள்ளங்குழைந்து வழிபாடு செய்தேன். மதுரை பிரதான ஸ்தானீகரும், சிவதர்ம பாஸ்கரரும், சிவாகம வல்லுனரும் ஆகிய சிவத்திரு. ம. க. சுந்தரேச பட்டர் அவர்கள் மீனுட்சி யம்மை கோயிலுக்கு அழைத்துச் சென்று நிறைகுடம் முதலான சிறப்புக்கள் செய்து, அம்பிகை சுவாமி கோயில் களில் அர்ச்சனை புரிந்து பிரசாதம் வழங்கினுர்கள்.

பின்னர் திருப்புகழ் சபைக்குச் சென்று, திருஞான சம்பந்தர் திருமடாலயம் சேன்றேன். அங்கு சைவசமயம் தழைக்கும் போருட்டு உடல், போருள், ஆவியனைத்தையும் தியாகம்புரிந்து இளவரசராக வீற்றிருக்கும் திருப்பெருந்திரு திருவருள் தவயோக **சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள்** வரவேற்று ஆசிகூறினுர்கள். அவ்வாறு அவர்கள் ஆசியுரை வழங்கும் போது;

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்."

என்ற போய்யா மோழிப்படி அன்புக்கண்ணீர் சிந்தினுர்கள். சிறியேன் மலாயா போய்வந்ததனுல் விளைந்த பயனைப் பற்றிப் பேசினேன். பகல் 1-மணிக்கு திருஞான சம்பந்தர் மடாலயத்தில் மகேசுர பூசை நிகழ்ந்தது.

மாலை 6-மணிக்கு மீனுட்சியம்மை திருக்கோயில் வடக் காடிவீதி திருப்புகழ் மண்டபத்தில் மிகப் பேரிய பாராட்டு விழா நிகழ்ந்தது. அப்போது மதுரை ஆதீனம் இளவரசு தலைமை தாங்கி தலைமையுரை நிகழ்த்தினுர்கள்.

திருக்கோயில் தருமபரிபாலகர் R. கிருஷ்ணசாமி பிள்ளை அவர்கள், சன்மார்க்க சண்டமாருதம் உயர் திரு. பசும் போன் **முத்துராமலிங்கத் தேவர்**, திரு சிவக்கிழார் **வா.திருநா வுக்கரசனுர்**, சேஞ்சோல் சிங்கம் உயர் திரு. **வீர சிவ சுப்ர மண்யம்** முதலியோர் பாராட்டுரை பகர்ந்தார்கள்.

இவ்வாறு முருகன் கருணையால் மலாயாவின் சுற்றுப் பிரயாணம் இனிது நிறைவேறியது.

மலாயாவின் மற்றைச் சிறப்புக்கள்

மலாயாவுக்கு இந்தியாவிலிருந்து பழங்காலத்து தமிழ் மக்கள் கப்பல் மூலமாகச் சென்று, அங்கு குடியேறி நாட்டைப் பண்படுத்தினர்கள். சமீபத்தில் கிள்ளான் என்ற துறைமுகத்திற்கு அருகில் பூமியை அகழ்ந்தபோது ஒரு முருகர் விக்கிரகம் கிடைத்தது. அந்த விக்கிரகத்தை இன்றும் காணலாம். இன்னும் பல இடங்களில் சிவலிங்கங்கள் காணப்பட்டன என்றும் கூறினர்கள்.

பேரா சமஸ்தானத்தின் முஸ்லீம் அரசனுகிய சுல்தானுக்கு ''நராதிராஜா'' என்று பட்டம். இனி அவர்கள் ராமாயண சம்பந்தமான நாடகங்கள் நடிக்கின்றூர்கள். முஸ்லீம் மதத்தில் சார்ந்த மலாயர்கள் இன்றும் பேசுகின்ற பேச்சுக்களில் நூற்றுக்கணக்கான தமிழ், வட மொழிச் சொற்கள் கலந்திருக்கின்றன. அவற்றுள் சில அடியில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்		மலாய்	தமிழ்		மலாய்
பாதம்	-	பாதம்	மந்திரம்	-	மந்திரா
நாடி	-	நாடி	பக்தி	-	பக்தீ
மீசை	-	மீசா	தெய்வம்	-	தேவ
ரோமம்	-	ரோம	தேவி	-	தேவீ
ரூபம்	-	ரூபா	காலக்	-	காலா
முகம்	-	முகா	தற்காலம்	-	தக்காலம்
மனிதன்	-	மானுஸிய	தினம்	-	தீன
ஸ்திரீ	-	ஸ்திரி	சதா காலம்	-	சத கால
ஸ்வாமி	-	ஸுவாமி	லவங்கம்	-	லவங்
வம்சம்	-	வங்க்ஸா	கர்ப்பூரம்	-	காப்பூர்
ராஜன்	-	ராஜ	சந்தனம்	-	சந்தான
மஹாராஜா	-	மஹாராஜா	பெட்டி	-	பெட்டீ
சாஸ்திரம்	-	சாஸ்திர	மாணிக்கம்	-	மானிகம்
ஆகமம்	-	ஆகம	கிரஹணம்	-	கிரஹன
குரு	-	குரு	பூமி	-	பூமி
பூஜை	-	பூஜா	காகம்	-	காக
சுவர்க்கம்	-	சுர்க்க	கருடன்	-	கருட

தமிழ்	மலாய்	தமிழ்	மலாய்
புஷ்பம்	- பூஷ்ப	முதல்	- முதல்
சண்பகம்	- சம்பக	கட்டில்	- கட்டில்
சரோஜம்	- ஸரோஜ	புத்திரன்	- புத்திரா
குங்குமம்	- கும்குமா	புத்திரீ	- புத்திரீ
மாம்பழம்	- மம்பேலம்	பாஷை	- பாஷா
சுகம்	- ஸிக	நாமம்	- நாம
துக்கம்	- தூக்க	கழுதை	- கல்தை
மூர்க்கம்	- முர்க்க	பாதுகா	- பதுகா
லோபி	- லோபா	தூளி	- தூலி
சத்தியவான்	-சேதீயவான்	தேசம்	- தேஸ
தோஷம்	- தோஸ	சாட்சி	- சாட்சி
துஷ்டன்	- துஸ்ட	அநியாயம்	- ஆநியாய
குணம்	- குன	பாக்கி	- பாக்கி
மணி	- மனி	காரணம்	- காரன
குளம்	- கோலம்	கம்பளி	- கமிலி
சரித்திரம்	- ச்சேரிதா	பூங்கா	- பூங்கா
சத்துரு	- சத்ரு	சம்பூர்ணம்	-சம்போர்ண
கும்பல்	- கும்புல்	விநாசம்	- விநாச
வர்ணம்	- வர்ன	லாபம்	- லாப
நகர்	- நேக்ரீ	ஜீவன்	- ஜீவ
நீலம்	- நீல	ரகஸ்யம்	- ரஹஸ்ய
கோட்டை	- கோட்டா	மாளிகை	- மேலிகை
ஜயம்	- ஜய	சிம்மாசனம்	-சிங்காஹஸன
கப்பல்	- கப்பல்	ப்ரதான மந்திரி	- பர்த்தன மந்திரி

இன்னும் பல உள. எடுத்துக்காட்டாக ஒரு சில இங்கு குறிப்பிடப்பட்டன.

நன்றி

மக்கள் திருத்தமடைந்து நல்வழிப்பட்டு அருள் நலம் பெறுவதற்குக் காரணமாக அடியேனை மலாயாவுக்குத் தருவித்து எல்லா உதவிகளையும் புரிந்த மத்திய வரவேற்புக் குழுத் தலைவர் சிரம்பான் திரு. **அ. பழ. பழநியப்ப செட்டியார்**, அமைச்சர் திரு. **N. தம்பித்துரை** அவர்கள் ஏனைய குழுவினர்கட்கும், மற்றும் அன்பு செய்து அடியேன் புரியும் அறப்பணிகட்கு உதவி புரிந்த மற்ற அன்பர்கள் அனைவர்கட்கும் எனது மனம் கனிந்த நன்றி.

எல்லோருக்கும் எனையாளும் இளம்பூரணனுடைய இன்னருள் என்றும் நின்று அருள் புரியுமாக.

அநுபந்தம்

சிங்கப்பூரில் முக்கிய இடங்கள்

1. நகரத்தார் தண்டாயுதபாணி கோவில்.

2. ப்ரேசர் & நீவ் ஏரேடேட் வார்ட்டர் கம்பேனி; இவ்விடம் பலவித பழச்சாறுகள், சோடா, கலர், சர்பத் வகைகள் சுகாதாரமுறையில் கைபடாமல் செய்து பாட்டில் களில் அடைப்பதும், பாட்டில்களைக் கொதிக்கும் வெந் நீரிலும் சோப்பிலும் மெஷீன்கள் சுத்தம் செய்வதும், வெளியில் அடுக்கு அடுக்காகப் பாட்டில்களை வைப்பதும் பாட்டில்கள் நகர்ந்து போவதும், நிரப்பிக்கொள்வதும், மூடியிடப்படுவதும், பல சோதனைகளுக்கு உட்பட்டு நகர்ந்து போய் கள்ளிப்பெட்டியில் அடைபடுவதும் ஆச்சரியமாக விருக்கும்.

3. சிங்கப்பூர் இம்ப்ரூவ்மெண்டு டிரஸ்டு (Singapore Improvement Trust) ஷை டிரஸ்டு பல அடுக்கு வீடுகள் நிறைந்த பல காலனிகள் ஏற்படுத்தி,வீடுகளைவாடகைக்குக் கொடுத்திருக்கின்றது. அவ்வப்பகுதிகளில் பள்ளிக்கூடம், மார்க்கட்டு, விளையாடுமிடம், திறந்த வெளிகள், சுகாதார வசதிகள், தண்ணீர், மின்சாரம், காஸ் (அடுப்பெரிக்கும் வாயு—Gas) முதலிய வசதிகளும் உள்ளன.

4. ஜெனரல் ஆஸ்பத்திரி, பல அடுக்குக் கட்டிடங்கள் கொண்டது. கீழ் நாடுகளிலேயே சிறந்த சஸ்திரசிகிச்சை நிலயங்களும், எல்லா வியாதிகளிலும் சிறப்புப் பயிற்சி பெற்ற டாக்டர்களும் கொண்டது. சகல வசதிகளும் நிறைந்தது.

5. சிங்கப்பூர் துறைமுகம், (Harbour) பல கப்பல்கள் பிடிக்கக் கூடிய எம்பைர் டாக் (Empire Dock) பெரிய கப்பல்களைப்பழுதுபார்க்கும் கிங்க்ஸ் டாக்(Alberta Dock), குவின்ஸ் டாக்(Victoria Dock)இவை கொண்டது. தினமும் பல கப்பல்கள் வந்து கொண்டும் புறப்பட்டுக் கொண்டும் இருக்கின்றன. சுமார் 3 மைல் நீளம். இயற்கைப் பாது காப்புகள் நிறைந்த துறைமுகம்.

6. மௌண்ட் பேபர், இதன் உச்சியில் ஏறி நகரத்தின் இயற்கை அழகைக் கண்டு களிக்கலாம்.

7. டைகர் நீச்சல் குளம்.

8. ஆபாவிலா பார்க், சீன சிற்ப ஓவியங்கள்; சீன புராணக்கதைகளை சிற்பமூலம் விளக்கும் பல இடங்கள், புத்த விக்கிரகங்கள், ஷை இடத்தின் சொந்தக்காரரின் தூபிகள், சுவர்க்க, நரக விளக்கங்கள் விசாரணைகள் ஓவியங்கள் மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

9. கடற்கரை ஓர ரோடும், அழகிய கட்டிடங்களும்.

10. பூமலை, கீழ் நாட்டின் அழகிய பூங்காக்களில் ஒன்று.

11. ஆபாவிலா வீடு.

12. கவர்னர் மாளிகை.

13. மெக்டோனுல்டு ஹவுஸ்; ஒன்பது அடுக்குக் கட்டிடம்; பல ஆபீஸ்கள் இருக்கின்றன. பூராவும் "ஏர் கண்டிஷன்" செய்யப்பட்டது.

14. கேத்தே பில்டிங் (Cathay Bnilding) பதின்மூன்று அடுக்குகள் உள்ளது.

15. ரேப்ள்ஸ் ஓட்டல்
16. ரேப்ள்ஸ் ஸ்கூல்
17. ஷேக்ள் கிளப்
18. அடல்பி ஓட்டல்
19. மேயர் மான்ஷன் (ஐந்து அடுக்குக் கட்டிடம்)
20. மியூசியம்
21. மீன்காட்சி சாலே, கிங் ஜார்ஜ் பார்க்.
22. சிடி கவுன்ஸில் ஹால்
23. ஹைகோர்ட்
24. சட்டசபை
25. விக்டோரியா மெமோரியல் ஹால்
26. அரசாங்க அலுவலகங்கள்

27. போஸ்டாபீஸ் மற்றும் பல அலுவலகங்கள் உள்ள புல்லர்ட்டன் பில்டிங்.

28. கிளிப்பர்டு பீயர் (Clifford Pier) கடலுக்குள் (துறைமுகத்தில் இல்லாமல்) பிடிக்கும் கப்பல்களில் வருபவர்கள் போகிறவர்கள் இறங்க ஏற உள்ள அழகிய கட்டிடம் கடலுக்குள் கட்டப்பட்டது.

29. யூனியன் பில்டிங்

30 ஹாங்காங் ஷேங்கை பாங்கு.

31. ரேப்ள்ஸ்ப்ளேஸ்; சுற்றிலும், பல கம்பேனிகளும் கடைகளும் உள்ளன. நடுவில் கார்களும் மற்ற வாகனங்களும், நிற்க திறந்த வெளியும் உள்ளது.

32. எலிசபெத் வாக் (Elizabeth Walk) கடற்கரையோரமாக உள்ள சிங்கார வனமும், காற்று வாங்கும் இடமும், யுத்த ஞாபகார்த்த கட்டிடமும், நீர் அலங்கார ஊற்றும் பல சமூகத்தின் பலவகை பானங்களும், உண்டியும் பழங்களும் வாங்க வசதியான கடைகளும் உள்ளன.



அமர்நாத் லிங்கம்.

உ

முருகா

காஷ்மீர் அமர்நாத் காட்சி

புண்ணிய நதிகளில் முழுகி புண்ணியத் தலங்களில் விளங்கும் புனித மூர்த்தியைத் தரிசிப்பதனுல் பல பிறவிகளில் புரிந்து குவிந்துள்ள சஞ்சித வினைகள் எரிந்து கரிந்து சாம்பலாகி விடும். வினைகள் விலக வேண்டுமானுல் திருமந்திர ஜெபம், திருமுறைப் பாராயணம், திருத்தல யாத்திரை முதலியவற்றை மேற்கோள்ள வேண்டும்.

''விண்ணளவும் அடுக்கிய விறகு மலையை ஒரு சிறு நெருப்புப் பொறி புகுந்து அழிப்பது போல் ஒரு கோடி பிறப்புகளில் செய்த சஞ்சித வினை மலையைத் திருஐந்தெழுத்து சாம்பலாக்கிவிடும்.'' என்கின்றுர் அப்பரடிகள்.

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில் அவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே.

''திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே''
''முந்தை வினை முழுதும் ஓய உரைப்பனியான்''
''பக்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்''

என்ற தமிழ் மறை வசனங்களால் அறிக.

காஷ்மீரத்துக்கு அப்பா லுள்ள அமர்நாத்துக்குச் சென்று அமரநாதரை வணங்க வேண்டும் என்ற அவா நெடுநாட்களாக இருந்து வந்தது.

சென்னையிலுள்ள எனது அன்புக்குரிய **V. R.** பீதாம்பரமும், **A K.** பாண்டுரங்கமும் இந்த அமர்நாத் யாத்திரைக்குச் செல்லலாம் என்று ஒரு வருடத்திற்கு முன்னரேயே என்பால் அறிவித்தனர். அதற்குரிய ஆயத்தங்களையும் புரிந்து வந்தார்கள்.

அமர்நாத் யாத்திரை மற்ற யாத்திரைகள் போன்று எளிதானது அன்று; மிகவும் கடினமான யாத்திரை. "**அமர்நாத், மரணுத்**" என்று ஒரு வசனமுண்டு. உயிருக்குத் துணிந்து செய்ய வேண்டிய யாத்திரை.

கேதார, பத்ரி யாத்திரைகளையும் எளிதாகச் செய்துவிடலாம். இந்த அமர்நாத் யாத்திரையை அப்படிச் சுலபமாகச் செய்துவிட முடியாது. தகுந்த துணையும் ஏவல் முதலியனவும் அமைத்துக் கொண்டுச் செய்யவேண்டிய யாத்திரை.

ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த ஆதிசங்கரர் இங்கு சென்று தரிசித்திருக்கின்றுராம். சென்ற நூற்றுண்டிலே வாழ்ந்த சுவாமி விவேகானந்தா சென்று அமர்நாத் பெருமானைச் சேவித்து அப்படியே தன்னை மறந்து நின்றுவிட்டாராம். அப்போழுது அவர் கண்களில் உதிரம் வடிந்ததாம்.

அமர்நாத் குகையில் இயற்கையாக மேலிருந்து சொட்டு சொட்டாக நீர் விழுகின்றது. பனிக்கட்டியில் லிங்கவடிவம் அமைகின்றது. அக்காட்சி பவுர்ணமியில் காணப் படுகின்றது. சென்ற ஆண்டில் 6-அடி 6-அங்குலம் உயரமாக அமைந்ததாம். அப்படி அமைவதன் காரணத்தை அரசாங்கத்தாரும் வேறு பல ஆராய்ச்சியாளரும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏதோ ஒரு தெய்வீக சக்தி யென்றே முடிவுகட்டியுள்ளனர். ஆனி, ஆடி, ஆவணி என்ற மூன்று மாதங்களில் பவுர்ணமியன்று தரிசனை.

அமாவாசையன்று லிங்கம் அறவே தெரியாமல் மறைந்து விடுகின்றதாம். அமாவாசைக்குமறுநாள் தொடங்கிச் சிறிது சிறிதாக வளர்ந்து பவுர்ணமியன்று உயரமாகப்

படத்தில் இருக்கும் அளவில் காட்சி' தருகின்றது. அற்புதமான காட்சி.

அமர கங்கைஸ்னனமும், அமர்நாத் ஆண்டவர் காட்சித் தியானமும் கிடைப்பது மிக்க அருமையிலும் அருமை. சுகம் என்பதை அறவே மறந்து துன்பத்தின் சிகரத்தில் சென்று தான் இன்பத்தின் வடிவாகிய இறைவனைக் காணவேண்டும்.

தங்கம் துன்பப் பட்டுதானே ஆபரணமாகின்றது. அழகாகவும் அமைந்து எல்லோராலும் விரும்பப் படுகின்றது. அது அணிகலமாக ஆவதற்குத் தட்டார் கையில் அகப்பட்டுக்கொண்டு அதுபட்ட வேதனைக்கு அளவேது? எத்தனை முறை அத் தங்கம் நெருப்பிலே வேதுப்பப்பட்டு தட்டுப்பட்டு இழுக்கப்பட்டு ராவப்பட்டு இடர்ப்படுகின்றது. இந்தப் பெருந் துன்பத்திற்கு அப்பால் மெருகு இடப்பெற்றுப் பளபள என்று வெல்வெட்டுப் பெட்டியில் ஏறி கண்டவர் மனத்தைக் கவர்ந்து கவின் பெறுகின்றது.

அது போல் ஒரு பெரு நன்மையைப் பெற வேண்டு மாயின் இடர்ப்பட வேண்டியுளது. ஆகவே அமர்நாத் பெருமானை வணங்குவதற்கு எல்லையில்லாத இடர்கள் உள. அவற்றை யெல்லாம் அனுபவத்தில் கண்டோம். அவற்றைக் கீழே குறிக்கின்றேன். அமர்நாத்துக்குச் செல்லும் வழி முதலியவற்றையும், அங்கு செல்லும்போது என்ன என்ன கொண்டுபோக வேண்டும் என்பதையும் எழுதியுள்ளேன்.

யாத்திரை செய்யக் கருதுவோர்க்குப் பயனாக இருக்கும். மற்றவர்கள் படித்து அமர்நாத் பெருமானுடைய திருவுருவத்தைப் படத்தின் மூலம் தெரிசித்து இங்கிருந்தே திசைநோக்கித் தொழுது ஆறுதல் அடைக.

புறப்பாடு

துன்முகி, ஆடி (10—8—56) வெள்ளிக்கிழமை பகல் 12-மணிக்குச் சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தில் கிராண்ட்ரங்க் எக்ஸ்பிரசில் புறப்பட்டோம்.

என்னுடன் புறப்பட்ட அன்பர்கள்:

1. **V. R.** பீதாம்பரம்
2. **A. K.** பாண்டுரங்கம்
3. **R.** பூவராக நாயுடு
4. **A. K.** பார்த்தசாரதி
5. **M.** ஜெயராமன்
6. ஜெயராமன்
7. ராஜு செட்டியார்
8. தேவராஜு
9. திருநாவுகரசு முதலியார், பேரம்பூர்
10 **D.** தனபால்
* 11. துறையூர் பா. மு. மாரிமுத்து முதலியார்
* 12. நெல்லை வீ. சங்கரன் பிள்ளை
13. சச்சிதானந்தம் (எனது தம்பி)
14, **P. V. A.** கோவிந்தசாமி ஐயர், கும்பகோணம்
15. தில்லையாடி விவேகானந்த ஆஸ்ரம அதிபர் சுவாமி **சங்கரானந்தா**
16. சுப்ரமண்ய ஐயர் (சமையல்)

*(இவர்கள் முன் காசியாத்திரையில் உடன் வந்தவர்கள்)

என்னுடன் 17 பேர்கள். எல்லோரும் முன்கூட்டியே காஷ்மீர் போவதற்கு பாஸ்போர்ட் வாங்கி வைத்துக் கொண்டோம். சமையல் செய்யும் பாத்திரங்கள், சமையலுக் குரிய பண்டங்கள், பெட்ரோமாக்ஸ் விளக்கு, சில மருந்துகள் முதலிய சாதனங்களை எடுத்துக்கொண்டோம்.

சென்னை சென்ட்ரல் புகைவண்டி நிலையத்தில், சென்னையில் உள்ள நண்பர்கள் அன்னையினும் சால அன் புடையவர்களாய் பல மலர்மாலைகள் சூட்டியும் படங்கள் எடுத்தும், "அமர்நாத் ஆண்டவனுக்கு ஜே! அமர்நாத் ஆண்டவனுக்கு ஜே" என்று புகைவண்டி நிலையம் அதிரு மாறு முழக்கம் புரிந்தும், மங்கலமாகப் போய் வாருங்கள் என்று வாழ்த்தியும் வழியனுப்பினார்கள்.

பகல் 12 மணிக்கு கிரண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரஸ் வடக்கே நோக்கிப் புறப்பட்டது. வடக்கு நோக்கிச் செல்லும் பிர யாணம் சிறப்புடையது அல்லவா? பூஜை முதலிய வசதிக் காக நான் முதல் வகுப்பில் பிரயாணத்தை அமைத்துக் கொண்டேன். ஏனைய நண்பர்கள் 3வது வகுப்பிலும், ஒரு நண்பர் 2வது வகுப்பிலும் புறப்பட்டார்கள்.

அடியேன் எப்போதும் பிரயாணம் புரியும் கால மெல்லாம் அதிகமாக சடக்கரமந்திர ஜெபமும், திருப்புகழ், அநுபூதி பாராயணமும், முருக சிந்தனையுமாகவே இருப்பது வழக்கம். அந்த நேரம் அவமே கழியாது தவமேயாகிப் பயன் படுமாறு உள்ளம் உருகி இறைவனை நினைப்பது எளி யேனுடைய நியதி. அதன்படி ஆறுதலாக ஆண்டவனை வேண்டிய வண்ணம் சென்றேன்.

மாலையில் எனது அன்பரும் யாத்திரையை முன்னின்று நடத்துபவரும் ஆகிய A. K. பாண்டுரங்கம் என்பவர் சிற்றுண்டியும் சுவைநீரும் கொணர்ந்து தந்தனர். பொழுது மறைகின்ற போது மாலைக்கடன்களை முடித்துக் கொண் டேன். இரவு உணவு வழங்கினார்கள். ரயிலில் இரவு சுக மாகத் தூங்கினோம்.

11—8—56 சனிக்கிழமை

காலையிலே நீராடி ரயிலிலேயே நித்திய வழிபாட்டை நிம்மதியாகச் செய்தேன். அன்று பகலும் இரவும் வண்டி ஓடிய வண்ணமாகவே இருந்தது.

12—8—56 ஞாயிறு

அதிகாலை 5 மணிக்கு ஆக்ரா சென்றோம். ரயிலைவிட்டு இறங்கினோம். ஒரு கல் தொலைவில் ஒரு வாடகை இடத்தில் தங்கினோம். எல்லோரும் வண்டிகளையமைத்துக் கொண்டு நேரே யமுனா நதி சென்று நீராடினோம். அது ஏழு நதிகளில் ஒன்று. பகவான் கண்ணபிரான் திருவிளையாடல் புரிந்த புனித நதி. பாவங்களைப் போக்க வல்லது. அதில் முழுகி நதிக்கரையில் எனதுஆத்மார்த்த முருகனை வைத்துப் பூஜை செய்தேன். நேரே ஷாஜஹான் முதலிய அரசர்கள்

இருந்து அரசு புரிந்த அரிய அரண்மனை கோட்டை முதலியவற்றைப் பார்த்தோம். இவற்றையெல்லாம் அடியேன் முன்னமேயே பார்த்திருந்தாலும் மற்றவர்களுக்காக உடன் சென்று பார்க்கலானேன். மழையும் பொழியத் தொடங்கியது. அதில் சற்று நனைந்து, இருப்பிடம் போய் உணவு செய்துகொண்டு, புகைவண்டி நிலையம் போந்து மாலை 4-45 மணிக்கு ரயில் ஏறினோம். இரவு 7-45 மணியளவில் டெல்லி சேர்ந்தோம்.

டெல்லி நமது பாரத நாட்டின் தலைநகரம். பாண்டவர்கள் முதலிய பல புண்ணிய மூர்த்திகள் இருந்து அரசு புரிந்த பழைமையான பட்டணம். இரவு 10-30 மணிக்கு அங்கு வேறு வண்டி ஏறினோம்.

13-8-56 திங்கட்கிழமை. வழியில் ஒரு இடத்தில் நீராடி தண்ணீர் எடுத்துக் கொண்டேன். வண்டி ஓடிக்கொண்டிருக்கும் போதே எனது வழிபாட்டை முடித்துக் கொண்டேன். நெல்லை அன்பர் திரு. வீ. சங்கரன் பிள்ளை அவர்களும் என்னுடன் இருந்து சிவபூஜை செய்தார்.

அமிர்தசரஸ்

காலை 12 மணிக்கு **அமிர்தசரஸ்** என்ற இடத்தைச் சேர்ந்தோம். புகைவண்டி நிலையத்திற்கு எதிரில் உள்ள ஒரு தருமசாலையில் சாமான்களை வைத்துச் சமையல் செய்ய ஏற்பாடு செய்தோம். வண்டிகளை அமைத்துக் கொண்டு ஜாலியன்வாலா பாக், சீக்கியர்களுடைய தங்கக் கோயில், துர்க்கா மந்திர், ஸ்ரீ கிருஷ்ண மந்திர் ஆகியவைகளைப் பார்த்துவிட்டு, தருமசாலை சென்று உணவை முடித்துக் கொண்டு மாலை 5-45 மணிக்கு மீளவும் ரயில் ஏறினோம்.

பதான்கோட்

இரவு 9-45மணிக்குப் **பதான்கோட்** என்ற இடத்திற்குச் சென்றோம். இதுதான் ரயில் பிரயாணத்தின் கடைசியிடம். இதற்கு மேல் ரயில் கிடையாது.

அங்கு ரயிலை விட்டிறங்கினோம். நானும் பேரம்பூர் திரு. திருநாவுக்கரசு முதலியாரும் முதல் வகுப்புப்

பிரயாணிகள் தங்கும் அறையில் சென்று தங்கினோம். ஏற்கனவே அங்கு நால்வர் நான்கு கட்டில்களில் படுத்துக் கொண்டிருந்தார்கள். வேறு கட்டில் இல்லை. நாங்கள் இருவரும் ஒரு புறத்தில் கீழே படுக்கை விரித்து அமர்ந்தோம். 3 நாள்கள் ரெயிலில் பிரயாணம் புரிந்த அயர்ச்சி. தேத்தண்ணீர் பருகிவிட்டு, இரண்டொரு கடிதங்கள் எழுதத் தொடங்கினேன். அப்போது இரவு 10-30 மணியிருக்கும்.

அடியேன் விளக்கை எரியவிட்டுக் கடிதம் எழுதுவது, ஒரு மாதம் சுகாதாரத்திற்காக ஓய்வு எடுத்து காஷ்மீர் சென்று அங்கு மனைவியுடன் தங்கித் திரும்பிய ஒருபம்பாய்க்காரருக்குப் பிடிக்கவில்லை. அவர் ஏதோ தனது மொழியில் என்னை சற்று கோபமாகப் பேசினார். பிறருக்கு இடையூறாக நாம் இருக்கவேண்டாமே என்று கருதி விளக்கை அணைத்து விட்டு முருகா! என்று படுத்தேன்.

பஸ் பிரயாணம்

14—8—56 செவ்வாய்க்கிழமை. காலை 7-மணிக்குப் பஸ் என்று அன்பர்கள் கூறினார்கள். அதனால் நான் விடியற்காலை 3-மணிக்கே எழுந்து குழாயில் நீராடினேன். மின்சார விளக்கை எரியவிட்டால் அந்த பம்பாய்க்காரர் முனிவு கொள்வார் என்று கருதி, பூஜையில் உள்ள சிறு விளக்கை மட்டும் ஏற்றிக்கொண்டு, அவருடைய தூக்கத்திற்கு இடையூறு நேராவண்ணம் மெல்ல மணியடித்து சிறு குரலில் பாராயணம் புரிந்து வழிபாடு செய்தேன். 5-30 மணிக்கு வழிபாட்டின் முடிவில் மகா தீபாராதனை செய்தேன். பம்பாய்க்காரர் மெல்ல எழுந்து பார்த்தார். எனது ஆத்மார்த்த முருகனையும் அருகில் உள்ள வள்ளி தெய்வயானை அம்மைகளையும், விநாயகரையும் அந்த மூர்த்திகளுடைய கவின் மிகுந்த காட்சியையும் கண்டார். அவர் உள்ளத்தில் ஒரு அச்சம் எழுந்தது போலும். ஏன்? முன்னேரத்திலே என்னைச் சற்று முனிந்து கொண்டாரல்லவா? "இவர் ஒரு தக்கார் போலும் இவருடைய அருமையறியாது நாம் பேசினோமே" என்று வருந்தினார். ஒரு நறுமணங் கமழும் ஊதுவத்திக் கட்டைக் கொணர்ந்து என் அருகில்வைத்து வணங்கினார். அச்செயல் மன்னிக்கவேண்டும் என்னும் குறிப்பில் அமைந்திருந்தது.

பின்னர் பூஜையெல்லாம் முடிந்த பின், அவர் என்னுடன் இருக்கும் திருநாவுக்கரசு முதலியாரிடம் கேட்டு நாங்கள் அமர்நாத் போகும் பிரயாணத்தையறிந்து கொண்டார். அறிந்த பின், "நீங்கள் அமர்நாத் யாத்திரை புரிவது மிக்க கடினம். வழிநெடுக நதிகள் வெள்ளப் பெருக்கும் உடைப்புக்களும் இருக்கின்றன. நான் ஸ்ரீநகரிலிருந்து பஸ் மூலம் மிக்க இடர்ப்பட்டு வந்தேன். ஆகவே, நீங்கள் அமர்நாத் யாத்திரை எவ்வாறு செய்யப் போகின்றீர்கள்"? என்று ஆங்கிலத்தில் கூறினர். அதனைக் கேட்டு நாங்கள் தொடக்கத்திலேயே சிறிது கலக்கமுற்றோம். பின்னர் முருகன் கருணை துணை புரியும். இத்தனைத் தொலைவு வந்து விட்டோம். இனி அஞ்சுதல் கூடாது. புறப்படுவோம் என்று துணிந்தோம்.

சென்னையிலிருந்தே பதான்கோட்டுக்கும் ஸ்ரீ நகருக்கும் போய்வரும் கவர்ன்மெண்டு பஸ்ஸுக்குப் பணம் அனுப்பி முன்கூட்டி 16 பேருக்கு ஒழுங்கு செய்திருந்தோம்.

மழைபொழிந்த வண்ணமாகவே இருந்தது. மழையில் நனைந்த வண்ணமே சென்று பஸ்ஸில் ஏறினேம். பதான் கோட்டிலிருந்து, காஷ்மீரின் தலைநகராகிய ஸ்ரீ ந க ர் 267 கல் தொலைவு. ஏறக்குறைய 200 கல் மலையிலே பஸ் போகின்றது. பதினயிரம் அடி உயரம் மலையில் ஏறி பின் 5 ஆயிரம் அடி இறங்கி 70 கல் சமதரையில் சென்று ஸ்ரீநகரை அடைய வேண்டும்.

நாங்கள் ஏறிய பஸ் காலை 7-மணிக்குப் புறப்பட்டது 20 கல் சென்றவுடன் காஷமீர் எல்லை தொடங்குகின்றது. அங்கு **ரவி** என்ற ஆறு ஓடுகின்றது. அங்கு போலீஸில் எங்கள் பாஸ்போர்ட்டைப் பதிவு செய்துவிட்டு மறுபடியும் பஸ் ஏறிப் புறப்பட்டு 10 கல் சென்றோம். அப்போது காலை 9-மணி. அங்கே **துரோண நதி** பெரு வெள்ளமாக ஓடுகின்றது. பாலம் கிடையாது. இரவெல்லாம் மழை. அதனல் ஆறு நிறைய வெள்ளம். கனவேகம். ஆதலால் இக்கரையில் லாரிகளும், பஸ்களும் ஒரு நூறு வரிசையாகத் தியங்கி நின்றன. அதேபோல் அக்கரையிலும் ஒரு நூறு வண்டி

களுக்கு மேல் நின்று தவம் புரிந்தன. வெள்ளம் வடிந்த பின்தான் செல்லவேண்டும் என்றூர்கள். முரட்டு வெள்ளம். பெரிய பெரிய குண்டுக்கற்களை உருட்டிக்கொண்டு அசுர வேகமாக வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. பஸ்ஸில் இருந்தவர்கள் வண்டியைவிட்டு இறங்கி நதியிடம் ஓடுவதும் மீள்வதுமாக இருந்தார்கள். இராமருடைய சேனைகள் சேது பந்தனத்தின் பொருட்டுச் செல்வதுபோல் இருந்தது அந்தக் காட்சி.

அடியேன் "முருகா, முருகா" என்று ஜெபம் புரிந்து கொண்டு பிறவியலையாற்றைக் கடக்கமாட்டாத ஆன்மா தவிப்பது போல் துரோண நதியைக் கடக்கமாட்டாது மனம் வருந்தி வண்டியிலேயே இருந்தனன். உச்சி நேரத்தில் ஏதோ ஆகாரந் தந்தனர்.

மாலை 4-30 மணியாயிற்று. ஒரு போர் வீரன் தனது லாரியைத் தீரத்துடன் துணிந்து ஓட்டினான். அப்போது சிறிது வெள்ளமும் தணிந்திருந்தது. அவன் அக்கரைக்குப் போனதும் பலத்த கரகோஷம் உண்டாயிற்று. பின்னர் 50, 60 லாரிகள் சென்றன. பின்னர் எங்கள் பஸ் புறப்பட்டது. வெள்ளத்தில் கரடுமுரடான குண்டு கற்களில் இடர்ப்பட்டு இப்படியும் அப்படியும் ஆடிக்கொண்டு எங்கள் பஸ் போகும்போது பஸ்ஸில் உள்ள எல்லோரும் "அமர்நாதருக்கு ஜே" என்று ஆரவாரம் புரிந்தார்கள். "மைவரும் கண்டத்தர் மைந்தா" என்ற கந்தரலங்காரத்தைச் சிறியேன் சிந்திய கண்ணீருடன் கூறினேன். மெல்ல பஸ் அரும்பாடு பட்டு அக்கரை சென்றது. எங்களுக்கு மறு பிறப்பு எடுத்ததுபோல் ஆயிற்று.

அப்போது மணி 5. மேற்கொண்டு 20, 30 கல் சென்று சாம்பு என்ற சிறு ஊரையடைந்தோம். மணி 6. பஸ் அங்கே நின்றுவிட்டது. நாங்கள் எங்கே தங்குவது என்ற யோசனையில் ஆழ்ந்தனம் எங்களுடன் வந்த தில்லையாடி சங்கரானந்த அடிகளார் சிறிது தூரத்தில் ஒரு மிலிடரி ஆபீசர் இடத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்தார்.

அங்கு சென்று ஒருவாறு உறங்கினோம். இரவு 3-மணிக்கே எழுந்து இருட்டில் தடுமாறிக்கொண்டு அரை

கல் தொலை சென்று ஒரு குழாயில் நீராடி பூஜைக்குத் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து வழிபாடு செய்தேன். பொழுது புலர்ந்தது.

15—8—56 புதன்கிழமை காலை 7-மணிக்கு மீளவும் பஸ் புறப்பட்டது. இனி வழியில் இடர் இல்லை என்று எண்ணினோம். 15, 20 கல் சென்றவுடன் அங்கும் ஒரு பெரிய நதியில் வெள்ளம். அதற்கும் பாலமில்லை. அங்கும் முன்போல் இக்கரையிலும், அக்கரையிலும் வரிசையாக பஸ்களும், லாரிகளும் நின்று தவம் புரியத் தொடங்கின. வெள்ளம் வடிந்தால்தான் பஸ் போகும். என்ன செய் வோம்? மயங்கி நின்றோம்.

அன்று முற்பகல் முழுவதும் தடைபட்டு நின்றோம். அக்கரையிலும் இக்கரையிலும் உள்ள ஆள்கள் வெள்ளத் தின் அருகே நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந் தனர். வெள்ளம் வடிந்தது. தைரியத்துடன் பஸ் புறப்பட்டு பிரசவ வேதனைப்பட்டுக்கொண்டு அக்கரை சென்றது. பின்னர் பகல் 12-மணியளவில் ஜம்மு என்ற பெரிய நகரையடைந்தோம். அங்கு எங்களை இறக்கிவிட்டு பஸ் சென்றுவிட்டது. வழியில் பெரிய பெரிய சிதைவுகள் ஏற் பட்டிருப்பதனால் ஸ்ரீநகரிலிருந்து அரசாங்க அனுமதி வந்த பின்னர்தான் வேறு பஸ்ஸில் போகவேண்டும் என்ற செய்தியையறிந்தோம். பஸ் நிற்குமிடத்திற்கு அருகில் ஒரு இடத்தை வாடகை பிடித்துத் தங்கினோம்.

மாலை 5-மணிக்கு வழி ஒரு அளவில் செப்பனிடப் பட்டது. பஸ் புறப்படலாம் என்று அரசாங்க அனுமதி வந்தது. நாங்கள் மீளவும் எங்கள் சாமான்களை பஸ்ஸில் ஏற்றி ஏறினோம். இருட்டியது. வழியில் உதையபூர் என்ற ஊரை அடைந்தோம். அங்கு பஸ் நின்றது. அருகில் இருந்த தருமசாலையில் தங்கினோம்.

16—8—56 வியாழன். விடியற்காலை 3-மணிக்கு எழுந்து அங்கு நீராடி வழிபாடு செய்தோம்.

காலை 7-மணிக்குப் பஸ் புறப்பட்டது. பெரிய பெரிய மலைகளில் வளைந்து வளைந்து பஸ் ஏறிச் சென்றது. ஒரு



சென்னை சென்ட்ரல் நிலையத்தில் அன்பர்கள் வழியனுப்புதல்



பகல்காம் முகாம்

அரையடி விலகுமானல் அதல பாதாளத்தில் பஸ் விழ வேண்டியதுதான். அன்றியும் வழிநெடுக மழை மிகுதியால் வழிகள் சிதைந்தும், கல்லும் மணலும் மேலிருந்து சரிந்தும் வழிகள் சீர்கெட்டு இருந்தன. வழிநெடுக ஆட்கள் சிதைந்த வழிகளைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார்கள். பஸ் போகும் வழி ஒருபுறம் உயர்ந்த மலை. மறுபுறம் பெரிய பாதாளம் போன்ற பள்ளம். கீழே நதிகள் ஓடிய வண்ணம் இருந்தன. இதற்கிடையே பஸ் சென்றது. பஸ் ஓட்டும் டிரைவர் தைரியமாக ஓட்டிக்கொண்டிருந்தார். பல மலைகளில் ஏறியும் இறங்கியும், குகைகளில் சென்றும் பஸ் மிகவும் இடர்ப்பட்டுக்கொண்டு ஓடியது

அன்று பகல் முழுவதும் ஓடி மாலை 5-மணிக்குக் காஷ்மீரின் தலைநகரமாகிய ஸ்ரீநகரையடைந்தோம். 3 நாட்களாகத் தொடர்ந்து பஸ்ஸில் ஏற்றம் இறக்கமுள்ள மலை வழியில் பிரயாணம் புரிந்தது உடம்புக்கு மிக்க அயர்ச்சியைத் தந்தது. பஸ் நிலையத்திற்கு அருகில் ஒரு இடத்தில் வாடகை தந்து தங்கினேம்.

இரவு 7-மணிக்குமேல் ஸ்ரீநகர் கடை வீதிகளைச் சுற்றிப் பார்த்தோம். இனி பிரயாணத்திற்குரிய சாதனங்களைச் சிலர் வாங்கினர்கள். நானும் காலுக்கு ஒரு பூட்ஸ் வாங்கிக் கொண்டேன். சிலர் கனத்த தோல் கோட்டுகளை வாங்கிக் கொண்டார்கள். இரவு 10-மணிக்கு உணவு செய்து இளைப்பாறினேம். அன்றிரவு சுகமே கழிந்தது.

17—8—56 வெள்ளிக்கிழமை. அதிகாலை எழுந்து நீராடி நித்திய வழிபாட்டைச் செய்துகொண்டோம்.

பகல்காம் காலை 10-மணிக்குப் பஸ் புறப்பட்டது. ஸ்ரீநகரிலிருந்து பகல் காம் என்ற இடம் 67 கல். இது தான் பஸ் போகின்ற கடைசியிடம். இமயமலையடிவாரம்.

பஸ் ஸ்ரீநகரிலிருந்து 20 கல் சென்றது. இடையில் அவந்திபூர் என்ற பழையவூர் வந்தது. அங்கே அவந்தி வர்மன் புதுக்கிய திருமால் கோயில் ஒன்று இடிந்து கிடக்கின்றது. அந்தக் காட்சி பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அழகிய சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய அது பழுது பட்டிருந்ததைப் பார்த்து இரங்கினேம்.

அங்கிருந்து புறப்பட்டு 24 கல் சென்றோம். அங்கே **மார்த்தாண்டா** என்ற ஊர் வந்தது. அங்கே சூரியமூர்த்தியினுடைய சிறு கோயில் இருந்தது. அதன் அடியிலிருந்து இருபது மிஷின் வைத்து இறைத்தாற் போன்று நீர் ஊற்று தெளிவாகவும், குளிர்ச்சியாகவும் குபுகுபு என்று புறப்பட்டு எதிரில் உள்ள இரு குளங்களில் தவழ்ந்து கொண்டுஅதற்குப்பின் நதி வடிவில் ஓடிக்கொண்டிருந்தது. அந்த இரு குளங்கள் விமலகுண்டம், கமலகுண்டம் எனப்பெறும். அவற்றில் அழகிய மீன்கள் எண்ணில்லாதன தனவந்தர் வீட்டுக் குழந்தைகள் போல் பயமின்றி துள்ளிக்குதித்து விளையாடிக்கொண்டிருக்கின்றன. மிகவும் வனப்புள்ள அக் காட்சியைக் கண்டு களித்தோம். ஆதித்த மூர்த்தியை அஞ்சலி செய்தோம்.

மீளவும் பஸ் ஏறி பகல் 1மணிக்குப் **பகல்காம்** என்ற ஊரை யடைந்தோம். இதுதான் பஸ் போகும் கடைசியிடம் என்பதை முன்னரேயே எழுதியிருக்கின்றேன். அமர்நாத் யாத்ரீகர்கள் தமக்குரிய சாதனங்களை இங்கிருந்துதான் ஆயத்தம் புரிந்துகொண்டு புறப்படவேண்டும்.

நாங்கள் ஸ்ரீநகரிலிருந்து தயாரித்துக் கொண்டு சென்ற கட்டமுதை ஒரு புறம் இருந்து உண்டோம். அங்கு அழகிய நதி மிகவும் குளிர்ச்சியாக ஓடிக்கொண்டிருக்கின்றது. வரிசை வரிசையாகவும், ஒன்று போலவும், வானளாவியும் மரங்கள் நின்று அருமையான காட்சி தருகின்றன. இமயத்தின் காட்சி இமையாக் கண்ணால் காண வேண்டும். அத்துணை அழகாக உள்ளது. அதனைப் பார்த்துக்கொண்டே இருக்க வேணும் என்று தோன்றுகின்றது. தமிழ் நாட்டு சன்யாசிகள் சிலரை அங்கு சந்தித்தோம்.

மாலை என்னுடன் வந்த அன்பர்கள் தங்கட்கு வேண்டிய மழைக் கோட்டு, தொப்பி, கம்பளங்கள்,கம்பளத்தாலாய கையுறை, காலுறை பூட்சுகள், நிஜார் முதலியவைகளை வாடகைக்கு வாங்கிக்கொண்டார்கள். வழியில் தங்குவற்கு 3 கூடாரங்களையும், படுக்கை கூடாரம் முதலியவைகளைக் கொண்டு போக நான்கு குதிரைகளையும், நடக்க மாட்டாதவர்கட்காக ஆறு குதிரைகளையும் அரசினர் மூலமாக அமர்த்திக் கொண்டனர்.

பகல்காமிலிருந்து அமர்நாத் ஆண்டவர் இருக்கும் குகை 28 கல். 4 நாள் பிரயாணம்.

இதற்குக் குதிரை 1 க்கு	ரூ. 26-0-0
சாமான்கள் எடுக்கும் குதிரை 1 க்கு	ரூ. 25-0-0
சாமான் எடுக்கும் ஆள் 1 க்கு	ரூ. 15-0-0

டெண்ட் (கூடாரம்) 1-க்கு ரூ. 12—0—0 என்று அரசாங்கத்தார் நிர்ணயம் புரிந்துள்ளார்கள். உத்திரவாத முள்ள கூலிகள்.

நான் என் பூஜைப் பெட்டிக்கு ஒரு தனிக் கூலியை வைத்துக்கொண்டேன். மேலும் சமையலுக்குரியவைகளை யும் அங்கேயே வாங்கிக்கொண்டோம். அதற்கு மேல் உள்ள இடத்தில் ஒன்றும் அகப்படாது.

நான் மட்டும் கோட்டு தொப்பி முதலியவைகள் ஒன் றும் வாங்கிக்கொள்ளவில்லை. என்ன பிரமாதம். நம்மால் சமாளிக்க முடியாதா? என்று அலட்சியமாக இருந்தேன்.

அன்று மாலை கூடாரம் அடித்து அதற்குள் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தேன். **பகல்காம் கடல் மட்டத்திற்கு 7000-ம் அடி உயரம்.**

அப்போது ஒரு போர் வீரர் மெல்ல கூடாரத்திற்குள் நுழைந்து வந்து என்னைக் கும்பிட்டு அருகில் அமர்ந்தார்.

அவர் தான் சென்னை என்றும், வால்டாக்ஸ் ரோட்டில் இருப்பதாகவும், இமய மலைச் சாரலில் கடும்பனியுள்ள இடத்தில் பல ஆண்டுகளாக யுத்த வீரராக அமர்ந்திருப்ப தாகவும், தமிழ் நாட்டில் இருந்து வந்துள்ள என்னைப் பார்க்கவந்ததாகவும் அன்புடன் கூறினர்.

"தாங்கள் யார்? எந்த ஊர்" என்று வினவினர்.

"நான் சென்னை; 'கிருபானந்தவாரி' என்பார்கள்" என்றேன்.

அவர், "நான் தங்கள் பெயரை வெகு நாட்களாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். பார்த்ததில்லை. இன்று நல்ல நாள். உங்களைக் காணக் கொடுத்துவைத்தேன். நான்

நேற்றே போவதாக இருந்தேன். உங்களைச் சந்திக்கும் பொருட்டே நேற்று போகத் தடை நேர்ந்தது போலும்; மெத்த மகிழ்ச்சி; நானும் அமர்நாத் போகின்றேன். தாங்கள் தமிழ் நாட்டில் பல காலமாகப் பல திருத்தொண்டுகள் புரிந்திருக்கின்றீர். அமர்நாத் யாத்திரை மெத்தக் கடினமானது. நீங்கள் கடுங்குளிரைத் தடுக்க என்ன என்ன சாதனங்கள் வைத்திருக்கிறீர்கள்'' என்று என்னை வினவினார்.

''அடியேன் ஒன்றும் விசேடமாகக்கொண்டு வரவில்லை. என் நண்பர் சென்னை திரு. நீலகண்ட ஐயர் ஒரு கம்பளம் கொடுத்திருக்கின்றார். ஒரு கம்பளச் சட்டையும், ஒரு உல்லன் போர்வையும் வைத்திருக்கின்றேன்'' என்றேன்.

அவர், ''ஐயா! வணக்கம் இந்த சாமான்களுடன் நீங்கள் சென்றால் திரும்பி வரமாட்டீர்கள். உங்களுக்கு அனுபவம் காணாது. நான் இந்தப் பகுதிகளில் சஞ்சரிப்பவன். அதனால் நான் தரும் இவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். போய் வந்த பின் திருப்பித் தந்துவிடுங்கள்'' என்று கூறி ஒரு பெரிய கனமான கம்பளம், மழைக் கோட்டு, கம்பளிக் குல்லாய், கையுறை, காலுறை, கம்பளிச் சட்டை முதலியவற்றை அன்போடு தந்தார். எனக்கு வியப்பாக இருந்தது நாம் ஒதுங்கிக் கூடாரத்துள் ஒடுக்கமாக இருக்கிறோம். இதற்குள் நுழைந்து வந்து இவராகவே நம்மை விசாரித்து இத்தனையும் தந்து உதவுகின்றனரே? இதுவும் இறைவன் கருணை என்று எண்ணினேன்.

''ஐயா, தங்கள் திருநாமம் யாது?'' என்றேன்

''சுப்ரமண்யம்'' என்றார் அவர்.

எனக்குக் கண்ணீர் பெருகியது. நாம் வழிபடுகின்ற முருகன் இனி எதிரிலேயுள்ள யாத்திரையில் இடர்ப்படாதிருக்க அவர் பேருள்ள ஒருவரை யதிஷ்டித்துத் தருகின்றார் என்று எண்ணினேன்.

''ஐயா! மதுரையில் திருஞான சம்பந்தர் திருமடாலயம் திருப்பெருந்திரு திருவருள் தவயோக சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அடிக்கடி கூறுவார்கள்:

"யார் எந்த மூர்த்தியை வழிபடுகின்றாரோ? அவருக்கு அந்த மூர்த்தியின் பேர் தாங்கிய ஒருவர் மூலம் உபகாரங்கள் கிடைக்கும்" என்று பன்முறை கூறியுள்ளார். தாங்கள் சுப்ரமண்யம் என்ற பேருடையவர். சிறியேன் பத்தியின்றிச் செய்கின்ற வழிபாட்டுக்கே எம்பெருமான் இந்த மலையடிவாரத்தில் தமிழ் வழங்காதநிலத்தில் இப்படி உங்கள் மூலம் அருள்பாலிக்கின்றார். அவருடைய கருணைதான் என்னே?" என்று இளம்பூரணன் திருவருளை வியந்து உரைத்தேன்.

அவர் அந்த சாதனங்களைத் தரவில்லையானால் யான் உள்ளபடியே திரும்பி வந்திருக்கமாட்டேன் என்பதைப் பின்னர் உணர்ந்தேன். அவர் தந்தவை பெரும் உபகாரமாக இருந்தன.

மாலை அநுஷ்டானம் புரிந்து கொண்டேன். சமையல் செய்த பின் எமக்கு உணவு வழங்கினார்கள். உண்டு கூடாரத்துக்குள் ஒடுங்கிப் படுத்தோம்.

இரும்புக்கூர் வைத்த தடிகள் ஆளுக்கு ஒன்று வாங்கி வைத்துக்கொண்டோம். அது சேற்றிலும், ஐஸிலும் நடக்கும்போது மிகுந்த பயனுடையது. ஊன்றி நடக்க உபகாரமான அத்தடி எங்களை மிகவும் காப்பாற்றியது ஒரு தடி மூன்றணாதான்.

வழிக்கு ஆளுக்கு ஒரு பிளாஸ்கையும் வைத்துக கொண்டோம். டார்ச்லைட், நீலகிரித் தைலம், கஸ்தூரி மாத்திரைகள் முதலிய சில மருந்துகளையும் தயாரித்துக் கொண்டோம்.

18—8—56 சனிக்கிழமை. இன்று துவாதசி. துவாதசியில் யாத்திரையைத் தொடங்கி, பவுர்ணமியில் முடிப்பது வழக்கம். காஷ்மீர் மன்னருடைய ஆட்கள் ஒரு சூலத்தைப் பல்லக்கில் வைத்துக் கொண்டு சன்யாசிகளும், குருமார்களும் புடைசூழ அதிகாலை யாத்திரையைத் தொடங்கி வைத்தார்கள். போலீஸ் உதவியும், வைத்திய உதவிகளும் அரசாங்கத்தாரால் செய்யப் பெறுகின்றன.

சந்தனவாரி

அங்கிருந்து புறப்பட்டால் 8 கல் தொலைவு சென்று சந்தனவாரி என்ற இடத்தில் சென்று முதல் நாள் தங்குதல் வேண்டும்.

நாங்கள் 17 பேர். 6 பேருக்குக் குதிரை வைத்து விட்டோம் 11 பேர் நடப்பது என்று தீர்மானித்தோம். நடப்பவர்களில் அடியேனும் ஒருவன்.

காலை 6-மணிக்குப் புறப்படுவதாகவும், சந்தனவாரி சென்று குளித்துப் பூஜை செய்வதாகவும் திட்டம் போட்டுக் கொண்டோம்.

காலையில் எழுந்தோம். கூடாரங்களை அவிழ்த்துக் கட்டி படுக்கைகளைக் கட்டி குதிரைகள்மீது ஏற்றிவிட்டோம். அவ்வளவுதான்! வறியவனுக்கு வழங்கும் வள்ளல்போல் வானம் பெருமழை பெய்யத் தொடங்கியது. அங்கு எங்கு ஒதுங்குவது? எல்லோரும் மழைக் கோட்டைப் போட்டுக் கொண்டு, பொழிகின்ற மழைக்கு நடுவே நின்றோம்.

9-மணிக்கு மழைவிட்டது. என்னைத் தவிர மற்ற எல்லோரும் கையுறை, காலுறை, நிஜார், பூட்ஸ், கம்பளிச் சட்டை, கோட்டு, மழைக் கோட்டு, தொப்பி முதலிய யாவும் அணிந்து, காமக்ரோதம் முதலிய தீவினைகளைக் கொல்லும் பொருட்டுப் படையெடுக்கும் போர் வீரர்களைப் போன்று நின்றார்கள். அறுவர்களைக் குதிரைமீது ஏற்றி விட்டோம். 11 பேர் கால் நடையில் புறப்பட்டோம்.

அடியேன் வேட்டியை இறுக்கிக்கொண்டு, கமண்டலத்தைத் தோளில் மாட்டிக்கொண்டு ஒரு கம்பளிச் சட்டையைப் போட்டுக்கொண்டு ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டு மழைக் கோட்டுடன் ஒரு தடியை ஏந்தி "முருகா, முருகா" என்று கூறிக்கொண்டு வடக்கே நோக்கிப் புறப்பட்டேன்.

கணைக்கால் அளவு சேறு. வழிநெடுக வழுக்கல். பூட்ஸ் அரை மைலில் கெட்டுவிட்டது. அதனைக் கழற்றி எறிந்துவிட்டேன். வெறுங் காலில் நடக்கலானேன். நான் பூஜை செய்யாமல் தண்ணீர்கூடப் பருகுவதில்லை. அதனால் பட்டினியாகவே நடந்தேன். ஒரு காலை வைத்து

மறு காலைச் சேற்றிலிருந்து எடுப்பது பெரும்பாடாக இருந்தது. ஏற்றமான வழி. வளைந்து வளைந்து போகும் வழுக்கற் பாதை. வழிநெடுகக் குதிரைகள் வேறு இடித்துக் கொண்டு போகின்றன. ஒரு புறம் பள்ளம். மறுபுறம் மலை. இதற்கிடையில் ஒதுங்கி ஒதுங்கி நடக்கலானேன். என் அன்பர்கள் பின்னே சிறிது தொலைவில் வரலானார்கள். அடியேன் ஏகாந்தமாக திருப்புகழை உள்ளம் உருகி, காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கிப் பாராயணம் புரிந்து கொண்டும், ஆறெழுத்தை உச்சரித்துக்கொண்டும் நடந்தேன். அயர்ச்சியதிகமானபோது சற்று நிற்பதும், மீளவும் நடப்பதுமாகச் சென்றேன். இடையிடையே மழையும் பொழிந்தது. காலை 9-மணிக்குப் புறப்பட்ட யான் மாலை 5-30 மணிக்குச் சந்தனவாரி சேர்ந்தேன். 8 கல் நடப்பதற்கு அத்துணை நேரம் ஆயிற்று. அயர்ச்சியினால் சோர்ந்து போனேன். முன்னே சென்றவர்கள் அங்கு எங்கே கூடாரம் அடித்துத் தங்கினார்களோ? தெரியவில்லை. எனக்கு அவர்களைத் தேடிப் பார்க்க ஆற்றல் இல்லை. சொல்லி முடியாத களைப்பு. சுருக்கமாகச் சொன்னால் என் வாழ்நாளில் அத்துணைத் துன்பம் அடைந்ததில்லை.

ஒரு தேத் தண்ணீர் கடை ஓரம், முருகா என்று கூறி அமர்ந்தேன் கை, கால், உடம்பு எல்லாம் வலிக்கத் தொடங்கின. அரைமணி நேரம் களைப்பு ஆறினேன்.

முன்னே குதிரைமீது சென்ற அறுவரில் ஒருவர் துறையூர் திரு. மாரிமுத்து முதலியார் என்பவர், நாங்கள் இன்னும் வரவில்லையே என்று மெல்லத் தேடிக்கொண்டு வந்தார். அடியேனைப் பார்த்து அழுதுவிட்டார். "சுவாமி! இப்படிச் சோர்ந்திருக்கின்றீரே, வாருங்கள்" என்று என்னை அழைத்துக் கொண்டு போனார்.

சந்தனவாரி 9 ஆயிரம் அடி உயரம், குளிர்; நடுக்கம்; வாடை சேற்றில் கூடாரம் அடித்துள்ளார்கள். எங்கள் படுக்கை மழையில் முழுவதும் நனைந்து விட்டது. எப்படித் தங்குவது?

சென்னை கோமளீஸ்வரன்பேட்டை அன்பர் திரு. ராஜு செட்டியார் என்பவர் என்னுடைய களைப்பைக் கண்டு மிக

வும் இரக்கமுற்ருர். ஒரு டீக்கடையில் ஒரு ரூபாய் கொடுத்து ஒரு குண்டானில் வெந்நீர் வாங்கி வந்து "சுவாமி! முதலில் குளித்து பூஜை செய்யுங்கள்" என்று அன்போடு கூறினர்.

ஒரு சிறு தம்ளரில் வெந்நீரை முகந்து மெல்ல உடம்பை நனைத்துக் கொண்டேன். அப்போது மாலை 6-30 மணி. சிங்கப்பூரில் எனது நண்பர் திரு. P. கோவிந்த சாமி பிள்ளையவர்கள் தந்த புதிய போர்வையைப் போர்த்துக் கொண்டேன். பட்டையுடுத்துக் கொண்டேன். கூடாரத்துக்குள் 2 கம்பளங்களை மடித்துப் போட்டு அதன்மீது மான் தோலையிட்டு வடக்கு நோக்கி அமர்ந்து வழிபாடு தொடங்கினேன். உள்ளம் குழைந்து உருகி வள்ளி மணவாளனைப் பூசித்தேன். இரவு 8-15 மணிக்குப் பூஜை முடிந்தது. சிறிது அன்னம் தந்தார்கள். அளவுக்கு மேற்பட்ட அயர்ச்சியினுல் அன்னம் உள்ளுக்குள் செல்ல மறுத்து விட்டது. ஒரு விளாங்காய் அளவு உண்டேன். நடுக்கத்தால் ஒடுங்கி, சேற்றுத் தரையில், ஒரு கம்பளியை மடித்துப் போட்டு, போர்வீரர் தந்த கனத்த கம்பளியைப் போர்த்து முடங்கிக் காய்ந்தேன்.

இரவு குளிர் மிகுதியால் உறக்கம் வரவில்லை. அதனுல் திருவாறெழுத்தை நினைக்க அனுகூலம் ஆயிற்று. கடுங் குளிரில் ஒடுங்கி ஒருவாறு இரவைக் கழிக்கலானேம்.

குளிரையும் வழியின் இடரையும் தாங்க மாட்டாத என் அன்பர் திருநெல்வேலி திரு. வீ. சங்கரன் பிள்ளைய'வர்கள் மெல்ல என்னைப் பார்த்து, "சுவாமி! வணக்கம். என்னுல் இந்தக் குளிரைத் தாங்க முடியவில்லை. என்னுல் மற்றவர்கள் சிரமப்படக் கூடாது. கருணை கூர்ந்து என்னை இங்கேயே விட்டுவிடுங்கள். நான் இங்கே தங்கியிருக்கின்றேன். இனி இதைவிடக் கடினமான பிரயாணம் எதிரில் இருப்பதாக அறிகின்றேன். என்னுல் இத் துன்பத்தைத் தாங்க முடியவில்லை. நீங்கள் சென்று வாருங்கள்." என்ருர்.

சங்கரன் பிள்ளை

நான் நகைத்து, 'தாங்கள் தளர்ச்சியடைய வேண்டாம். ஞான பண்டிதன் கருணை துணை புரியும். நாங்கள் உங்களை

நடுவிலே இங்கே விட்டுவிட்டுப் போக மாட்டோம். மெல்ல வாருங்கள். அமர்நாத் ஆண்டவனைக் கண்டு திரும்புவோம்.' என்று அவருக்குத் தைரியம் கூறி ஒருவாறு அவர் மனத்தைத் திடப்படுத்தினேன்.

தடை

19—8—56 ஞாயிறு. பொழுது புலர்ந்தது. மெல்ல எழுந்தோம். கூடாரத்தைவிட்டு வெளிப்பட்டோம். ஐஸ் போன்ற தரையிலே நிற்க முடியவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கல்லின் மீது ஏறி நின்று தந்த சுத்தி செய்தோம். மெல்ல ஸ்டவ்வைப் பற்ற வைத்துச் சிறிது வெந்நீர் தயாரித்து எனக்குத் தந்தார்கள். குறைந்த அளவுள்ள அந்நீரில் ஒருவாறு உடம்பை நனைத்துக் கொண்டேன். கூடாரத்துக்குள் இருந்து காலை 9-மணிக்குள் வழிபாட்டை முடித்துக்கொண்டேன்.

அதற்குள் சுப்ரமண்ய ஐயர் அடுப்பு ஏற்றி சமையலை முடித்தனர். காலை 10 மணிக்கு எல்லோரும் இருந்து உணவு செய்தோம். பாதி சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே குழாய் மூலம் ஒருவர் அரசாங்க அறிவிப்பு ஒன்றை ஹிந்தி மொழியில் அறிவித்தனர். 'அது என்ன?' என்று கேட்டேன். "வழியில் கடும் மழையும் பனியும் பொழிவதால் உடைப்பும் வழுக்கலும் அதிகம் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் யாத்ரீகர்கள் போகமுடியாது. எனவே எல்லோரும் திரும்பிப் போகுமாறு அரசாங்கத்தார் உத்தரவு" என்று அவன் அறிவிக்கின்றான்." என வுரைத்தனர்.

இதனைக் கேட்ட எனக்குத் தலைசுற்றியது. "எம்பெருமானே! இதுவரை அடியேன் தொடங்கிய கருமம் ஒன்றும் தடைபட்டதில்லையே? உன்னைக் காண வேண்டும் என்ற ஏக்கத்துடன் ஏறக்குறைய 2500 கல் வந்திருக்கின்றோமே. இத்துணை தூரம்வந்த நாங்கள் உன்னைத்தரிசிக்காமல்திரும்புவது முறையா? எங்களைப்பலர் மலர்மாலைசூட்டிப் பாராட்டிப் போற்றி வாழ்த்தி வழியனுப்பினார்களே. அவர்கட்கு நான் என்ன கூறுவேன; இந்த யாத்திரையைப் பற்றி ஒரு நூல் எழுதி வருகின்றேனே? பூர்த்தியாகாமல் இதனை எப்படி எழுதி முடிப்பேன்? கருணாகரா! உன்னுடைய திருவருள்

எப்படியோ அப்படியாகட்டும். விருப்பு வெறுப்பற்ற எனக்கு ஆனாலும் திருவருள்; போனாலும் திருவருள். பயன் கருதி ஒன்றையும் புரிவதில்லை'' என்று இளம் பூரணனை வழுத்தினேன்.

பின்னர் எனது அன்பரும் அந்த யாத்திரையை நடத்துபவருமாகிய பாண்டுரங்கத்தையும் பீதாம்பரத்தையும் பார்த்து, ''நீங்கள் சென்று அரசாங்க அதிகாரியைக் கண்டு முழுவிவரங்களையும் அறிந்துவாருங்கள்'' என்றேன்

அவர்கள் சென்று வந்து அறிவித்தது; ''டெல்லிக்குப் போன் மூலம் வானிலை ஆராய்ச்சியாளரைக் கேட்டிருக்கின்றோம், அவர்கள் வானிலையை ஆய்ந்து யாத்ரீகர்களை அனுப்பலாம் என்று மறுமொழி கூறினால் உங்களை அனுப்புவோம். மறுமொழி இன்று மாலை அல்லது நாளை காலையில் கிடைக்கும்'' என்பது.

விடை

இதற்குள் சிலர் வந்த வழியே திரும்பிவிட்டார்கள். நாங்கள் திருவருளை நாடிக் கூடாரத்துக்குள் கிடந்தோம். பகல் 2 மணிக்கு மீளவும் அரசாங்கச் சேவகர் குழாய் வைத்து ''யாத்ரீகர்கள் யாத்திரை தொடங்கலாம்; வானிலை சற்று தேவலை. ஆகவே எல்லோரும் புறப்படுங்கள்.'' என்று அறிவித்தனர். இதனைக் கேட்ட எல்லோரும், அவரவர்கள் கூடாரங்களை அவிழ்த்துக் கொண்டு தலைதீபாவளிக்கு மாமனார் மாளிகை நோக்கிப் போகும் புதிய மருமகனைப் போலே புறப்பட்டார்கள். சற்றேறக்குறைய மூவாயிரம் பேர்கள் இருக்கும். ஒவ்வொருவருக்கும் குதிரைகள், மூட்டை தூக்கும் குதிரைகள்; கூலிகள். இப்படிஒரே சமயத்தில் எல்லோருமாகத் திரண்டு புறப்பட்டார்கள்.

நடந்து செல்வது கடினம் என்று கருதி எனது நண்பர்கள் 11 குதிரைகளை ஏற்பாடு செய்தார்கள். அங்கிருந்தும் குதிரை 1 க்கு 26 ரூபாய்தான். எனக்கும் ஒரு குதிரை வந்து நின்றது.

எனக்கு இந்த மாதம் 50 ஆண்டு நிறைவேறியது. இதுவரை குதிரைமீது ஏறியதில்லை. புதியதாக ஏறுவ

தென்றல் சிறிது அச்சமாக இருந்தது. பாண்டுரங்கத்தை நோக்கி "தம்பீ! எனக்குக் குதிரையில் வருவது சிரமமாக இருக்கின்றது. மெல்ல நடந்து வருகின்றேன். எனக்குக் குதிரை வேண்டாம்." என்று கூறினேன். அவர் "தாங்கள் குதிரை மீதுதான் வரவேணும். நடக்க இயலாது. நாங்கள் இளைஞர்கள். எங்களாலேயே நடக்க முடியவில்லையே? தாங்கள் நடப்பதா? நன்றாக இருக்கின்றது. சும்மா குதிரை மீது வாருங்கள்" என்று வற்புறுத்திக் கூறினர். குதிரைக் காரனைப்பார்த்து"அடே! இவர் எங்கள் குருஜீ; சமதரையில் சற்றுக் குதிரையை நடத்து. இவருக்கு பயம் தீரட்டும்" என்று ஹிந்தியில் கூறினர். குதிரைக்காரர்கள் யாவரும் முஸ்லீம்கள். அதுபடியே அந்தக் குதிரைக்காரன் சமதரை யில் சற்று இப்படியும் அப்படியுமாக நடத்தினன். குதிரை மீது ஏறியிருந்த எனக்குச் சற்றுப் பயம் தீர்ந்தது. "சரி. மெல்லப்போ" என்றேன். அந்நேரம் மணி 3 இருக்கும். எல்லோருமாகக் குதிரைமீது புறப்பட்டோம் குறுகலான வழி. சேர்ந்தாப் போல் புறப்பட்ட குதிரைகள் வரிசையாக வழியில் தேங்கி நின்றன. அதனால் எங்கள் குதிரைகள் போக முடியாமல் தவித்தன. எங்கள் குதிரைக் காரர்கள் வழியல்லாத வழியில் மலைச்சரிவில் கல்லும் கரடுமான பகுதியில் குதிரைகளை ஓட்டலானார்கள். குதிரை ஏறிப் பழக்க மில்லாத எனக்கு எப்படி இருக்கும்? அ, ஆ சொல் லித்தரும்போதே கரடுமுரடான தொல்காப்பியச் சூத்திரப் பாடம் சொல்லத் தொடங்கியது போல் இருந்தது. நெஞ்சு பட பட என்று அடித்துக்கொண்டது. எந்த நிமிஷத்தில் கீழே விழப்போகின்றேமோ? என்ற அச்சம். என்ன செய்வது? உயிருக்குத் துணிந்து மனதைத் திடப்படுத்திக் கொண்டு சென்றேன். 1½ மைல் அப்படிச் சென்றனன். அதற்கு மேல் ஒரே நெட்டாக மலைமீது ஏறுகின்ற கட்டம் வந்து விட்டது. மழையும் பொழியத் தொடங்கிவிட்டது. ஒரே சேறு. குதிரைகள் நடக்கின்றபோது வழுக்கி வழுக்கி இடர்ப்பட்டன. அரும்பாடு பட்டு அந்த ஏற்றத்தில் குதிரைகள் சென்றன. அப்படி 2 மைல் ஏறினேம்.

அங்கே உயர்ந்த மலை **பிக்ஷூகாட்** என்ற பகுதியை யடைந்தோம். சிறிது நேரம் இளைப்பாறினேம். பிறகு

5 மைல் சற்று ஏறுவதும் சற்று இறங்குவதுமாக இருந்தது வழி. மனித வாழ்வும் அப்படித்தானே. வாழ்வு உயர்வதும் தாழ்வதுமாகத்தானே இருக்கின்றது. இராமர் சீதையைத் தேடிக்கொண்டு போனார். இடையே இராவணன் வடிவாளால் வெட்டுண்டு வீழ்ந்துக் கிடந்த சடாயுவைக் கண்டு புலம்பியழுதார். மனைவியைப் பிரிந்த கவலை ஒரு புறம். பெரிய பிதாவாகிய சடாயுவின் பிரிவுத் துன்பம் மறுபுறம்.

பிஸ்ஷுகாட்

அப்போது சடாயு இராமரை நோக்கி, "மகனே! வருந்தற்க. இன்பதுன்பம் மாறி மாறி வரும் இயல்புடையன. சூரியனையும் அரவம் மறைக்கின்றது. திங்களும் தேய்ந்து வளர்கின்றது. ஆகவே வாழ்வில் தாழ்வும் உயர்வும் மாறி மாறி வரும்; அவற்றைக் கண்டு மதியுடையோர் கலங்கக் கூடாது" என்றார்.

பொங்கு வெங் கோளரா விசும்பு பூத்தன
வெங்கதிர்ச் செல்வனை விழுங்கி நீங்குமால்
அங்கண்மா ஞாலத்தை விளக்கும் ஆய்கதிர்த்
திங்களும் ஒரு முறை வளரும் தேயுமால்.

அதுபோல் எங்கள் வழியும் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தது.

அன்றியும் மழையில் நனைவதும் உலர்வதுமாகவே இருந்தோம். அது எப்படி இருந்த தென்றால், கணவனைப் பிரிந்து அசோக வனத்தில் அன்னை சீதாதேவி இருந்த போது, அந்தத் தாய் கண்களில் இருந்து பெருகிய நீரால் உடுத்த உடை நனையும். மீளவும் துன்பத்தினால் உண்டாய வெப்பத்தினால் உலரும். இப்படிக் கண்ணீரால் நனைவதும் உலர்வதுமாகவே அம்மையின் சேலை ஒரு நிலையுறாது இருந்தது.

துப்பினாற் செய்த கைகொடு கால் பெற்ற துளிமஞ்
சொப்பினான்றனை நினைதொறு நெடுங் கண்களுகுத்த
அப்பினால் நனைந் தருந்துயர் உயிர்ப்புடை யாக்கை
வெப்பினாற் புலர்ந்தொரு நிலையுறாத மென்துகிலாள்.

என்று கம்ப நாடர் அழகாகக் கூறுகின்றார்.



பிக்ஷு காட்டில் ஆசிரியர்



சேஷ்நாக்

இதுபோல் எங்கள் பிரயாணத்திலும், மழையினுல் நனைவதும், மீளவும் சிறிது வெய்யில் காய, மலையேறும் போது உண்டாகும் சூட்டினுல் உலர்வதுமாக இருந்தோம்.

நடுவில் எத்தனையோ ஆறுகளைக் கடந்தோம். அவைகள் என் கண்ணுக்குக் காமம், குரோதம்,லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பவைகளாகத் தோன்றின. காமக் குரோதங்களாகிய நதிகளைக் கடந்தால்தானே அமர்நாத் ஆண்டவனைத் தரிசிக்க முடியும்.

இவ்வாறு பகல் 3-மணிக்குச் சந்தனவாரி என்ற இடத்தில் புறப்பட்ட நாங்கள் மாலை 7-30 மணிக்கு **சேஷ்நாக்** என்ற தங்குமிடத்தை அடைந்தோம். **சந்தனவாரிக்கும் சேஷ்நாகுக்கும் 8-மைல். சேஷ்நாக் 13500 அடி உயரம்.**

குளிரின் இருப்பிடம். அங்கு நாங்கள் சென்ற உடன் கை, கால், தலை, பல் எல்லாம் விடவிட என்று நடுங்கத் தொடங்கிவிட்டன. மழை நிரம்பப் பொழிந்து கணைக்கால் அளவு சேறு. அங்கே சேற்றில் ஒருபுறம் கூடாரம் அடித்துக்கொண்டோம். கடும்பனி; கொடுங் குளிர்.

சேஷ்நாக்

பொறுக்க முடியவில்லை. கீழே சேற்றிலே கம்பளங்களை விரித்து பெருந்துன்பத்துடன் ஒடுங்கி அமர்ந்தோம். பூரி வாங்கிக் கொணர்ந்து தந்தார்கள். ஒரு பூரியை உண்டு வெந்நீர் பருகினேன். அதற்குமேல் உணவு உள்ளே செல்ல மறுத்து விட்டது. இரவு முழுவதும் உறக்கம் வரமாட்டேன் என்று பிடிவாதம் புரிந்தது.

உயிரைமட்டுந்தான் எம தூதன் கொண்டு போய் நரகில் இடுவான் என்று கேள்வி. எங்களை உடம்போடு தூக்கிக் குளிர் நரகில் போட்டுவிட்டது போல் இருந்தது. இதற்கிடையே ஒரு ஆறுதல். அறுபது, அறுபத்தைந்து வயதான கிழவர்களும் கிழவிகளும் அந்த யாத்திரையில் வந்து இடர்ப்படுவதைக் கண்டு அவர்களைவிட நாம் தேவலை என்று ஆறுதலையடைந்தேன்.

அப்போது நான் எண்ணினேன். அன்பர்கட்கும் கூறினேன்: நாம் இரு இரவு இந்த மலையில் கடும்பனி, கொடுங்குளிரில் இத்தனைக் கம்பளிச் சட்டை, குல்லாய்,

கையுறை, கால் உறை, போர்வைகளுடன் இருந்து இந்த வேதனையடைகின்றோமே? ஸ்ரீராமரும் சீதையும், பாண்டவர்களும் அரண்மனையில் பிறந்து வாழ்ந்து சுகத்தின் சிகரத்தில் இருந்தவர்கள். அவர்கள் 14 ஆண்டுகள் 12 ஆண்டுகள் வனத்தில் போர்வைகளும், கம்பளங்களும் இன்றி எப்படித்தான் காலங்கழித்தார்களோ? என்ன துன்பம் அடைந்தார்களோ?'' என்று கூறி வருந்தினேன். அன்றிரவு நாங்கள் அடைந்த துன்பத்திற்கு எல்லையில்லை. நீலகிரித் தைலம் முதலியவற்றை கை கால்களுக்குத் தேய்த்துக்கொண்டோம். சீதளம் வராமலிருக்கும் பொருட்டு கஸ்தூரி மாத்திரையையும் சாப்பிட்டோம். எங்களை வாட்டியெடுத்த இரவு ஒரு யுகம்போல் தோன்றிக் கழிந்தது.

20—8—56 திங்கட்கிழமை காலை சிறிது வெய்யில் காய்ந்தது. நாங்கள் மெல்லக் கூடாரத்தைவிட்டு வெளிப்பட்டு ஸ்டவ்வைப் பற்றவைத்துப் பார்த்தோம். வாழைத் தண்டில் தீப்பிடிப்பதுபோல் அவ்வளவு வேகமாக அது பற்றியது. சிறிது வெந்நீரைத் தயாரித்துப் பல் தேய்த்துக் கொண்டோம்.

சேஷ்நாக்கில் பள்ளத்தாக்கில் பெரிய ஏரி, பனி மலைகள். மிகவும் ரமணீயமான காட்சி. இரவில் சந்திர ஒளி வெள்ளி போல் இருக்கும் பனி மலையில் படுகின்றபோது பார்க்க மிக்க அழகாக இருக்கின்றது.

இன்று காலையிலேயே புறப்படுவது என்று தீர்மானித்தோம். பஞ்சதரணி சென்று பூஜை செய்வது என்று எண்ணினோம். பஞ்சதரணி அங்கிருந்து 8 மைல். காலை 7-மணிக்கே கூடாரங்களையும் மற்ற சாமான்களையும் குதிரைகள்மீதும், ஆள்மீதும் ஏற்றிவிட்டு நாங்கள் குதிரைகள் மீது ஏறிப் புறப்பட்டோம்.

இன்றும் பல பகுதி செங்குத்தான ஏற்றங்களில் ஏறினோம். 14500 அடி உயரமுள்ள **வாவஜன்** என்ற இடத்தையடைந்தோம். அங்கே நாங்கள் எல்லோரும் குதிரைகளை விட்டு இறங்கி மிக இறக்கமான பகுதி ஆதலால் நடந்து சென்றோம். நான் மட்டும் நான்கு மைல் நடந்தே சென்றேன். மற்றவர்கள் குதிரை மீது வந்தார்கள்.



பஞ்சதரணி (மஹாகணபாஸ்)



அமர்நாத் குகை

பஞ்சதரணி

பகல் 2-மணிக்குப் பஞ்சதரணி என்ற இடத்தை யடைந்தோம். இங்கு ஐந்து நதிகள் ஒன்றுகூடி மிகக் குளிர்ச்சியுள்ள ஒரு பெரிய நதியாக ஓடுகின்றது. மஹாகணபாஸ் என்ற இடமும், அருகில் சிவபெருமான், உமாதேவி, விநாயகர் என்ற மூவரும் அமர்ந்திருப்பது போன்று மூன்று மலைகளும் காணப்படுகின்றன. பல பகுதிகளில் ஐஸ் உறைந்து வெள்ளிப் பூச்சு பூசியதுபோல் காட்சி தருகின்றது. பூஜைப்பெட்டி மாலை 3-மணிக்கு வந்து சேர்ந்தது. ஐஸ் உருகி நதியாக வருகின்றது. அதில் குளிப்பதற்குப் பலர் யோசித்தார்கள். சிலர்தான் குளித்தார்கள். நான் மரணை தைரியம் புரிந்துகொண்டு ஓடுகின்ற நதியில் சொம்பினால் நீரை முகந்து சிரசில் ஊற்றிக்கொண்டேன். தேள் கொட்டியதுபோல் இருந்தது. உடம்பு அப்படியே மறத்துவிட்டது. உடம்பைக் கையால் தேய்த்துவிட்டு மறுபடியும் 3 சொம்பு நீரை விட்டுக்கொண்டு, துண்டால் துடைத்துக்கொண்டேன். இடையில் பட்டைக்கட்டிக்கொண்டு, மேலே ஒரு பட்டைச் சுற்றிக்கொண்டேன். புதிய போர்வையைப் போர்த்துக்கொண்டேன். சொம்பில் பூஜைக்குத் தண்ணீர் எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். பகுதி வழியில் நடுங்கி சொம்பு கீழே விழுந்துவிட்டது. இடையில் சுற்றிய பட்டு எங்கேயோ என்னிடம் சொல்லிககொள்ளாமல் போய்விட்டது. என்செய்வேன்? மறுபடியும் நதிக்குச்சென்றுசொம்பில் தண்ணீர் முகந்துகொண்டு, கூடாரத்துக்குள் நுழைந்து வழிபாடு ஆறுதலாகச் செய்தேன். உள்ளங் குழைந்து உருகி, "இறைவனே! இங்கெல்லாம் கொணர்ந்து உன்னை அலக்கழிக்கின்றேனே; என்னை மன்னிக்க வேணும். ஆறுமுகப் பெருங்கருணைத் தடங்கடலே! உன் அருள் கிட்டும் நாள் என்றோ?" என்று முறையிட்டுக்கொண்டேன்.

மாலை 6-மணிக்குப் பூஜை முடிந்தது. அதற்குமேல் தான் ஒரு குவளை தேத் தண்ணீர் பருகினேன். பலர் கூடி அஸ்வமேத யாகம் புரிவதுபோல் என் அன்பர்கள் அனைவரும் கூடி அஜகஜேந்திர வித்தைகள் புரிந்துஅடுப்பைஏற்றி மெல்லச் சமைத்தார்கள். இரவு 8-மணிக்கு உண்டோம். கூடாரத்துக்குள் ஒடுங்கிக்கொண்டோம். முன்னுள் இருந்த

அத்துணை நரக வேதனை இங்கில்லை. இது ஒரு சிறு "குட்டி நரகம்" போல் இருந்தது **சேஷ்நாக்குக்கும் பஞ்சதரணிக்கும் 8 மைல்.** பஞ்சதரணி 3-வது நாள் தங்குமிடம். பல மலைகளுக்கு இடையில் உள்ள ஒரு பள்ளத்தாக்கான இடம். நல்ல நிலவு. இன்று சதுர்த்தசி. ஆதலால் பால் போல் சந்திரகிரணம் எங்கும் ஒளி வீசிக்கொண்டிருந்தது. கூடாரங்களுக்குள் யாத்ரீகர்கள் கூட்டுக்குள் பறவைகள் ஒடுங்கியிருப்பதுபோல் இருந்தார்கள்.

அமர்நாத்

21—8—56 செவ்வாய்க்கிழமை (பவுர்ணமி). காலை 6-மணிக்கு எழுந்து, எல்லோரையும் குதிரையில் வருமாறு கூறிவிட்டு அடியேன் புறப்பட்டேன். சிரம்பானில் உள்ள என் நண்பர் திரு. N. தம்பித்துரையவர்கள் தந்த கைத்தடி ஒன்று துணையாக என்னுடன் வந்தது. அங்கிருந்து 4 மைல் சுவாமி குகை. வழி கடினமாக இருந்தது. நேட்டாக மலைகள்மீது ஏறியும் சில இடங்களில் இறங்கியும் இடுக்கலான பாதையில் இடர்ப்பட்டுக்கொண்டு சென்றேன்.

ஐஸ் பாலம்

கீழே நதி ஓடுகின்றது. மேலே ஐஸ் உறைந்து பாலமாக இருந்தது. அதன்மீதுநடந்தேன். இப்படியாக ஐஸ்மீதே 1 அல்லது $1\frac{1}{2}$ மைல் நடந்து சென்றேன்.

சுவாமியிருக்கின்ற குகை தெரிந்தது. அதன் அருகில் சென்று தங்கியிருந்தேன். என்னுடன் வந்த அன்பர்களும் பூஜைப் பெட்டியுடன் வந்தார்கள். சுவாமிமலைக்குக் குதிரையில் வரும்போது பேரம்பூர் திரு. திருநாவுக்கரசு முதலியார் என்பவர் குதிரையிலிருந்து விழுந்துவிட்டனர். மலைப் பக்கம் விழுந்தனர். மற்றப் பக்கமாக விழுந்தால் அதல பாதாளத்தில் உள்ள நதியில் போய் உருண்டு விழுந்திருப்பார். நல்ல காலம். மலைப் பக்கமாக விழுந்தனர். மெல்ல அவரை எடுத்து ஆயாசந் தீர்த்து அழைத்து வந்தார்கள். அயர்ந்து சோர்ந்திருந்தனர்.

இடையில் வந்த இடர்

ஐஸ் உருகித் தண்ணீராக ஓடிக்கொண்டிருந்தது. தண்ணீர் பளிங்கு போலவும் ஞானிகள் திருவுள்ளம் போலவும் தெளிவாக இருந்தது. அதில் மிக்க

அமரகங்கை

தைரியத்துடன் ஒரு முழுக்கு முழுகினேன். அப்போது இந்தியா, இலங்கை, மலாயாவில் உள்ள எல்லா அன்பர்களேயும் ஒருமுறை நினைத்துக் கொண்டேன்.

குதிரையிலிருந்து விழுந்த அன்பர் வேண்டாம் என்று தடுத்தும் கேளாமல் கங்கையில் முழுக வேண்டும் என்று பிடிவாதம் புரிந்தனர். தண்ணீரைத் தலையில் விட்டவுடனே ஒரு கை, ஒரு கால், இழுத்துக்கொண்டது. பட்சவாதம் போல் வாய் கோணிக்கொண்டது. சுவாதீனம் இழந்துவிட்டார். அவரை மெல்ல அழைத்துக் கொண்டு புறப்பட்டோம். ''எல்லோருக்கும் எல்லா நலன்களேயும் எம் பெருமானே! நீ வழங்குக'' என்று குளிர்ந்த அமரகங்கையில் முழுகி குளிர்ந்த உள்ளத்துடன் வேண்டிக்கொண்டேன்.

பின்னர் எனது அன்பர்கள் யாவரும் நீராடித் திருநீறு புனைந்துகோண்டார்கள். நாங்கள் திருவைந்தெழுத்தை இனிய பண்ணுடன் பாராயணம் புரிந்துகோண்டு ஏற்றமான பகுதியில் ஏறி சுவாமி குகையை அடைந்தோம்.

அங்கே ஆண்டவர் குளிர்ந்த ஐஸ் லிங்கமாகக் காட்சியளித்தார். பன்னிரண்டு நாள் படாத பாடுபட்டுச் சென்ற எனக்குக் கண்ணீர் பெருகியது. உள்ளம் உருகியது. கீழே ஐஸ்; நெடுநேரம் நிற்க முடியவில்லே. ஆண்டவன்மீது மலர் தூவி வணங்கினோம். கர்ப்பூரம் ஏற்றி ''அமர்நாத் ஆண்டவருக்கு ஜே'' என்று முழக்கம் புரிந்தோம். நிவேதனப் பொருள்களே நிவேதித்து வழிபட்டோம். யாத்

அமரநாதர்

ரீகர்களேப் பாதுகாக்கும் அரசாங்க அதிகாரிகள், '' ஐயா! நேரம் ஆகின்றது. பனி வந்து மூடிக் கொள்ளும்; சீக்கிரம் புறப்படுங்கள்'' என்று கூறி துரிதப்படுத்தினார்கள். அப்போது பகல் 2 மணி இருக்கும். அநேகமாக யாத்ரீகர்கள் யாவரும் புறப்பட்டுவிட்டார்கள். நாங்கள்தான் கடைசியாக வழிபட்டவர்கள். 12 நாள் சிரமப்பட்டுப் போன நாங்கள் 12 நிமிஷங்கூட சுவாமியிடம்

நிற்க முடியவில்லை. பலநாட்கள் பாடுபட்டுத் திருமணம் புரிகின்ற போது திருமாங்கல்ய தாரணம் புரிவது அரை விநாடிதானே.

வழியில் வந்த இடர்

உடனே நாங்கள் ஆண்டவரிடம் பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டோம். எல்லோரும் குதிரைமீது ஆரோகணம் புரிந்துகொண்டோம். இனி இறங்கவேண்டிய பகுதிதான் அதிகம். ஆதலால் குதிரை வேகமாகவே சென்றது. மாலை 3-30 மணிக்கு பஞ்சதரணி வந்தோம். இங்கு தங்கினால் ஒருநாள் வீணாகின்றது. ஆகவே சேஷ் நாக் போய்விடுவதென்று கருதினோம். கூடாரத்தைப் பிரித்துக்கொண்டு உடனடியாகப் புறப்பட்டோம். ஒருவருக்கும் உணவில்லை. வெறுந் தேத் தண்ணீர் ஒன்றே அன்று ஆகாரம். சுமார் 4 மணிக்குப் புறப்பட்டோம். 1 மைல் சென்றவுடன் மழை பொழியத் தொடங்கி விட்டது. மழைக் கோட்டு எங்கள் உடலை நனையாமல் காத்தது. கையும், காலும் நனையத்தானே செய்யும். ஏறக் குறைய 14000 அடி உயரத்தில் செல்லும் எங்களுக்குப் பொறுக்க முடியாத நடுக்கம்; குளிர். கை கால்கள் உணர்ச்சியற்றுவிட்டது. என்ன செய்வோம்? மிக்க வருத்தத்துடன் வேதனையுற்றுச் சென்றோம்.

வழிநெடுகச் சேறு. குதிரைக்குக் கால் வழுக்குகின்றது. அதனால் வழியல்லாத பகுதியில் மலைச்சரிவான இடத்தில் குதிரையை ஓட்டுகின்றான். எனக்கு மிகுந்த அச்சமாக இருந்தது. இரண்டொரு பகுதியில் இறங்கி நடந்தேன்.

6 மைல் சென்றோம். அப்போது மாலை 7-30 மணி. சற்று இருட்டிவிட்டது. ஒரு காடு முரடான மலையில் வழியல்லாத பகுதியில் என் குதிரை போய்க்கொண்டிருந்தது. எனக்குத் தோள், கை, கால் எல்லாம் ஒரே வலி. பட்டினி; இளைப்பு. சோர்ந்து போகின்ற தருணம். குதிரை தாவித் தாவிப் போகின்றபோது நான் குதிரையை என் வலிமையிருந்த அளவுக்குக் கெட்டியாகத்தான் பிடித்துக்கொண்டிருந்தேன்.



அமர்நாத்தில் ஆசிரியர் ஆத்மார்த்தபூஜை



ஸ்ரீநகர் பாணலிங்கம்

ஒரு பெரிய குண்டுக் கல்லைக் குதிரை தாவித் தாண்டியது. நான் பிடித்திருந்த பிடியை விட்டுவிட்டேன். கீழே விழுகின்றபோது முன்னே போய்க்கொண்டிருந்த குதிரைக்காரன் பூச்செண்டைத் தாங்கிக் கொள்வதுபோல் என்னைத் தாங்கிக்கொண்டான். அந்த இருட்டில் நான் விழுவதை அவன் எப்படி அறிந்தான்? விழுகின்ற அந்த நொடியில் எப்படித் தாங்கினன்? என்பது விளங்கவில்லை. அது திருவருளின் செயல்தான். அவன் தாங்கவில்லையானல் எனது வரலாறு வேறுவிதமாக முடிந்திருக்கும். ஏனெனில் மலைச்சரிவு யான் வழிபடும் முருகன் குதிரைக்காரனை யதிஷ்டித்துக் காப்பாற்றினன். இன்னும் சில காலம் இருந்து மக்கட்குச் சைவ நலங்களை உபதேசிக்க வேண்டும் என்று திருவருள் கருதியது போலும். எனக்குக் கைகால் நடுங்கிவிட்டது. "ஐயா! குதிரையே எனக்கு வேண்டாம். நடந்து வருகின்றேன்" என்று அரை மைல் நடந்தேன். சரிவான பகுதி; கற்குண்டுகள். நடக்கவும் முடியவில்லை. என் செய்வேன்? குதிரைக்காரன் எனக்குத் தைரியம் கூறி மறுபடியும் குதிரைமீது ஏற்றி, என்னை ஒரு கையில் பிடித்துக்கொண்டான். சிறிது தூரம் சென்றபின் சற்று தைரியம் பிறந்தது. மெல்லச் சென்றேன். 1½ மைல் கடந்து சேஷ்நாக் சேர்ந்தேன்.

சோர்க்கம் கிடைத்தது

அப்போது மணி 8-30 இருக்கும். எனக்கு முன்னே சென்ற மற்ற அன்பர்கள், யாத்ரீகர்கள் கூடாரம் அடித்திருக்கின்ற இடத்தில் இல்லாமல் சற்று ஒதுங்கிக் கோடியில் மழைக் கோட்டைக் கீழே போட்டு அதன் மீது நின்று கொண்டிருந்தார்கள். அந்த இடம் 13500 அடி உயரம். அதுதான் நரகம்போல் வேதனை தருகின்ற இடம்.

காலையிலே 4 மைல் நடந்தும், மாலையில் 12 மைல் குதிரைமீதும் நடந்தும், இடர்ப்பட்டு வந்தும் இளைத்திருக்கின்ற எனக்கு சேறு நிறைந்த அங்கு நிற்கவே முடியவில்லை. என் செய்வேன்? நடுங்குகின்றது. கை கால்கள் வலி தாங்க முடியவில்லை. நரகத்தின் நடுவில் நிற்பதுபோல் இருந்தது. இன்னும் எங்கள் கூடாரம் வந்து சேர 1½-மணி நேரம் ஆகும். எப்படி நிற்பது?

எனது தம்பி சச்சிதானந்தன், "அண்ணு! இப்படி வாருங்கள்" என்று என்னை மற்றவர்கள் அடித்திருக்கின்ற கூடாரங்களுக்கு இடையே அழைத்துச் சென்றனன். எங்கேயோ அழைத்துப் போகின்ருனே? என்று ஏங்கிக் கொண்டு சென்றேன்.

அதற்கிடையே ஒரு தகரம் அடித்த ஒரு இடம். அதில் ஈரமில்லாத தரையிருந்தது. அதற்குள் ஆண்களும் பெண்களுமாக அடைந்திருந்தார்கள். அதற்கிடையே சுவர் ஓரம் புழுதி நிறைந்த ஒரு சாண் இடம் காலியாக இருந்தது. என்னுடைய தம்பி, "மெல்லப் போய் அங்கிருந்து கொள்ளுங்கள்" என்ருன். எனக்கோ அவர்கள் பாஷை தெரியாது? கர்புர் என்று அவர்கள் என்மீது சீறிஞல் நான் என்ன செய்வேன்? "தம்பி! அவர்கள் முனிவு கொள்வார்களே அப்பா!" என்றேன். "சும்மா நீங்கள் போய் இருங்கள்" என்ருன். அஞ்சி அஞ்சி மெல்லப்போய் அப் புழுதியில் அமர்ந்தேன். அந்த வேளைக்கு அது சுவர்க்கம்போல் இருந்தது. ஏன்? உலர்ந்த தரையில் இருந்தேன். கடுங் குளிரால் ஒடுங்கிக்கொண்டிருந்த எனக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

"தம்பி! இப்போது சுவர்க்கம் கிடைத்து விட்டது. இனி நீ போய் ஒரு பக்கம் ஒடுங்கிக் கொள். உனக்குப் புறப்பட்டநாள் முதல் சுரம். அதனுல் நீ ஈரத்தில் இராதே" என்றேன்.

மெல்ல மழைக்கோட்டைக் கீழே போட்டுக் கொண்டு புழுதியில் அமர்ந்தேன். 1 மணி நேரம் பொறுத்து என் நண்பர் பாண்டுரங்கமும் தம்பியும் வந்து, "அண்ணு! பிஸ்கட்டு சாப்பிடுங்கள்" என்ருர்கள். அன்று முழுவதும் பட்டினி கிடந்த எனக்குப் பசி. இருப்பினும் குதிரையிலிருந்து கீழே விழுந்த போது முகவாய்க்கட்டையில் ஒரு சிறிது அடிபட்டது. அதனுல் வாயைத் திறந்து ஒன்றும் சாப்பிட முடியவில்லை. "அப்பா! எனக்கு ஒன்றும் வேண்டாம். சத்தம் போடாதீர்கள். இங்குள்ளவர்கள் சண்டைக்கு வரக்கூடும். இந்த சொர்க்கத்திற்கு ஆபத்து வரக்கூடாது. நீங்கள் சாப்பிடுங்கள். குதிரையிலிருந்து

விழுந்த திருநாவுக்கரசு முதலியார் ஒழுங்காக வந்து சேர்ந்தாரா? பலவீனமான நெல்லை சங்கரன் பிள்ளை எங்கே? அவர்கள் இருவர்கட்கும் ஆபத்து வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றேன்.

அவர்கள் இருவரையும் ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டோம். கட்டிலில் படுக்க வைத்திருக்கின்றோம். நீங்கள் அதுபற்றிக் கவலைப்பட வேண்டாம். கூடாரமும் வந்து விட்டது. எல்லோரும் கூடாரத்துக்குள் ஒருவாறு ஒடுங்கி யிருக்கின்றார்கள்'' என்றார்கள். ஒரு பெரிய கம்பளமும் தந்தார்கள். அதனைப் போர்த்துச்சாய்ந்துகொண்டேன். ஒரு பனியன்,கம்பளிசோட்டர், கம்பளிச் சட்டை,ஒரு போர்வை, பெரிய கம்பளம் இத்தனை சகிதத்துடன் இருந்தும் அதற்குள் எப்படியோ குளிர் நுழைந்து வந்து என்னை நடுங்க வைத்தது. இதயமும், தலையும், வாயும் படபட என்று அடித்துக் கொண்டது. என் செய்வேன்? உறக்கம் வர வில்லை. உடம்பில் இருந்த எல்லையில்லாத அசதி என்னமோ ஒருவாறு மயங்கி யிருந்தேன்.

22—8—56 புதன் காலையில் எழுந்து வெந்நீரில் குளித்து வழிபாடு செய்துவிட்டேன். தேத்தண்ணீர் குடித்தோம். இன்று காலையிலேயே புறப்பட்டு இருநாள் பிரயாணத்தை ஒருநாளில் போகவேணும் என்று திட்ட மிட்டோம். காலை 8-45 மணிக்குக் குதிரைமீது புறப்பட்டோம். குதிரையும் சற்று வேகமாகவே நடந்தது. அதிக சரிவான பகுதிகளில் குதிரையை விட்டு இறங்கி நடந்தோம். பகல் 12 மணிக்கு முதல் நாள் தங்கிய சந்தனவாரியில் அரைமணி நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டோம்.

பகல்காம் சேர்தல்

மறுபடியும் புறப்பட்டோம். நடுவே நடுவே மழையும் பொழிந்தது. வழி அதிக சேறு; வழுக்கல் அதிகம். குதிரை நொந்து சிரமப்பட்டு நடந்தது. எனக்கும் அச்சம் எப்படியோ அரும்பாடு பட்டு மாலை $4\frac{1}{4}$ மணிக்கு பகல்காம் வந்து சேர்ந்தோம். அங்கே ஒரு புண்ணிய சீலர் வருகின்ற யாத்ரீகர் கட்குப் பூரியும் அல்வாவும் தருமத்திற்கு வழங்கிக்கொண் டிருந்தார்.

நாங்கள் பகல்காம் போய் கூடாரம் அடித்துத் தாய்வீடு சென்ற புதல்வியைப் போன்று இளைப்பாறினோம். குதிரைக் காரர்கள் மனம் மகிழுமாறு இனும் தந்து குதிரைக்குச் சோளம் வாங்கி வைத்தோம். கூலிக்காரர்களுக்கும் இனும் தந்து மகிழ்வித்தோம்.

எனக்குக் கம்பளம் மழைக்கோட்டு முதலிய தந்து உபகரித்த போர்வீரர் சுப்ரமண்யம் என்பவர் வந்து என்னைச் சந்தித்தார். உடல்நலம் இன்மையால் 8 மைல் சென்று சந்தனவாரியுடன் திரும்பிவிட்டனராம். அவரிடம் அவர் தந்த உடைகளைத் திருப்பித் தந்து நன்றி கூறினேன்.

கோமளீஸ்வரன்பேட்டை ராஜு செட்டியாரும் ஒரு முறை குதிரையிலிருந்து விழுந்து தப்பித்துக் கொண்டார் என்று அறிந்து மகிழ்ந்தேன்.

அதற்குமேல் கைகால் கழுவி மாலைக் கடனைப் புரிந்து இளைப்பாறினோம். சமையல் புரிந்தனர். உணவு உட்கொண்டு படுத்தோம். அந்த இடம் பெருங்குளிர் இன்றி ஒரு அளவில் இருந்தது.

23—8—56 வியாழன் காலையில் எழுந்து நீராடி பூஜை செய்தோம். அவரவர்கள் வாடகைக்கு

ஸ்ரீநகர் சேருதல்

வாங்கிய உடைகளைத் திருப்பித் தந்து விட்டார்கள். சில அரிய பொருள்களைக் கொள்முதல் புரிந்தார்கள். பகல் உணவை முடித்துக் கொண்டோம்.

பகல் 3 மணிக்குப் பஸ் ஏறினோம். இப்போது வேறு வழியில் போகுமாறு செய்து, வழியில் பெரிய நீர் ஊற்று ஒன்றைக் கண்டோம். பூமியில் இருந்து நீர்ஊற்று நதிபோல் ஓடுகின்றது.

அச்சபால் தோட்டம் என்ற அழகான பூந்தோட்டத்தையும் பார்த்தோம். இரவு 9 மணிக்கு ஸ்ரீநகர் சேர்ந்தோம்.

அங்கு ஒரு படகு வீட்டை நாள் 1க்கு 22 ரூபாய் வாடகைக்குப் பேசி தங்கினோம். அந்தப் படகுவீட்டில் கட்டில், சோபா, கண்ணாடிகள், எலக்ட்ரிக் முதலிய எல்லா அனு

கூலங்களும் இருந்தன. நிலைக் கண்ணாடியில் என்னைப் பார்த்தேன். என்னை எனக்கு அடையாளந் தெரியவில்லை. முகம் என்னமோ போல் இருந்தது. பனியால் முகம் கருகியும், உணவு இன்றி உடம்பு வாடியும் இருந்தன. ஏதோ தேத்தண்ணீர் பருகிப் படுத்தோம். அப்போதுதான் எங்களுக்கு ஆறுதல் ஏற்பட்டது. நன்கு உறங்கினோம்.

24—8—56 வெள்ளி. ஜீல நதி சரித்திரப் பிரசித்தி பெற்றது. அழகிய நதி. கெம்பீரமாக ஓடிக் கொண்டிருந்தது. அதில் நீராடினோம். வழிபாடு செய்தோம். பிறகு சிகாரா படகுகளில் ஏறி நதியில் ஸ்ரீ நகர் முழுவதும் சுற்றிப் பார்த்தோம். இடையிடையே கோவில்கள், அசெம்பளி ஹால் முதலியவற்றைப் பார்த்தோம். அரசருடைய அரண்மனையையே இப்போது அசம்பளி ஹாலாக மாற்றியமைத்திருப்பதாகக் கூறினார்கள்.

ஆதிசங்கரர் ஒரு மலைமீது சிவாலயம் புதுக்கியுள்ளார். மர்லை மலைமீது 3மைல் ஏறினோம். 3அடி உயரமுள்ள அழகிய பாணலிங்கம். பளபள என்றிருக்கின்றது. சொல்ல முடியாத மகிழ்ச்சியடைந்தோம். பெருமானை வணங்கித் திரும்பினோம். இருள் சூழ்ந்து விட்டது. அதனால் தடுமாறிக் கொண்டு மெல்ல மெல்ல இறங்கி இருப்பிடம் சேர்ந்தோம்.

25—8—56 சனி காலையில் வழிபாடு செய்துவிட்டு கடைவீதிகளைச் சுற்றிப் பார்த்தோம். நியூமார்க்கட்டுக்குப் போய் சில பொருள்களைக் கொள்முதல் புரிந்தோம். மாலை ஒரு பஸ் போகவரப் பேசிக் கொண்டு 14 மைல் சென்று **கீர்பவானி** என்ற திருத்தலம் சென்றோம்.

கீர்பவானி

அது புலத்தியர் தவம் புரிந்த தலம். நல்ல சோலைகளுக்கு நடுவே அழகிய கோவில். சுற்றி நீர்த் தேக்கம். அதற்கிடையே கோயில். கோயிலுக்குள் சிறு குளம். அதற்கிடையே அம்பிகையின் சிறுகோயில். அதில் 1008 சிவலிங்கம் பொறித்த ஒரு லிங்கமும் அம்பிகையும் அமைந்திருந்தன. அந்த சிறுகுளத்தில் உள்ள நீர் சில சில சமயங்களில் நிறம் மாறுபடுகின்றதாம். அம்பிகை மிகவும் ஆற்றல் வாய்ந்த மூர்த்தி.

இலங்கையில் இருந்த அம்பிகை யென்றும், இராவணன் செய்த தீமையை நோக்கி அவனைவிடுத்து இங்கு வந்து விட்டதாகவும் தலபுராணம் கூறுகின்றது.

அம்பிகையை வழிபட்டுவிட்டுத் திரும்பினோம். 2, 3, மைல் வந்ததும் சிந்து நதியைக் கண்டோம். அது ஏழு பெரிய நதிகளில் ஒன்று. இது வரை நாங்கள் சிந்து நதியில் நீராடவில்லை. இந்த முறை சிந்துஸ்னானம் கிடைத்தது. சிந்து நதி மேற்கே நோக்கி ஓடுவது. அந்த நேரம் மாலை 6 மணி. மேற்கே ஓடும் நதத்தில் மாலையில் முழுகுவது சிறப்பு. எனவே மேற் கடலில் சூரியன் முழுகும்போது நாங்களும் மேல் திசையை நோக்கிச் செல்லும் சிந்துவில் முழுகி அநுஷ்டானம் புரிந்தோம்.

சிந்து நதி

வரும் வழியில் நேரு பார்க்கைப் பார்த்தோம். மின்சார விளக்கு நிரம்ப ஒளி செய்துகொண்டிருந்தது. ஒரு பெரிய ஏரிக்கு நடுவே அந்தப் பூங்கா அமைந்துளது. இரவு 9 மணிக்கு இருப்பிடம் சேர்ந்தோம்.

26—9—56 ஞாயிறு பகல் 1 மணிக்குப் புறப்பட்டு தனி பஸ் ஒன்று எடுத்துக்கொண்டு **அர்வான்** நீர்த்தேக்கத்தைப் பார்த்தோம். வழியில் **ஷாலிமார்** என்ற நந்தவனத்தையும் பார்த்தோம். அதில் ஒரு நீர் ஊற்றும் அழகிய பூமரங்களும், ஆப்பிள்பழம் நிறைந்த மரங்களும் அழகாக இருந்தன.

மீளவும் **நிஷாத்பாக்** என்ற பூந்தோட்டத்தையும் பார்த்தோம். அதிலும் நீர் ஊற்றும், கனிமரங்களும் மலர்ச் செடிகளும் நிறைந்திருந்தன. அதனையும் சுற்றிப் பார்த்து விட்டு, **சேஷ்மஹசஹபல்** என்ற இடத்தையும் பார்த்து விட்டு இருப்பிடம் சேர்ந்தோம்.

27—8—56 திங்கள் காலை வழிபாடு செய்துவிட்டு காலை 8½ மணி பஸ்ஸில் புறப்பட்டோம். 30, 40, மைல் தரையில் பஸ் ஓடி மலைமீது சென்றது. பதினாயிரம் அடி மலைமீது ஏறியது. ஒரு இடத்தில் நிற்க வேண்டி வந்தது. அங்கே முகில் வந்து சூழ்ந்து கொண்டது. அருகில் உள்ள ஆள் தெரியா வண்ணம் மறைத்துக்கொண்டது குளிரும் நடுக்கமும் வந்து இடர்ப்பட்டோம். பின்னர் பஸ்ஸில் ஏறி 203

மைல் பிரயாணம் புரிந்து இரவு 9 மணிக்கு ஜம்மு என்ற ஊரையடைந்தோம். அது பெரிய நகர். அங்கு ஸ்ரீராம மந்திரத்தில் படுத்து இளைப்பாறினோம்.

28—8—56 செவ்வாய் காலையில் மழை வந்துவிட்டது. பஸ் 7 மணிக்குப் புறப்பட்டது. 8-30 மணிக்குத் துரோண நதியில் பெருவெள்ளம். முன்னே நாங்கள் தடைபட்ட நதிதான் அது. அங்கே இக்கரையிலும் அக்கரையிலும் பஸ்களும் லாரிகளும் வரிசையாக நின்று தவம் புரியலாயின. மணி 1 ஆயிற்று. வெள்ளம் வடியவில்லை. குளிக்கவோ வழிபாடு செய்யவோ அநுகூலம் இல்லை.. வேறு எங்கும் தெளிந்த நீர் கிடைக்கவில்லை. வெள்ளம் குழம்பாக ஓடிக் கொண்டிருந்தது. தீயவர் உள்ளம் போன்ற குழப்பம். ஒரு புறத்தில் ஒதுங்கியுள்ள நீரில் முழுகி நதிக்கரையில் பூஜையை முடித்தேன். அதற்குள் சுப்ரமண்யஐயர் சமையல் செய்து முடித்தார். ரசமும் அன்னமும் உண்டு பசியாறினோம்.

மாலை 4½ மணிக்குச் சற்று வெள்ளம் வடிந்தது. எங்கள் பஸ் புறப்பட்டது. மாலை 6-45 மணிக்குப் பதான்கோட் என்ற புகைவண்டி நிலயத்தை யடைந்தோம்.

புகைவண்டி நிலயத்தைப் பார்த்தவுடன் தாய் முகம் பார்த்த சேய் போல் மகிழ்ந்தோம். தேநீர் அருந்தி இளைப் பாறினோம். ஜ்வாலாமுகி என்ற தலம் போக நினைத்தேன். 80 மைல் மலைமீது போகும் சிரமமான வழியென்று கருதி அந்த எண்ணத்தைத் தவிர்த்துவிட்டேன். அன்று இரவு புகைவண்டி நிலயத்தில் படுத்து உறங்கினோம்.

விடியற்காலை 2 மணிக்கே எழுந்து நீராடி 4-30 மணிக்குள் பூஜையை முடித்துக் கொண்டேன். விடியற்காலை 5 மணிக்கு ரயிலில் புறப்பட்டோம்.

29—8—56 புதன் அன்று பகல் முழுவதும் ரயிலில் பிரயாணம் புரிந்து இரவு 8-30 மணிக்கு புது டெல்லி சேர்ந்தோம். புதுடெல்லி புகை வண்டி நிலயத்தில் முதல் வகுப்புப் பிரயாணிகள் தங்குமிடத்தில் தங்கினோம்.

30—8—56 வியாழன் காலையில் நீராடி வழிபாடு செய்தேன். ஒரு கார் வைத்துக் கொண்டு குதுப்மினார் சென்று பார்த்துத் திரும்பினோம்,

மாலை 5 மணிக்குப் புறப்படும் கிராண்ட் ட்ரங்க் எக்ஸ்பிரசில் முதல் வகுப்பு வண்டியில் ஏறினேன்.

31—8—56 வெள்ளி. இன்று ரயிலிலேயே நீராடி பூஜை செய்தேன்.

1—9—56 சனி. விடியற்காலை விஜயவாடா நிலையத்தில் முழுகி ரயிலில் பூஜை செய்தேன்.

பகல் 1 மணிக்குச் சென்னை சேர்ந்தேன். அன்பர்கள் பலர் வந்து மலர்மாலை சூட்டி வரவேற்றார்கள்.

இவ்வாறு எங்கள் அமர்நாத் யாத்திரை முருகன் கருணையால் இனிது முடிவு பெற்றது.

முடிவுரை

சென்னையிலிருந்து பதான்கோட்	(ரயில்)	1705 மைல்
பதான்கோட்டிலிருந்து ஸ்ரீநகர்	(பஸ்)	257 மைல்
ஸ்ரீநகரிலிருந்து பகல்காம்	(பஸ்)	67 மைல்
பகல்காம்—அமர்நாத் குகை	(நடை)	28 மைல்

எல்லோருக்கும் தந்தை சிவபெருமான்; தாய் உமா தேவி. "மாதாமே பார்வதிதேவி, பிதா தேவோ சங்கர:" என்பர் ஆதிசங்கரர். ஆகவே நாம் எல்லோரும் சகோதரர்கள். ஒரு குடும்பத்தவர்கள். பாகம் பிரியாத சகோதரர்கள்.

பாகப் பிரிவினையாகாத குடும்பத்தில் ஒரு பிள்ளை தனது சமர்த்தினால் பொருளையீட்டினால், சும்மா இருந்த மற்ற சகோதரர்கட்கும் அப்பொருளில் பங்கு உண்டுதானே.

அதுபோல் அடியேன் மலையில் பனியில் குளிரில் மழையில் அருந்துயரம் அடைந்து சென்று அமரகங்கையில் முழுகி அமரநாத் ஈசனை வணங்கி அருளையீட்டினேன். அந்த அருளிலும் அங்கு வராத இந்தியா, இலங்கை, மலாயா வாழும் அன்பர்கட்கும் பங்குஉண்டு. பொருளுக்கு உள்ள நியாயம் அருளுக்கும் உண்டுதானே. ஆகவே எல்லோரும் அமரநாதர் அருளையடைக. எங்கும் இன்பம் விளைக. பண்பாடு ஓங்குக. திருவருள் எல்லோருக்கும் துணைபுரிக. அன்பு வளர்க.

